# தமிழரசு

16-6-1990 ரூ. 1





சென்னையில் நடைபெற்ற 36-ஆவது கைத்தறி விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கைத்தறி அரங்குகளைப் பார்வையிட்டார். மாண்புமிகு கைத்தறி - நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு எஸ். தங்கவேலு அவர்கள் உடன் உள்ளார். (17.5.'90)

# இந்த இதழில்...


முத்தமிழ் அறிஞர் முதல்வர் கலைஞர்!

இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா உரை ... 2

முதல்வர் கலைஞர் பிறந்த நாள் செய்தி ... 7

மாண்புமிகு முதல்வர் கலைஞருக்கு மாமன்னன் இராசராசன் படைப்பிலக்கியப் பரிசு ... 9

ஏழை எளியோருக்கு நில உதவி ... 15

கவியோகி சுத்தானந்த பாரதியார் ... 17

நெஞ்சினிக்கும் மெய்க் கவிஞர் ... 23

நெசவுத்தொழில் வளர்ப்போம் ... 24

நிலம், நீர்வளம் காப்போம்! ... 29

முதல்வர் கலைஞர் பிறந்தநாள் நிகழ்ச்சிகள் ... 33

வளரும் வேளாண்மை ... 39

மாணவர் பக்கம் ... 40

பெரியார் மாவட்ட விவசாயிகளுக்கு அரசு மானியம் ... 45

மானாமதுரையில் மட்பாண்டத் தொழில் வளர்ச்சி ... 47



THANJAVUR
9 JUL 1990
LIBRARY SOTY.



## தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

ஆனித் திங்கள் - 2

மலர்: 20 இதழ்: 24

16-6-1990


# வாழ்க பல்லாண்டு!

## மாண்புமிகு மத்திய நிதியமைச்சர்
## டாக்டர் மதுதண்டவதே



1975-ஆம் ஆண்டு நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டது. எங்களில் பலர் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டோம். விடுதலைப் போராட்ட வீரர்கள் பலர், தலை மறைவு வாழ்க்கை நடத்தினார்கள். ஜெயப்பிரகாஷ் நாராயணனும் சிறையில் அடைக்கப்பட்டுக் கிடந்தார். நாடெங்கும் பாலைவனமாக இருந்த நேரத்தில் மனதுக்கு இதம் தருகின்ற பசுஞ்சோலையாக இங்கே கலைஞருடைய ஆட்சி காணப்பட்டது. நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டபோது தமிழகத்தில் கலைஞர் முதலமைச்சராக இருந்தார்.

அப்போது பிரதமராக இருந்த இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பைக் கேட்டார். எதிர்ப்பைக் கைவிட்டு, மத்திய அரசுக்கு ஒத்துழைப்புத் தருமாறு கோரினார்

அப்பொழுது கலைஞர் ஒருவர்தான்- 'நெருக்கடி நிலையை ரத்து செய்து விட்டு, தேசத் தலைவர்களை விடுதலை செய்தால்தான் எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பைத் தரமுடியும்' என்று துணிச்சலோடு சொன்னவர்.


நெருக்கடி நிலையை எதிர்த்த அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ஆட்சி அதிகாரத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால், அவரைச் சிறைக்குள், சிறைக் கம்பிகளுக்குள் அந்த ஆட்சியால் அடைத்திருக்கமுடியும். ஒரு மதுதண்டவதேயைத்தான் அவர்களால் நெருங்க முடிந்ததே தவிர, கலைஞரைத் தொடமுடியவில்லை. கலைஞரும் சுதந்திரமாகவே உலவினார்.

(கலைவாணர் அரங்கத்தில் 2.6.90 அன்று பேசியதிலிருந்து.)

1977 ஆம் ஆண்டு ஜனதா ஆட்சி அமைந்த போது, அந்த ஆட்சியை அமைப்பதற்கு அடித்தளமாக இருந்த நிலம்தான் தமிழ்நாடு என்பதைக் கூறுவதில் பெருமையடைகிறேன்.

நண்பர்களே! நான் ஒன்றை உங்களுக்குக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். கலைஞர் அவர்கள் தி.மு.கழகத்தின் தலைவர் மட்டுமல்ல; தமிழ்நாட்டின் தலைவர் மட்டுமல்ல; அவர் தேசிய முன்னணியின் தலைவர். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை ஆட்சி நடத்துகின்ற தேசிய முன்னணியின் தலைவர்.

நண்பர்களே! நான் ஜனதாதளத்தின் சார்பில், தேசிய முன்னணியின் சார்பில், இந்தியாவை ஆண்டு கொண்டிருக்கும் தேசிய முன்னணியின் சார்பில் கலைஞர் அவர்கள் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன். குறைந்தபட்சம் நூறாண்டுகள்- அதிகபட்சம் எவ்வளவு ஆண்டுகள் ஆனாலும் சரி; வாழ்க! வாழ்க! என்று வாழ்த்துகிறேன்.



# முத்தமிழ் அறிஞர் கலைஞர்!

மேதகு இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர்

## டாக்டர் சங்கர் தயாள் சர்மா புகழாரம்

(25.5.1990-ல் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.)

**பா**சம் பொழியும் உள்ளமும் விருந்தோம்பற் பண்பும்மிக்க தமிழ்நாட்டு மக்களிடையே இருப்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். அற்புதமான இம் மாநிலத்தில், வரலாற்றுப் பெருமைமிக்க இந்நகருக்கு வருகைதந்து இந்த முக்கியமான விழாவில் கலந்துகொள்வ தற்கு வாய்ப்பளித்த தமிழ்நாட்டுக் கல்வி அமைச்சருக்கும், தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கும் என் நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவின் இருபதாம் நூற்றாண்டின் இணையிலா இரு பெரும் தலைவர் களான, திரு. காமராஜ், திரு. அண்ணாதுரை ஆகி யோரை இம்மாநிலம் முதலமைச்சர்களாகப் பெறுகின்ற நல்வாய்ப்பினைப் பெற்றிருந்தது. மிக எளிய குடும்பத் தைச் சேர்ந்த இவ்விரு பெருந்தலைவர்களும் தொண்டிலும் தியாகத்திலும் உன்னதமானவர்களாய் மிக உயர்ந்து விளங்கினர். அவர்கள் தமக்கெனச் சொத்து அல்லது தந்தை வழி உடைமை ஏதுமின்றி இவ்வுலகத்தில் பிறந் தனர். அதே போன்று அவர்கள் இவ்வுலகை விட்டுச் செல்லும் போதும் எந்தவிதமான சொத்துக்களையோ உடைமைகளையோ தங்களுக்கெனச்சேர்த்துக்கொண்டோ ரல்லர்.

இந்த நூற்றாண்டில், நம்முடைய இந்நாள் முதலமைச் சரின் அரசியல் ஆசான் திரு. சி.என். அண்ணாதுரை அவர்களின் நோக்கும் செயலும் தன்னிகரற்றவை; என் னுடைய கருத்துப்படி, திரு. அண்ணாதுரையின் மிக முக்கியமான சாதனை, ஒவ்வொரு சாதாரண மனிதனும் எளிதில் பின்பற்றக்கூடியதும் இந்நாட்டின் ஒவ்வொரு குடிமகனின் முப்பெரும் பொறுப்புமான **கடமை, கண்ணியம், கட்டுப்பாடு** என்கிற ''ஒழுக்கநெறியைத்'' தம்முடைய வாழ்நாள் முழுவதும் வலியுறுத்தியதாகும், அவருடைய ''சுய மரியாதைக்கும், சமூக சீர்திருத்தத்திற்கும்'' ''**கடமை, கண்ணியம், கட்டுப்பாடு**'' என்கிற மூன்று சொற்களும் தாரக மந்திரங்களாகும்!

இரண்டாவதாக, திரு. அண்ணாதுரை அவர்களும், அவரைப் பின்பற்றியவர்களும், மக்களுடன் தொடர்பு கொள்ளவும் அவர்களிடம் அரசியல் விழிப்புணர்ச்சியை உருவாக்கவும்- மக்கள் தொடர்புச் சாதனங்களான, திரைப்படங்களையும், செய்தித்தாள்களையும் பயன் படுத்தி இன்றைய நாளில் அரிய சாதனைகளைப் படைத்த வர்கள் ஆவர்.

—மூன்றாவதாக, திரு. அண்ணாதுரை அவர்கள் செய்த சமூக சீர்திருத்தம், நம்நாட்டின் சீர்மிகு சான்றோர் களான சுவாமி விவேகானந்தர், சுவாமி தயானந்த சரஸ்வதி ஆகியோரின் கனவுகளை நனவாக்கியுள்ளது. குறிப்பாகப் பெண் விடுதலை, சமுதாயத்தில் மிக நலிந்த நிலையிலுள்ளோர்- அதிலும் குறிப்பாக ஆதி-திராவிடர், பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியோர்களின் முன்னேற்றம் பற்றிய அப்பெரியோர்கள் கண்ட கனவு களை நனவாக்கிய பெருமை பேரறிஞர் அண்ணாவையே சாரும். அண்ணாவின் அரும் பணிகளில் குறிப்பிடத் தக்கது- ''சுயமரியாதைத் திருமணத்தைச்'' சட்டப்படி செயல் திறனுடையதாகச் செய்து, திருமணமான ஒவ்வொரு பெண்ணுக்கும் பாதுகாப்புத் தந்து, கணவன் மனைவிக்கு ஆற்ற வேண்டிய சமுதாயக் கடமைகளை உணர்த்தியதை நான் இங்கு சுட்டிக் காட்ட விழைகிறேன்.

இந்தியா விடுதலையடைந்த கடந்த 40 ஆண்டுக் காலத்தில், ஏனைய பல மாநிலங்களை விட, தமிழ் நாட்டில் ஏழை எளிய மக்களிடையே நிகழ்ந்த விவாகரத்து கணவனால் கைவிடப்பட்ட மனைவி, மணமுறிவினால் சிதறுண்டு போன குடும்பங்கள் போன்றவை கணிசமான அளவு குறைந்துள்ளன. இதுகுறித்து ஆய்வு ஒன்று நடத்து வது மிகவும் அவசியமாகும். இது சமூக சீர்திருத்த இயக் கத்தின் மகத்தான சாதனைகளில் ஒன்றாக எனக்குத் தோன்றுகின்றது. இந்த சமூக சீர்திருத்த உணர்வு தமிழகத் திலுள்ள தலைவர் இதயத்திலும் குடி கொண்டிருப்பதால் தான், இத்தகைய மாற்றங்கள் நடைபெறுவதற்கான சூழல்கள் உருவாயின. உலகத்தில் இரண்டே சாதிகள் ''கொடுப்போர்'', ''கொள்வோர்'' என்று மட்டும் இருப் பதாக ஒரு பண்டைத் தமிழ்ப் பழமொழி கூறுகின்றது. தமிழகத்தின் மாபெரும் தலைவர்களான காமராஜர், அண்ணா ஆகியோர் எப்போதுமே இத்தகைய கொடுப்போர் வரிசையிலேயே இருந்திருக்கின்றனர். தமிழக மக்கள் நலனிற்காக அவர்கள் அனைத்தையும் நல்கினர். அவர்கள் தங்களுடைய வாழ்நாட்களையும் உழைப்பையும் சமுதாய மேம்பாட்டிற்காக அர்ப்பணித்தனர்.

தம் வாழ்நாள் முழுவதற்கும் பயன்தரத்தக்க மகத்தான பாடத்தையும் தமிழ்நாடு எனக்குக் கற்றுத் தந்திருக்கின்றது. உலகத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் உயர்ந்தவராக அல்லது வல்லவராக, மாபெரும் வீரனாக அல்லது தீர னாக அல்லது சிறந்த இலக்கியவாதியாக அல்லது மிகச் சிறந்த மேதையாக இருக்க வேண்டுமென்று கட்டாய

மில்லை. ஆனால், ஒவ்வொருவரும் நல்லவராகவும், அன்பு செலுத்துபவராகவும், பாசம் காட்டுபவராகவும் இருக்க முடியும்.

இவ்வகையில் தமிழக மகளிரே சமய பேதங்கள் அற்றவராக, பரந்த மனப்பான்மையுடையவராக, பெருந் தன்மை கொண்டவராக, விருந்தோம்பும் பண்பு மிக்க வராக விளங்குகின்றனர் என்பதே என் கருத்தாகும். உலகத்தில் 'ஆண்', 'பெண்' என்று இரண்டே சாதிகள் உள்ளதாக மற்றொரு தமிழ்ப் பழமொழி கூறுகின்றது. தமிழக மகளிர் இப்பழமொழியினை, அவர்களுடைய வாழ்க்கையில் மெய்ப்பித்துக் காட்டியுள்ளனர். தமிழக மகளிரிடையே இவ்வாறு திகழ்ந்த தலைவியரைப் பட்டிய லிடுவோமேயானால், அது தில்லையாடி வள்ளியம்மை, இசையரசி எம்.எஸ். சுப்புலட்சுமி, நாட்டிய வகைகளின் முன்னோடியான பாலசரஸ்வதி, இந்திய தேசிய இராணு வத்தில் நேதாஜி அவர்களுடன் சேர்ந்த கேப்டன் இலட்சுமி என முடிவில்லாமல் நீண்டு கொண்டே போகும். மண வாழ்க்கையில் ஈடுபட்டு சமூகத் தொண்டையும் மேற் கொண்டதிலிருந்து அவர்களுடைய சமயச் சார்பற்ற தன்மை தெற்றெனப் புலனாகும்.

தமிழ்நாட்டிற்கு, குறிப்பாகத் தஞ்சாவூருக்கு—நோபல் பரிசு பெற்ற சர்.சி.வி. ராமன், டாக்டர் சந்திரசேகர் ஆகிய இரு மேதைகளை உலகிற்கு அளித்த பெருமை யுண்டு. உலகின் தலைசிறந்த கணித மேதைகளில் ஒரு வரும், மேனாட்டு அறிவியலாளரால் இன்னும் ஆய்வு செய்யப்பட்டு வரும் படைப்புகளின் தந்தையும், மிகவும் எளிய நிலையிலிருந்து உயர்ந்தவரும், மெட்ரிகுலேஷன் தகுதி மட்டுமே பெற்றவரும், இந்நூற்றாண்டின் ஒப்புயர் வற்ற ''அதிசய ஆற்றல்'' கொண்டவர் எனப்பேராசிரியர் ஹார்டி அவர்களால் பாராட்டப்பட்டவருமான திரு. சீனிவாசராமானுசம் பிறந்ததும் இந்தத் தஞ்சைத் தரணியில்தான். நமது பெருமதிப்பிற்குரிய குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் அவர்களும் தஞ்சை நமக்குத் தந்த பெருஞ் செல்வமே.

இத்தஞ்சை மண் தமிழ்நாட்டிற்கு, ஏன்- இந்தியா விற்கே திரு. மு. கருணாநிதி அவர்களைத் தந்துள்ள பெருமைக்கு இப்பெருந்திரளான மக்கள் வெள்ளமே சாட்சியாகும். தமிழ்நாட்டின் உயர்தனிச் செம்மொழி யான தமிழ்மொழி எப்பொழுதுமே எனது மனதை ஈர்த்து வந்துள்ளது. அதே போன்றுதான் இப்பெருமண்ணின் தமிழ்ப்பண்பாடும் என்னைப் பெரிதும் கவர்ந்துள்ளது.


உலகில், இன்றும் வழங்கி வரும் மொழிகளில் தமிழ் மிகவும் தொன்மையான மொழியாகும். தமிழ் இலக்கியம் பொறுமை, மனிதநேயம், சகோதரத்துவம்ஆகிய உணர்வு களை எல்லாக் காலங்களிலும் உலகமக்களுக்கு உரைத்து வந் துள்ளது. சங்க இலக்கியங்களிலேயே மிகவும் சிறப்பிற் குரியவை-சங்க இலக்கிய நூல்களில் மிகவும் தலை சிறந்த வைகளான 'அகநானூறும்' 'புறநானூறும்' ஆகிய நூல் களாகும். வீரத்தையும் காதலையும் விரிவாக விளம்பு கின்றன அவை. தமிழ்த்தெய்வங்களுள் ''கார்த்திகேயன்'' அல்லது 'சுப்பிரமணியர்' அல்லது 'முருகன்' மிகவும் விரும்பி வழிபடுகின்ற தெய்வமாகும். இக்கடவுளின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் கதை, தமிழர்களின் உளவிய லோடு இரண்டறக் கலந்துவிட்டது. வீரம், காதல் ஆகிய உணர்வுகளுக்குச் சான்றாக விளங்கும் இவ்விறைவனுக்கு ஆறு முக்கியமான வழிபாட்டுத் திருத்தலங்கள் தமிழ் நாட்டில் உள்ளன. அத்தலங்கள் தமிழில் ''ஆறுபடை வீடுகள்'' என்று வழங்கப்படுகின்றன. என் இச்சுற்றுப் பயணத்தின் போது, மேற்சொன்ன திருத்தலங்களுள் ஒன்றிற்குச் சென்று வழிபடவிருக்கிறேன்.

தமிழ்நாட்டிற்கே உரிய பண்புகளான சகிப்புத்தன்மை, மதச் சார்பின்மை ஆகியவற்றிற்கு எடுத்துக்காட்டாக, தமிழ் இலக்கியம், பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்கள் எவராக இருந்தாலும், அவர்கள் எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், எந்த வகுப்பைச் சேர்ந்தவராயிருந்தாலும், அவர்களை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம் என்ற பின்னணியை நான் ஈண்டுக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

சிதம்பரத்தில் வாழ்ந்தவரும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவருமான நாட்டுப்புறப் பாடல்களில் போற்றப் படும் நந்தனார் என்னும் பெருமகனாரைப் பற்றிக் கேள்விப்படாதவர் யாரேனும் உண்டோ? கோயிலுக்கு வெளியில் நின்று வழிபடும்பொழுது, இறைவனை மறைத்துக் கொண்டிருந்த ஒரே கல்லில் செதுக்கப்பட்டி ருந்த நந்தி, வியக்கத்தக்க வகையில் ஒதுங்கி வழிவிட்ட தாகக் கூறப்படுகின்றது. இந்திய வரலாற்றிலேயே தாழ்த் தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவர் ஆலயத்திற்குள் நுழைந்த ''ஆலயப்பிரவேச'' முதல் நிகழ்ச்சி இதுவேயாகும்!

இந்தியாவிலேயே வழிபாடு செய்த தமிழ்நாட்டில், வைணவத் தொண்டர்களாகிய ஆழ்வார்கள், சைவசமயத் தொண்டர்களாகிய நாயன்மார்கள் ஆகியோரிடையே பல்வேறு சாதியைச் சேர்ந்தவர்கள், பல்வேறு பகுதியைச் சேர்ந்தவர்கள், பல்வேறு பின்னணியை உடையவர்கள், உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள், செல்வந்தவர்கள், வறிய வர்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரும் இருந்தனர்.

**மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் 67-வது பிறந்த நாள் விழா வில் - தமிழக அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறையினர் சார்பில் ரூ.27,027/- முதலமைச்சர் நிவாரண நிதிக்கு வழங்கப்பட்டது. மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்கள் தலைமையில், செய்தி-சுற்றுலாத்துறைச் செயலாளர் திருமதி ஜெயந்தி இ.ஆ.ப., செய்தித்துறை இயக்குநர் திரு கி. இராஜமாணிக்கம் இ.ஆ.ப., மற்றும் செய்தி-மக்கள் தொடர்புத் துறை அதிகாரிகள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மாலையணிவித்து இந்தப் பெருநிதி யினை அளித்தார்கள்.**



## பாவேந்தர் நூற்றாண்டு:



**இந்த உலகினில் யாரும்- நல்
இன்ப மென்னும்கரை ஏறல்
சந்ததமும் தொழி லாளர் - புயம்
தரும் துணையன்றி வேறே
எந்த விதத்திலும் இல்லை!**

தமிழர்களின் சகிப்புத்தன்மைக்கும் பரந்தமனப்பான்மைக்கும் இது மிகச் சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும்.

இவர்களைத் தவிர, பெண் துறவி ஒருவரும் இருந்தார். தெய்வமாக்கப்பட்டு, பல ஆலயங்களில் சிலையாக வைக்கப்பட்டுள்ள பெண்மணி அநேகமாக வரலாற்றில் இவர் மட்டுமே ஆவார். தமிழகம் மகளிருக்குச் சிறப்பிடம் அளித்திருந்தது என்பதற்கு இது மேலும் ஒரு சான்றாகும். ''ஆண்டாள்'' அல்லது ''கோதை நாயகி''என்பவரைப் பற்றித்தான் நான் இங்கே குறிப்பிடுகிறேன்.

தமிழ் இலக்கியத்தில்- குறிப்பாக, சங்க இலக்கியத்திற்குப் புத்தமதம் ,சமண மதம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் ஆற்றிய பணி அளப்பரியதாகும். கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர்களும் இராபர்ட் டி நொபிலி முதல், கால்டுவெல் வரையிலான கிறிஸ்துவ மதகுருமார்கள் அரிய பல நூல்களைத் தமிழில் படைத்துள்ளனர். மொழி பெயர்ப்புப் பணியின் மூலமும் தமிழ் மொழிக்குத் தொண்டுபுரிந்துள்ளனர். தூய தோமையர் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் சென்னைக்கு வந்தார். ''வீரமாமுனிவர்''என்று தம்பெயரை மாற்றியமைத்துக் கொண்ட ''பெஸ்கி'', ஏசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை ''தேம்பாவணி'' என்ற பெயரில் தமிழில் காவியமாக இயற்றியுள்ளார்.

பெரும் புகழ்வாய்ந்த அறநூலாக இலக்கியங்களுக்கு மணிமகுடமாக விளங்கும் திருக்குறள், உலகில் இதுகாறும் இய்ற்றப்பட்டுள்ள மிகச்சிறிய இனிய வரிப் பாக்களில் மகத்தானதாக –இயன்றவரை மிகவும் குறைவான சொற்களில், காலத்தை வென்றதாக, நாடு, சமய வரையறைகளுக்கு அப்பாற்பட்டதாக , மனிதகுலத்திற்கு இறவாப் புகழ்வாய்ந்த அறநெறி கூறுவதாக– அமைந்துள்ளது.

தமிழ் மொழியின் வளர்ச்சியிலும் அதனை உலகம் முழுவதும் பரவச் செய்யும் முயற்சியிலும் இத்தமிழ்ப் பல்கலைக் கழகம் முழு மூச்சுடன் ஈடுபட்டுள்ளது பெரிதும் வரவேற்கத்தக்கதாக- நெஞ்சை நெகிழ வைப்பதாக இருக்கிறது. மகாகவி சுப்பிரமணிய பாரதியார் குறிப்பிட்டுள்ளதுபோல்,

''தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்''.

தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றைப் பரவச் செய்ய, மொழிபெயர்ப்புகளே மிகவும் வலிமை வாய்ந்த கருவிகளாகும். வெளிநாடுகளில் குடியேறியுள்ளவர்களிலும், கடல்கடந்து சென்றுள்ள இந்தியர்களிலும் தமிழர்களே அதிக எண்ணிக்கையினராவார்கள். இந்நிலை இந்நூற்றாண்டில் மட்டுமின்றி மிகப் பழங்காலத்தொட்டே தொடர்ந்து வந்திருக்கிறது.

கடல்கடந்த நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழர்கள், தமிழ்மொழி , இலக்கியம் ஆகியவற்றின் சிறப்புகளை வெளிப்படுத்தி, எடுத்துரைத்துப் பரப்பிடும் பணியில் ஈடுபடுவோராக விளங்கலாம். வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களிடையே தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றைப் பரப்பிட வேண்டும் என்ற பொறுப்புணர்வைத் தூண்டும் வகையில் அஞ்சல் வழிக்கல்வி, காணொலி சாதனங்கள், பத்திரிகைத்துறை ஆகியவற்றை முழு அளவில் பயன்படுத்திக் கொள்ள அனைத்து முயற்சிகளையும், நம் தமிழ்ப் பல்கலைக் கழகம் மேற்கொள்ள வேண்டும்.

பண்டைய இந்தியாவின் 18-வது கல்வி முறைகளில் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படும் ஆயுர்வேத மருத்துவத் துறையில்- சித்த, ஆயுர்வேத மருத்துவ முறைகள் பற்றிய எண்ணற்ற சுவடிகளையும், ஆவணங்களையும், தமிழ்நாடு பாதுகாத்து வைத்திருக்கிறது. இந்த மருத்துவத்துறைகளில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தமிழ்நாட்டில் இன்றும் உள்ளன. ஒன்றோடொன்று இணைத்துப் பார்க்கும் முழுமையான மருத்துவக் கோட்பாடு தமிழ்நாட்டு மண்ணிற்கு நெருங்கிய உறவுடையதாக விளங்குகிறது.

'இயல்' (Literature) 'இசை' (Music) 'நாடகம்' (Drama) ஆகிய முப்பெரும் துறைகளைத் தன்னகத்தே கொண்டு ''முத்தமிழாக'' முப்பரிமாண வீச்சுடன் பரிணாம வளர்ச்சிபெற்றுள்ளதே தமிழ்மொழியின் பெருமைக்குச் சான்று பகரும்.

மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் இலக்கிய மேதை; பல் கலை வித்தகர்; அவர் கவிதைகள் பல புனைந்துள்ளார். நாடகங்கள் பல தீட்டியுள்ளார். அவருடைய உரை நடையும், சொல்லாட்சியும் நாட்டு மக்களுக்குச் சீரிய கருத்துக்களை எடுத்தியம்பும் மிகச் சிறந்த முறைகளாக விளங்குகின்றன.

மிகவும் புகழ்மிக்க திரைக்கதை - உரையாடல் எழுதுபவராகவும் நாடக ஆசிரியராகவும் பெரும்புகழ் பெற்றிருக்கின்ற டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், வரலாற்றுப் புதினங்களை எழுதியிருக்கிறார். அவை தமிழ் இலக்கியத்தில் அழியாப் புகழ்வாய்ந்த கருவூலங்களாகத் திகழ்கின்றன.

தமிழ் இலக்கியத்திற்கு டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் அளித்துள்ள — என்றும் அழியாத பங்கு, ''குறளோவியம்'', ''சங்கத் தமிழ்'' ஆகிய வியத்தகு படைப்புகளாகும். என்றும் நிலைத்து ஒளிவிடும் இத்தகைய இலக்கியப் பணிக்காகத் தமிழர்களின் வழித்தோன்றல் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை என்றும் நினைவுகூர்வர்.

டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் எழுதிய ''தென்பாண்டி சிங்கம்'' என்ற நூலுக்காக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. இந்நூல் தமிழ்நாட்டின் தென் பகுதியிலுள்ள தமிழர்கள் போற்றி வளர்த்து வரும் வீரம், மானம், கற்பு, நாணம் ஆகிய சீரிய பண்புகளை விளக்குகிறது. டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் ''ரோமாபுரி பாண்டியன்'' என்ற வரலாற்றுப் புதினத்தையும் எழுதியுள்ளார். அது, ரோமாபுரிக்கும் தமிழ்நாட்டிற்குமிடையேயான பண்பாடு, வணிக, வரலாற்றுத் தொடர்புகளை வெளிப்படுத்துகிறது. அவர் எழுதிய இன்னொரு வரலாற்றுப் புதினமான ''பொன்னர் சங்கர்'', தமிழ்நாட்டின் சேலம், பெரியார் மாவட்டங்களிலும்- அவற்றைச் சுற்றிலுமுள்ள பகுதிகளிலும் பல ஆண்டுகளுக்கு முன்னர் பின்பற்றப்பட்டு வந்த பழக்க வழக்கங்கள், மரபு ஆகியவற்றை , தெள்ளத் தெளிவாக விளக்குகிறது. டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் எழுதிய ''சங்கத் தமிழ்'' என்ற நூலிலிருந்து இரண்டு தொடர்களைக் குறிப்பிட நான் விரும்புகிறேன்.

போர்க்களத்தில் மகனை இழந்த ஒருதாய், பின்வரும் இரங்கற்பாடலைப் பாடுகிறார்.

"மானம் என் மகன் கேட்ட தாலாட்டு,
மரணம் அவன் ஆடிய விளையாட்டு"

—புகழ், தன்மானம் ஆகிய சீரிய பண்புகள் தொட்டிலில் என் மகன் கேட்ட தாலாட்டாகும்; மரணம் என்ற விளையாட்டை அவன் ஆடி முடித்து, கடந்து சென்றான் என்பது இதற்குப் பொருளாகும்.

உரைநடை, கவிதை, நாடகம் ஆகிய மூன்றிலும் நல்ல புலமை பெற்றுள்ள டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை, "முத்தமிழ் அறிஞர் - தமிழ் மொழியின் மூன்று வடிவங்களின் அறிஞர்" என்று அழைக்கலாம்.

தமிழ் இலக்கிய உலகில் முதன்மை பெற்று விளங்கும் சிறந்த எழுத்தாளரான டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்குச் சிறந்தொரு ஆட்சியாளரும், நடுநிலையாளரும், ஒருமைப்பாட்டாளரும், மனிதப் பண்பாளருமான இராசராச சோழன் விருது வழங்குவது உண்மையிலேயே பொருத்தமானதாகும்.

இந்தியாவில் கிறிஸ்துவுக்குப் பின்னுள்ள இரண்டாயிரம் ஆண்டின் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால், பண்டைய இந்தியாவின் சிறந்த அரசர்களில் ஒருவராக இராசராச சோழன், தென்னிந்தியாவில் ஒப்புயர்வற்ற முறையில் ஆட்சிசெய்ததை நாம் அறியமுடியும். தஞ்சாவூர் பெரிய கோயில், ஒரே சீர்மையுடன் காணப்படும் மாபெரும் கட்டடமாகவும், பொறியியல் திறனின் வியத்தகு சாதனையாகவும், தேசிய ஒருமைப்பாட்டிற்கும் ஒற்றுமைக்கும் சான்றாக நின்றுநிலவும் சின்னமாகவும் இன்றும் விளங்கி வருகிறது. அக்காலத்தில் சோழர்கள் படையெடுத்து, தங்களது நாட்டு எல்லைகளைக் கங்கை நதிக்கரை வரையிலும் விரிவாக்கிக் கொண்டனர். சோழர்களின் "பெரிய கடவுளும்"- ஐசுவரியத்தை அளிப்பவரும்- உலகம் முழுவதற்கும் மகிழ்ச்சியையும், வளத்தையும் அளிப்பவர் என்று கருதப்படுபவருமாகிய பிரகதீசுவரரின் படிமத்தை நீராட்டி அழகுபடுத்துவதற்காகக் கங்கைப் புனித நீரைத் தஞ்சாவூர் கோயில் நகரத்திற்குக் கொண்டு வந்தவர் இராசராச்சோழன் ஆவார்.

வரலாற்றுக் காலங்களிலும், கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்கள் முழுவதிலும் தமிழ் அரசர் குலங்கள்- குறிப்பாக சோழர்கள், ஆதிச் சோழர்களாக அல்லது முற்காலச் சோழர்களாக அல்லது பிற்காலச் சோழர்களாகத் தொடர்ந்து வளம் பெற்று வாழ்ந்துவந்துள்ளனர். பிற்காலச் சோழர்கள் விஜயாலய சோழர்கள் என்று அழைக்கப்பட்டனர். இராசராச சோழன் இந்தச்சோழ அரசர் குலத்தைச் சேர்ந்தவர்.

பண்டைய தமிழ் இலக்கண நூல்களில் ஒன்றான "தொல்காப்பியம்" இக்காலங்களில் தமிழ்நாட்டின் எல்லைகளைப பின்வருமாறு விவரிக்கிறது: "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்".

ஸ்ரீ வேங்கடேஸ்வரா, தன்பெயரை எவ்வாறு பெற்றார் என்பது ஒரு சுவையான கதையாகும். வேங்கைகள் நிறைந்த நாட்டிற்குக் கடவுள் என்பது தமிழில் அவரது பெயருக்கு உரிய நேரடியான பொருளாகும். புலிகளைக் குறிப்பிடுவதற்கு வடமொழியில் 'வியாக்ர' என்றும், இந்தியில் 'பாக்' (உதாரணம் - பாகல்கண்ட்) என்றும், தமிழில் 'வேங்கை' என்றும் இந்திய மொழிகளில் பல்வேறு சொற்கள் உள்ளன. சோழ்ர்களின் சின்னம் அல்லது கொடி 'புலி' ஆகும்.

எல்லா மதத்தலைவர்களும் தெற்கிலிருந்து வந்தவர்கள் என்பது அனைவரும் அறிந்ததே. வரலாற்று அடிப்படையில் சொல்ல வேண்டுமென்றால், ஆதிசங்கராச்சாரியார், இராமானுச ஆச்சாரியார், மத்துவாச்சாரியார், வல்லபாச்சாரியார் ஆகியோரும்- நூற்றுக்கணக்கான புலவர்கள், தத்துவ ஞானிகள், ஆசிரியப் பெருமக்கள் ஆகியோரும், வரலாற்றின் பல்வேறு காலங்களில் தென்னாட்டிலிருந்து வடநாட்டிற்கு வந்தவர்களே!

மிகச் சிறந்த பெண்பாற் தமிழ்ப் புலவரான ஔவையார் கூட, அவருடைய இறுதிக் காலத்தில் கைலாசத்தை அடைந்தார் என்று கூறப்படுகிறது. இராமானுச ஆச்சாரியார் தென் கோடியிலிருந்து திருப்பதி மலைக்குச் சென்று சுமார் கி.பி.1000-ல் ஒரு கோயிலை எழுப்பினார். இராசராசசோழன் புகழ்பெற்ற பெரிய கோயிலை மட்டும் கட்டவில்லை; தென்னிந்தியாவின் பல பகுதிகளையும் இணைத்து உறுதியான அரசியல் முறையையும், ஆட்சியையும் அமைத்துக் கொள்ளும் வகையில் நிர்வாகம், பண்பாடு, சமுதாயம் ஆகிய துறைகளில் ஒருமைப்பாட்டையும் கூட ஏற்படுத்தினார். விசயநகரப் பேரரசு பற்றி, சீவல் (SEWELL) என்ற வரலாற்றுப் பேராசிரியர் 'மறந்து போன பேரரசு' என்ற தனது நூலில் சிறப்பாக விளக்கியுள்ளார். விசயாலயன் தோற்றுவித்து, இராசராச சோழன் நிறுவிய சோழப் பேரரசு எனும் உறுதியான அடிப்படையின் மீது எழுந்ததுதான் அந்த விசயநகரப் பேரரசு.

இராசராசசோழ்ன் ஒருமைப்பாட்டையும் ஒருங்கிணைப்பையும் உருவாக்கியவராக என்றென்றும் நினைவில் இருக்கின்றார்.

இராசராசனின் ஆட்சித் திறனில் மிகவும் குறிப்பிடத்தக்கது- ஆட்சி அதிகாரத்தைப் பரவலாக்கும் ஜனநாயக முறை பற்றி இன்று நாம் கூறுகின்ற முறையை அன்றே அவர் கொண்டு வந்தார் என்பதாகும். வாக்குப் பதிவு முறை கிராமங்களிலும்கூட ஏற்கெனவே நடைமுறையில் இருந்தது. ஐம்பெருங்காப்பியங்களில் காலத்தாற் முற்பட்டு விளங்கும் 'சிலப்பதிகாரம்' என்னும் பெருங்காப்பியத்தில் (கிறிஸ்துவின் தோற்றத்தை ஒட்டி எழுந்த நூல்) ஐம்பெருங்குழு பற்றிய குறிப்பு உள்ளது. "ஐம்பெருங்குழு" என்பது ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட குழு என்று பொருள்படும். சோழர்கள் காலத்தில் இவர்கள், குடவோலை முறை எனும் இரகசிய வாக்குப் பதிவு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். குடம் என்பது வாக்குப் பெட்டியையும், ஓலை என்பது வாக்குச் சீட்டையும் குறிப்பதாகும்.

**கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்களின் 95-வது பிறந்த நாளையொட்டி (5.6.90) மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் திருவல்லிக்கேணி பெரிய மசூதியிலுள்ள காயிதே மில்லத் அவர்களின் நினைவிடத்தில் மலர்ப் படுகை வைத்து மரியாதை செலுத்தினார்.**



முன்னர் நிலவி வந்த பரம்பரை முறையை ஒழித்து, அதற்குப் பதிலாக, அரசு சாராத, தண்ணார்வக்குழு, தான் உருவாக்கிய தேர்தல் முறை ஒன்றைக் கொண்டு வந்தது என்பதை அறிகிறோம்.

ஆங்கிலேயர் கையாண்ட ''பிரித்தாளும்'' (Divide and Rule) கொள்கை, இந்த நூற்றாண்டில், பொய்யான-கற்பனையான மைய அரசு ஒன்றிருப்பது போலவும், அங்கிருந்து போடப்படும் ஆணை நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பின்பற்றப்படுவதைப் போலவும் ஒரு மாயத்தோற்றத்தை உண்டாக்கியிருக்கக்கூடும். ஆனால், காலத்தால் அழியாத தமிழ் வரலாறு நமக்கு உணர்த்தும் பாடம் இதற்கு முற்றிலும் வேறுபட்டதாகும். இராசராச சோழனின் ஆட்சிக் காலத்தில் விளங்கிய தமிழ் மொழி, மரபு, பண்பாடு ஆகியவை நமது ஒருமைப்பாட்டுணர்ச்சிக்கு என்றென்றும் சான்றாக விளங்குகின்றன.

தேசிய அளவிலும், உலக அளவிலும் கிடைத்துள்ள இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், தொல்பொருள் ஆய்வு, நாணயங்கள், ஆகிய வகையிலான சான்றுகள் அனைத்தும், தமிழ்மொழியின் வரலாறு, பண்பாடு ஆகியவற்றின் தொன்மைப் பழஞ்சிறப்பை எடுத்தியம்புகின்றன.

தமிழ் நாட்டிற்கும், பண்டைய ரோம் நாட்டிற்கும் இடையே பன்னாட்டு வாணிகம் நடைபெற்று வந்ததை, புதுச்சேரிக்கு அருகில் அரிக்கமேடு என்ற இடத்தில் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சியில் கிடைக்கப்பெற்ற சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

**அஞ்சா நெஞ்சம் படைத்த இலட்சியவாதிகள்தான் ஒரு நாட்டிற்குக் கிடைக்கக்கூடிய ஒப்பற்ற செல்வங்கள். ஏனெனில் பணம் வெறும் இரும்புப் பெட்டியில்தான் தூங்கும். ஆனால், இந்தச் செல்வங்களோ மக்களின் இதயப் பெட்டியில் வாழ்வர்.**

*—பேரறிஞர் அண்ணா*

சோழர் ஆட்சிக் காலத்தில், இந்து மகாசமுத்திரம் 'சோழர் ஏரி' என்றே இயல்பாக அழைக்கப்பட்டது. தொலைதூர கிழக்கு நாடுகள்- குறிப்பாக, பாலினேசியா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகள் தமிழ்ப் பண்பாட்டின் செல்வாக்கிற்கு ஆட்பட்டிருந்தன. தொலைதூரக் கிழக்கு நாடுகளில் 'மதுரா' என்ற பெயரில் இருந்த ஒரு தமிழர் குடியிருப்பு இலங்கையில் இன்றும் 'மதாரா' என்று அழைக்கப்படுகிறது. தமிழரசர்களின் கப்பல் கட்டும் திறன் மற்றும் கடற்படை வலிமை பற்றிய புகழ் கிறிஸ்துவ சகாப்தத்திற்கு முன்பே ஆசியக்கண்டம் முழுவதிலும் மற்ற உலக நாடுகளிலும் பரவியிருந்தது.

லோனியன் கிரேக்கர்கள் என்றழைக்கப்படும் யவனர்கள், காவிரியின் முகத்துவாரத்தில் அமைந்திருந்த 'மலர்களின் நகரம்' என்று அழைக்கப்படும் காவிரிப்பூம்பட்டினம் எனும் தொன்மை வாய்ந்த நகரத்தில் வாழ்ந்ததற்குச் சான்றுகள் உள்ளன. புத்த, ஜைன மத வழிபாட்டுத் தலங்கள் எவ்விதத் தடையுமின்றி உருவாக்க இராசராச சோழன் நல்கிய தாராள உதவியின் மூலம் அவரது மனிதப் பண்பும் சமயப் பொது நோக்கமும் தெளிவாகிறது. சோழர் காலத்துப் பண்பாடும், நாகரீகமும், கடல் கடந்து தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும், இலங்கைக்கும் பரவியது. விசயாலய சோழன் காலத்திலும் அதற்குப் பிந்திய விஜய நகரப் பேரரசுக் காலத்திலும் மட்டுமல்லாது மராட்டிய ஆட்சிக் காலத்திலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகத் தஞ்சாவூர் நமது நாட்டின் பண்பாட்டுத் தலைநகராக விளங்கி வருகிறது. தஞ்சையில் உள்ள சரபோஜி மகாராஜாவின் ''சரஸ்வதி மஹால் நூலகம்'' நம்முடைய பண்பாட்டு ஒருமைப்பாட்டிற்கு நின்று நிலவும் சின்னமாகத் திகழ்கிறது.

தொடக்க காலந்தொட்டு இன்று வரை, இந்நூற்றாண்டைச் சேர்ந்த பெரும் புகழ்வாய்ந்த கவிஞர்கள், சுப்பிரமணிய பாரதி, பாரதிதாசன் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பல் கவிஞர்கள், துறவிகள் உட்பட புகழ்பெற்ற அறிஞர்கள் பலரும், தங்களை பாரதப் புதல்வர்கள் என்றே பெருமையுடன் அழைத்துக் கொண்டனர். இசை, நாடகம், ஓவியம், சிற்பக்கலை மற்றும் கட்டடக் கலை போன்ற நுண்கலைகளிலும் தமிழகம் இந்தியாவின் பண்டையக் கலை வடிவங்களை- அவற்றின் புராதன தூய்மை கெடாமல் போற்றி வருகிறது.

எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டில் மட்டுமே பரத நாட்டியம், அதாவது பாரதத்தின் நாட்டியம் என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவில், ஏனைய நடனங்கள் யாவும், அந்தந்த உள்ளூர்ப் பெயர்களாலேயே அழைக்கப்படுகின்றன. கிராமிய கைத்திறத் தொழில், கிராமியக் கலை, நாட்டுப்புறப் பாடல்கள், நாட்டுப்புற இசை ஆகியவற்றிலும் தமிழ்நாடு, கலைப் பெட்டகமாகத் திகழ்கிறது.

இசையை இந்தியப் பண்பாட்டு ஒருமைப்பாட்டிற்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

சாஸ்த்ரீய கருநாடக சங்கீதத்தின் மும்மூர்த்திகளான தியாகராஜர், சியாமா சாஸ்திரிகள், முத்துசாமி தீட்சிதர் ஆகியோர் வெவ்வேறு மொழிகளில் பாடியிருந்தாலும், அவர்கள் வெவ்வேறு இடங்களைச்சேர்ந்தவர்களாக இருந்தாலும், தஞ்சாவூரைச் சேர்ந்த மிகச் சிறந்த இசைப் பாவாணர்களாகப் பாராட்டப்படுகின்றனர்..

எல்லா ஊரும் எனது ஊரே, உலக மக்கள் அனைவரும் எனது உறவினர்களே என்று தனது பரந்த மனப்பான்மையைப் பண்டைத்தமிழன் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று பறைசாற்றியுள்ளான்.

தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவை பல்லாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து தழைத்து வந்திருக்கின்றன. தெய்வத்தன்மை பொருந்திய இதன் சீரிளமைத் திறம், தனிப்பண்பமைதி, இந்திய தேசிய உணர்வுகளில் ஒன்றிக் கலந்துள்ளன. தமிழ்நாட்டின் ஆற்றல்மிக்க ஆக்கப் பூர்வமான இந்தத் தாக்கம் இந்தியர் நவீனமயமாகவும் வளம்பெறவும் பெருந்துணை புரிந்ததோடு முன்னேற்றப்பாதை நோக்கிச் செல்ல உறுதுணையாக அமையும் என்பது உறுதி.

**ஆகவே, நான் தஞ்சையில் நடைபெறும் இவ்விழாவில் கலந்து கொள்வதிலும், கலைஞர். திரு. மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிவருகிற அரும் பெரும் இலக்கியப் பணிக்காகத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பெருமை வாய்ந்த இந்த இராசராசன் விருதினை அவருக்கு அளிப்பதிலும் பெருமகிழ்ச்சி அடைகிறேன். கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்கள், ஆளுமைமிக்க சோழர் மரபில் தனிச்சிறப்பு வாய்ந்த ஓர் இடம் வகிக்கிறார் என்று கூட நான் கூறுவேன். அவர் மிகச் சிறந்த ஆட்சியாளராகவும், தலைமைசான்ற இலக்கியப் புலமை பெற்றவராகவும் விளங்குகிறார்.**

**இவ்விருதினை, தகுதிவாய்ந்த அவருக்கு வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், மக்கள் தொண்டாற்றி மேலும் மேலும் வெற்றி பலகுவித்துப் புகழ் பெற நான் உளமார்ந்த என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்!**

# மாண்புமிகு முதல்வர்

## பிறந்தநாள் செய்தி-வேண்டுகோள்

**பி**றந்த நாள் வாழ்த்துக் கூறும் பெருமக்களின் நல்லிதயங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகளைக் குவிக்கின்றேன். அறுபத்தி ஏழாவது ஆண்டில் நுழைகிறேன். ஐம்பத்திரெண்டு ஆண்டுக் கால பொது வாழ்க்கைக்கும், நாற்பது ஆண்டுக்கு மேற்பட்ட கலையுலக வாழ்க்கைக்கும் சொந்தம் கொண்டாடும் உரிமை பெற்றவன் என்ற முறையில் இரு துறையிலும் என்னைத் தாக்கியோர், தாங்கியோர் எனப்படும் இரு பிரிவினரும் தந்த ஊக்கத்தை உரமாகவும், விழுதாகவும் கொண்டு வளர்ந்துள்ளதை எண்ணி மகிழ்கிறேன். இரு சாரார்க்கும் நன்றி கூறுவதே பண்பாடு என உணருகிறேன். என் நன்றி வணக்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். அண்ணன் விட்டுச் சென்ற ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போதும், 1971-ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போதும் இப்போது 1989-ல் மூன்றாவது முறையாக ஆட்சித் தலைமையை ஏற்றுள்ள நிலையிலும்; என் கால்கள் கடைக் கோடியில் நிற்கும் மக்களைச் சுற்றியே உலா வருகின்றன! என் கரங்கள் அவர்களைக் கரையேற்றிடவே நீளுகின்றன! என் கண்கள் அவர்களுக்காகவே ஒளி உமிழ்கின்றன! அவர்களுக்காகவே கலங்குகின்றன! ஏழை, எளிய, சாதாரண, சாமானிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, நடுத்தர மக்களின் வாழ்வோடு தன்னைப் பிணைத்துக் கொண்ட கழகத்தின் தலைவன் கழக ஆட்சியின் தலைவன் எனினும் மக்களின் தொண்டன் என்பதில் தான் நான் பெருமை அடைகிறேன். பெரியாரும் பேரறிஞரும் அப்படித்தான் என்னை வளர்த்திருக்கிறார்கள்.

**கடைக்கோடியில் நிற்கும்**
**மக்களைச் சுற்றியே–**
**என் கால்கள்**
**உலா வருகின்றன–அவர்களைக்**
**கரையேற்றிடவே**
**என் கரங்கள் நீளுகின்றன!**
**என் கண்கள் அவர்களுக்காகவே**
**ஒளி உமிழ்கின்றன!**
**அவர்களுக்காகவே கலங்குகின்றன!**



கிராமப்புறத்து ஏழைகள் கண்ணொளி பெறுவது கண்டு பூரித்துப் போகிறேன்!

தொழுநோய் இரவலர் இல்லங்களை நான் தொழுவதற்குரிய இல்லங்களாக அமைத்ததை எண்ணிப் புளகாங்கிதமடைகிறேன்!

பல்லாயிரக்கணக்கான ஏழை மகளிர் திருமண உதவித் திட்டம் அவர்தம் இல்லங்களில் விளக்கேற்றி வைப்பது கண்டு மெய்சிலிர்த்துப் போகிறேன்!

பின்தள்ளப்பட்ட சமுதாயத்தின் சகல பிரிவினரும் கல்வி வாய்ப்பும் வேலை வாய்ப்பும்

பெறுவதற்கு மேலும் மேலும் புதிய ஏற்பாடுகளையும் வசதிகளையும் பெருக்குவதில் தொய்வில்லாத் தொடர் பயணம் நடத்துகிறோம் என எண்ணிப் பெருமிதம் கொள்கிறேன்!

அண்மையில் நிறைவேறிய இரு நிகழ்ச்சிகள் என்னை எத்துணை மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்றன!

வெளிச்சந்தையில் ஏக்கர் ஒன்று இருபதாயிர ரூபாய் மதிப்புள்ள நிலங்களை - முக்கால் ஏக்கர் நன்செய் இரண்டாயிரம் ரூபாய் எனவும், ஒன்றரை ஏக்கர் புன்செய் எழுநூறு ரூபாய் எனவும் ஐயாயிரம் ஏழை விவசாயத் தொழிலாளர்க்கு வடபாதி மங்கலத்தில் சில நாட்களுக்கு முன்பு வழங்கப்பட்டது என் நெஞ்சுக்கு எவ்வளவு இதமளிக்கிறது!

எத்தர்களால் ஏமாற்றப்பட்ட தமிழ்நாட்டுச் சகோதரிகள் ''பம்பாய் பசாரில்'' வாடகைப் பொருள்களாக ஆக்கப்பட்ட கொடுமை தவிர்க்க இந்தியாவிலேயே முதல் முயற்சியாக எண்ணூறுக்கு மேற்பட்ட சகோதரிகளை நமது காவல் துறையினர் தமிழகத்துக்கு மீட்டு வந்துள்ள நிகழ்ச்சி; ஒரு மகத்தான சமுதாயத் திருப்பமன்றோ!

வழங்கி வரும் நிதி சென்ற ஆண்டு செலவிடப்பட்ட விபரத்தைக் கூற விழைகிறேன்.

முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து; ஏழைகளின் சிறுநீரக சிகிச்சைக்காக அளித்தது 89,000 ரூபாய்! சிறுநீரக சிகிச்சைக் கருவி சென்னை பொது மருத்துவ மனைக்கு வாங்கிட 2 கோடி ரூபாய்! இருதய அறுவை சிகிச்சைக்காக வழங்கியது 3,76,000 ரூபாய்!

ஏழை எளியோர்க்கு இலவசமாக இருதய அறுவை சிகிச்சைக்கென சென்னைப் பொது மருத்துவ மனைக்கு சிகிச்சைக் கருவி வாங்கி வழங்கியதற்கு ஒரு கோடி ரூபாய்!

விபத்தில் இறந்த தொழிலாளர், மற்றும் மீனவர் குடும்பங்களின் பாதுகாப்பு நிதியாக ஏழு லட்சத்து ஐம்பதாயிர ரூபாய்!

ஆந்திரப் புயல் நிவாரண நிதியாக இருபத்தி ஐந்து லட்ச ரூபாய்!

மற்றும் வகுப்புக் கலவரங்கள், வன்முறைச் சம்பவங்களில் உயிரிழந்தோர், உடமையிழந்தோர்க்

## தமிழகத்தில் தொழில் வளர்ச்சி—நல்வாழ்வு
## கல்விச் செல்வம் பெருகிட—நிலைத்திட
## அனைவரும் உறுதி ஏற்றிடுவோம்!

இத்தகைய அபலைகள், ஆதரவற்றோர், ஏழை எளியோர் இடுக்கண் நீக்கிட அரசின் நிதியாதாரம் பயன்படுத்தப்படுகிற அதே நேரத்தில் இந்த சமுதாயத் தொண்டனின் பிறந்த நாள் விழாவும் அவர்களுக்கெனப் பயன்பட வேண்டுமென எண்ணியே தொடர்ந்து செயல்பட்டு வருகிறேன்.

என் பிறந்த நாள் நிதியாக முதலமைச்சர் நிவாரண நிதிக்கு, பரந்த மனமுடன் பெருமக்கள்



கான உதவித் தொகையாக அறுபத்தெட்டு லட்சம் ரூபாய்!


இப்படி சுமார் நாலு கோடி ரூபாய் அளவுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து பாதிக்கப்பட்ட ஏழைகள், பாட்டாளித் தொழிலாளர்களுக்கென, கடந்த ஆண்டில் தரப்பட்டுள்ளது.

இந்தப் பணி தொடர்ந்து நடைபெற— தடங்கல் ஏதுமின்றி நிறைவேற்றப்பட — ''முதலமைச்சர் நிவாரண நிதி'' என்ற தலைப்பில் அரசின் கருவூலத்தை நிரப்பிட வேண்டுமென நிதி மிகுந்தோரையும் நிதி குறைந்தோரையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தின் வளம், தொழில் வளர்ச்சி, நல்வாழ்வு, கல்விச் செல்வம், அனைத்துக்கும் மேலாக அமைதியான வாழ்வு பெருகிடவும், நிலைத்திடவும் அனைவரும் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதே இந்தப் பிறந்த நாளின் பொழுது அனைவரது காலடிகளிலும் நான் வைக்கும் கோரிக்கையாகும்.

அன்புள்ள

மு. கருணாநிதி.
ஜூன் 1, 1990.





# மாண்புமிகு முதல்வர் கலைஞருக்கு
# மாமன்னன் இராசராசன் படைப்பிலக்கியப் பரிசு

'மாமன்னன் இராசராசன் படைப்பிலக்கியப் பரிசு' மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு வழங்கும் விழா, தஞ்சாவூரில் உள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் 25.5.90 அன்று சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் சங்கர்தயாள் சர்மா அவர்கள் இந்தப் பரிசை வழங்கிய இவ்விழாவில், மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு மு. தமிழ்க் குடிமகன், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு க. அன்பழகன் மற்றும் தமிழ்நாடு அமைச்சர் பெருமக்களும், மாண்புமிகு புதுவை மாநில அமைச்சர் பெருமக்களும், ஏராளமான தமிழ்ப் பேரறிஞர்களும், தமிழ்நாடு அரசு உயர் அதிகாரிகளும் இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

'மாமன்னன் இராசராசன் படைப்பிலக்கியப் பரிசு' வழங்கும் விழாவை முன்னிட்டு, தஞ்சை மாநகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. வீதிகள் தோறும் வரவேற்பு வளைவுகளும், கொடித் தோரணங்களும் வரவேற்புப் பதாகைகளும் வண்ண விளக்குச் சரங்களும் கண்ணைக் கவர்ந்தன.

நகரிலிருந்த தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, மாமன்னன் ராசராசன் திருவுருவச் சிலைகளெல்லாம் மாலைகளணிவித்துச் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டிருந்தன.

இரண்டு மூன்று நாட்களாகப் பெய்த மழையினால் தஞ்சை மண் குளிர்ந்திருந்தது. விழா நாளன்று மாலை, சரியாக 4.50 மணிக்கு, தஞ்சாவூர் விமான நிலையத்தில் மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர். சங்கர் தயாள் சர்மா அவர்கள் ஹெலிகாப்டரில் வந்திறங்கினார். மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர், மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு விவேக் அரிநாராயண், தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர். சி. பாலசுப்பிரமணியம், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மலர்ந்த முகத்தோடு வருகை தந்த இந்தியக் குடியரசுத் துணைத் தலைவருக்கு மாலைகள், சால்வைகள் அணிவித்து வரவேற்புத் தெரிவித்தார்கள்.

## நன்னாள் - பொன்னாள்

தமிழ்ப் பல்கலைக் கழக வளாகத்தில் மிகப் பெரிய அளவில் அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தலில், அன்று மாலையிலிருந்தே தஞ்சை டி.எம். கோதண்டபாணி குழுவினரின் நாதசுர இசை நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது.

சரியாக மாலை 6 மணிக்குப் பரிசு வழங்கு விழா நிகழ்ச்சிகள் தொடங்கின.

''தமிழ்ப் பல்கலைக் கழக வரலாற்றில் இந்நாள் ஒரு நன்னாள். பொன்னாள். தமிழினக் காவலரும், ஐம்பதாண்டுக் காலமாக எழுத்துப் பணி ஆற்றி வருபவரும், தமிழகத்தின் முதல்வருமாகிய தமிழவேள் டாக்டர் கலைஞர் அவர்களின் 'தென்பாண்டிச் சிங்கம்' என்னும் சிறந்த வரலாற்றுப் புதினப் படைப்பிற்குத் தமிழ்ப் பல்கலைக் கழகம், மாமன்னன் இராசராசன் விருதினை வழங்கிப் பெருமை கொள்கிறது. டாக்டர் கலைஞர் அவர்களுக்குப் பரிசு வழங்குவதால் இந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகமே பெருமை பெறுகின்றது'' என்று தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் குறிப்பிட்டார். பின்னர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பில் வருகை தந்திருந்த பிரமுகர்களுக்கெல்லாம் ஜரிகை மாலைகள் சூட்டி, பொன்னாடைகள் அணிவித்து, நினைவுப் பரிசுகள் வழங்கினார்.

## கட்டடத் திறப்புகள்

தமிழ்ப் பல்கலைக் கழக அலுவலகக் கட்டடத்தை மேதகு இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் அவர்களும், தமிழ்ப் பல்கலைக் கழக ஆசிரியர் குடியிருப்புகளை மேதகு தமிழக ஆளுநர் அவர்களும், தமிழப் பல்கலைக் கழகத் தத்துவ மையக் கட்டடத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், தமிழ்ப் பல்கலைக்



## ''இன்னும் ஏராளம் எழுதிப் புகழ்பெற வேண்டும்!''

மாமன்னன் ராசராசன் விருது வழங்கிய மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு சங்கர்தயாள்சர்மாஅவர்கள், தனது நீண்டபாராட்டுரையின் முடிவில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்குப் பேனா ஒன்றைத் தனது அன்பளிப்பாக வழங்கினார். அழகிய பெட்டியினுள்ளிருந்து அதை எடுத்து உயர்த்திப் பிடித்துக் கூட்டத்தாருக்குக் காட்டிய மேதகு குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள்- ''முத்தமிழ் அறிஞர் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நான் என்னுடைய அன்பளிப்பாக இந்தப் பேனாவைத் தருகிறேன். தமிழக முதல்வர் அவர்கள், இன்னும் ஏராளமாக எழுதிப் புகழ்பெற வேண்டும் என்று வாழ்த்திக் கேட்டுக்கொள்கிறேன்'' என்று, மக்களின் பலத்த மகிழ்ச்சி ஆரவாரத்தினிடையே கூறிவிட்டு அதை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களிடம் அளித்தார்.

ஏற்புரை வழங்குகையில் அதுகுறித்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

## ''என்னால் எழுதாமல் இருக்க முடியாது!''

''நம்முடைய இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள், இங்கே எனக்கு அன்போடு ஒரு பேனாவை வழங்கினார்கள். இனியும் ஏராளமாக எழுதவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். அவர்களுக்கு இங்கே நான் ஒன்றைப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். நீங்கள் இன்று அளித்த பேனாவை- அறிஞர் அண்ணா அவர்கள் அளித்த கணையாழியை எப்படி நான் என்னுடைய விரல்களிலே அணிந்து எப்போதும் பார்த்துப்பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கிறேனோ, அதைப்போல- தாங்கள் வழங்கிய இந்தப் பேனாவைத் தொடர்ந்து நானே வைத்திருப்பேன். நீங்கள் இந்தப் பேனாவுடன் ஓர் அன்புக் கட்டளையும் பிறப்பித்திருக்கிறீர்கள்- தொடர்ந்து எழுத வேண்டும் என்று. தங்களுக்கு இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன் - என்னால் எழுதாமல் இருக்க முடியாது!''

கழக அறிவியல் கட்டடத்தை மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் அவர்களும் திறந்து வைத்தார்கள்.

அழகப்பா பல்கலைக் கழகத் துணை வேந்தர் திருமதி ராதா தியாகராசன் தமது வாழ்த்துரையில்- ''நம் தமிழகத்தின் பழம் பெரும் பண்பாட்டினை எடுத்துக் காட்டும் முதல்வர் கலைஞர் அவர்களின் எழுத்தாற்றல் மேலும் பொலிவொடு மிளிர்க'' என்று குறிப்பிட்டார்.

இதையடுத்து- ராசராசன் விருது வழங்கும் நிகழ்ச்சி இடம் பெற்றது.

## ''ராஜராஜன் கலைஞர் வாழ்க''

மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினார்; மாமன்னன் ராஜராஜன் படைப்பிலக்கியப் பரிசுத் தொகையான ஒரு லட்சத்து ஒரு ரூபாய்க்கான காசோலையைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களிடம் அளித்தார்.

அப்போது, விழா அரங்கில் கூடியிருந்த வெள்ளம் போன்ற தமிழர் கூட்டம், ''ராஜராஜன் கலைஞர் வாழ்க'' என்று மகிழ்ந்து முழங்கியது.

குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள், ராஜராஜன் பரிசு வழங்கி வாழ்த்துரை வழங்கினார்தஞ்சைத்தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு ராஜஸ்தான் பெண்ணின் ஓவியம் ஒன்றை அவர் அன்புடன் வழங்கினார். இதனையடுத்து, மேதகு தமிழக ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் தமது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது: நான் தமிழக ஆளுநரானபின் நடைபெறும் முதல் நிகழ்ச்சி, தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு ராஜராஜன் பரிசு வழங்கும் இந்த நிகழ்ச்சியாக அமைந்திருப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். இன்னும் ஒரு சில மாதங்களிலேயே தமிழை நான் எளிதாகப் புரிந்து கொள்ளும் நிலையைப் பெறுவேன். போராட்டங்கள் மிகுந்த அரசியலில் மட்டுமன்றி, இலக்கியத் துறையிலும் தமிழக முதல்வர் அரிய ஆற்றல் பெற்றிருப்பது எப்படி முடிகிறது என்று எனக்கு வியப்பாயிருக்கிறது. தொன்மையும், மேன்மையும் வாய்ந்த மொழியாக விளங்கும் தமிழ் மொழியில் உள்ள திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற சில இலக்கியங்களைப் பற்றி நான் கேட்டறிந்திருக்கிறேன். வேற்றுமையில் ஒற்றுமையை வளர்ப்பதில் நாம் முன்னேறி வருகிறோம். இந்திய மக்கள் அனைவரும் ஒரே மொழியைப் பேசாவிட்டாலும் - ஒரே சமயத்தைச் சார்ந்திருக்காவிட்டாலும் மனித நேயத்தில், பண்பாட்டு நெறிமுறை

யில், உன்னத ஒருமைப்பாட்டு எண்ணம் நமக்கு இருக்க வேண்டும். தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பில் மாமன்னன் ராஜராஜன் விருது பெறும் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை, தமிழக ஆளுநர் என்ற வகையிலே மட்டுமல்ல; இந்தப் பல்கலைக் கழகத்தின் வேந்தர் என்ற முறையிலும் நான் இதய பூர்வமாக வாழ்த்துகிறேன்''.

— மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் உரையை திரு. வை. கோபால்சாமி, எம்.பி.யும், மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் உரையைத் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைச் செயலாளர் திரு. அவ்வை நடராசனும் தமிழில் மொழி பெயர்த்தார்கள்.

இந்திராகாந்தி திறந்த வெளிப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. வா.செ. குழந்தைசாமி அவர்கள் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை வாழ்த்தி உரையாற்றினார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள் நன்றி கூறி, சிறப்புரை ஆற்றினார்.

ராஜராஜன் விருது பெற்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமது ஏற்புரையில் குறிப்பிட்டதாவது:


''நம்முடைய அன்புக்குரியவரும், ஆற்றல் வாய்ந்தவரும், அரசியலில் நேர்மையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருபவரும், சரியென்று பட்டதை யார் எதிர்த்தபோதிலும் தயங்காமல் எடுத்துக் கூறுகின்ற துணிவு பெற்றவருமான நம்முடைய இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் உங்கள் முன்னிலையிலே இந்த விருதினை எனக்கு வழங்கியிருக்கிறார். இந்த நிகழ்ச்சி என்னுடைய வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்ச்சிகளில் ஒன்றாகும்.

''அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே அன்றைய தினம் உரையாற்றிய பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தியாவின் வரலாற்றைக் கங்கைக் கரையிலிருந்து எழுதிப் பயனில்லை; காவிரிக் கரையிலிருந்து எழுதப்பட வேண்டும் எனக் கனவு கண்டார்கள். அந்தக் கனவு இன்றைக்கு நிறைவேறியதாக நான் உணர்கிறேன். இந்தியாவின் வரலாற்றைக் காவிரிக் கரையிலிருந்து எழுத, நம்முடைய குடியரசுத் துணைத்தலைவர் சர்மா அவர்கள் இன்றைக்குத் தமது வரலாற்றுச் சார்பான நீண்ட உரையின் மூலம் தொடக்க விழா நடத்தியிருக்கிறார் என்றே நான் கருதுகிறேன்.

''நம்முடைய ஆளுநர் பர்னாலா அவர்கள் இங்கே பேசும்போது இவ்வளவு அரசியல் நெருக்கடிகளுக்கிடையே எப்படி இவரால் எழுத முடிகிறது என்று கேட்டார்கள். எழுதினால்தான் அரசியல் நெருக்கடியை என்னால் சமாளிக்க முடியும். வேலை செய்துவிட்டு, களைப் பாறுவதற்கு டானிக் சாப்பிடுவதைப் போல் நான் எழுதுவதை வாடிக்கையாகக் கொண்டு இருக்கின்றேன். இன்று நேற்றல்ல, ஏறத்தாழ ஐம்பதாண்டுக் காலமாக எழுதிக் கொண்டு இருக்கின்றேன். எழுதுகின்ற அந்தப் பணியை நான் என்றைக்கும் நிறுத்தப்போவதில்லை.

''அந்தப் பணியின் ஒரு கட்டமாகத்தான் 'தென்பாண்டிச் சிங்கம்' உதயமாயிற்று. தென்பாண்டிச் சிங்கத்தைப் பற்றி - அந்த நூலுக்கு விருது வழங்குவதைப் பற்றி எண்ணி மகிழ்கின்ற நேரத்தில்- 'இப்படி ஒரு வரலாற்றுக் கதை இருக்கின்றது. அதை நீங்கள் பெருங்கதையாக எழுதவேண்டும்' என்று சொன்ன சிறுகதை மன்னன் தென்னரசை மறந்துவிட்டால் நன்றி கொன்ற குற்றத்திற்கு நான் ஆளாவேன்.

அந்தக் கதைக்கு மற்றொரு கருவாக - சரித்திரக் குறிப்புகளைத் தருகின்ற கருவாக எனக்கு அமைந்தது வேங்கடசாமி நாட்டார் அய்யா எழுதிய 'கள்ளர் வரலாறு' என்ற நூலாகும்.







''தமிழ்நாட்டிலே இருக்கின்ற - பெரிய சமுதாயமாக இருக்கின்ற முக்குலத்தோர் சமுதாயத்திற்காகத் 'தென்பாண்டிச் சிங்கம்', கொங்கு வேளாளர் சமுதாயத்திற்காகப் 'பொன்னர் சங்கர்', வன்னியர் சமுதாயத்திற்காகப் 'பாயும் புலி பண்டாரக வன்னியன்' - ஆகியவற்றை எழுதி முடித்திருக்கிறேன்.


''நம்முடைய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் குறிப்பிட்டதைப் போல்-

'வெள்ளம் போல் தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம்; அன்னார்
உள்ளத்தால் ஒருவரே மற்றுடலினால்
பலராய்க் காண்பர்









–என்ற அந்த நிலையை" எய்திட வேண்டுமென்பதுதான் நாம் அனைவரும் காணுகின்ற கனவு.

"அந்தக் கனவு பலித்திட, கடைசி மூச்சு என்னுடைய உடலிலிருந்து அகலுகின்ற வரை நான் உழைப்பேன் - உழைப்பேன்- உழைத்துக் கொண்டே இருப்பேன் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"இங்கே வழங்கப்பட்ட விருதுடன் பரிசாக ஒரு இலட்சத்து ஒரு ரூபாய்க் கான காசோலை ஒன்று என்னிடத்திலே தரப்பட்டிருக்கின்றது. அந்தக் காசோலை தமிழுக்கே பயன்பட வேண்டுமென்று நான் கருதுகின்றேன்.

"என்னைப் பெரியாரின் கைகளிலே ஒப்படைத்து, பேரறிஞர் அண்ணாவின் நிழலிலே வளரச் செய்து, உங்களையெல் லாம் என்னுடைய உடன்பிறப்புகளாக ஆக்கிய பெருமைக்குரியவர்கள் என்னு டைய தாய் அஞ்சுகம் அம்மையாரும், தந்தை முத்து வேலரும் ஆவர். எனவே அவர்கள் நினைவாக இந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் 'அன்னை அஞ்சுகம் -முத்துவேலர் அறக்கட்டளை' என்ற பெயரில் ஒன்றைத் தொடங்க வேண்டும் என்று துணை வேந்தரையும் இணை வேந்தரையும், வேந்தரையும் கேட்டுக் கொண்டு, இந்த ஒரு இலட்சத்து ஒரு ரூபாயையும் தமிழ்ப்பல்கலைக் கழகத் திற்கே அளிக்கிறேன்.

"இந்தத் தொகையைக் கொண்டு - அதன் மூலம் கிடைக்கின்ற வட்டியைக் கொண்டு - அரிய இலக்கியங்களைப் படைத்துப் புகழ் பெற்ற டாக்டர் கால்டுவெல், மறைமலையடிகளார்,

# எந்நாளும் முதல்வர்! டாக்டர்வா.செ.குழந்தைசாமி

இந்திராகாந்தி திறந்தவெளிப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. வா.செ. குழந்தைசாமி அவர்கள், 'ராசராசன் பரிசு' பெற்ற மாண்புமிகு முதல்வர் _ கலைஞர் அவர்களை வாழ்த்திப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"முன்பு நான் கலைஞர் அவர்களின் 'பொன்னர் சங்கர்' நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டேன்; அப்போது அவர் முன்னாள் முதல்வர். 'தென்பாண்டிச் சிங்கம்' வரலாற்றுப் புதினத்திற்குத் தஞ்சைப் பல்கலைக்கழகம் ராசராசன் விருது வழங்கும் இன்று, அவர் இந்நாள் முதல்வர்!

"முன்னாள் முதல்வர் என்பதும் இந்நாள் முதல்வர் என்பதும் வரும்-போகும். எந்நாளும் அவர் முதல்வராக இருக்கும் உலகு ஒன்று உண்டு. அதுதான் இலக்கிய உலகு. அந்த இலக்கிய உலகு தரும் சிம்மாசனமும், கிரீடமும் எந்தக் காலத்திலும் அவருடையது ஆகும்!

"வாழையடி வாழை எனவரும் தமிழ் இலக்கிய மரபில் செங்கோலும் எழுதுகோலும் சேர்ந்தே இருப்பது ஒரு தொடர்கதை. அதன் ஒளிமயமான ஓர் அத்தியாயம் கலைஞர். இது உண்மை - வெறும் புகழ்ச்சியில்லை. டாக்டர் கலைஞர் ஒரு பகுத்தறிவுவாதி; சமுதாய சீர்திருத்தவாதி; கவிஞர்; கட்டுரையாளர்; நாவலாசிரியர்; நாடகாசிரியர்; சிறுகதை ஆசிரியர்; பத்திரிகையாசிரியர்; தலைசிறந்த பேச்சாளர்; ஓர் அரசியல் தலைவர்.

"இறைவன் பத்து அவதாரங்கள் எடுக்க, அவருக்கும் பத்துப் பிறவி தேவைப்பட்டது; கலைஞர், ஒரு பிறவியில் பல அவதாரங்களைக் கண்டவர். ஒவ்வொன்றிலும் சிறந்து நின்றவர். அவரது அரசியலில் வேறுபாடு இருக்கலாம்; ஆனால் இலக்கியத் தலைவர் கலைஞரைத் தமிழினம் முழுவதும் கட்சி கடந்து - கருத்து வேறுபாடின்றி ஏன் பாராட்டக் கூடாது? அந்தப் பண்பாடு ஏன் உருவாகவில்லை? இந்தக் கேள்வி என் மனத்தில் மீண்டும் மீண்டும் எதிரொலிக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை தமிழகத்தில் இல்லையே என்ற எண்ணம் என் நெஞ்சை அழுத்துகிறது!

"பொன்னர் சங்கரும், தென்பாண்டிச் சிங்கமும் இன்னும் தங்களது எண்ணற்ற இலக்கிய நூல்களும் பேசும் - போற்றும் தமிழின உணர்வு வளர ஓர் இணைப்புப் பாலம் தேவை. கலைஞர் அவர்களே! அதைத் தாங்கள்தான் உருவாக்க வேண்டும். இன்றைய சூழ்நிலையில், தங்களால்தான் அது இயலும்!

# சங்கத் தமிழ்போல் வாழ்க!

மாண்புமிகு கல்வி அமைச்சர்

## பேராசிரியர் க. அன்பழகன்

“இந்த விழாவில் ராசராச சோழன் விருது கலைஞருக்கு வழங்கப்பட்டதில் பல்வேறு பொருத்தம் இருக்கிறது.

“1981-ஆம் ஆண்டிலே இந்தப் பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டு ஒன்பதாவது ஆண்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில்- முதல் மூன்று ஆண்டுகளின் விருதுகள் வேறுசில பெருமக்களுக்கு வழங்கப்பட்டது. இந்த ஆண்டு கலைஞருக்கு வழங்கப்படுவதன் மூலமாக, ராசராசசோழன் விருது எப்படிப்பட்ட விருது என்பதை நாடு புரிந்து கொள்ளுகிறது; உணருகிறது.

“கலைஞருக்கு இந்த விருதினைப் பெறுவதற்கான தகுதி இருபதாண்டுகளுக்கு முன்பே உண்டு.

“தந்தை பெரியார் அவர்கள் ஒருமுறை பேசும்பொழுது, ‘பேரறிஞர் அண்ணாவிற்குப் பின்னர், தமிழ் நாட்டிற்குக் கிடைத்த பெரிய சொத்தாக நான் கலைஞரை மதிக்கிறேன்’ என்று சொன்னார்.


“அறிஞர் அண்ணா ஒருமுறை கலைஞரைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது ‘தமிழக வரலாற்றின் முற்பகுதியை நான் தீட்டுகிறேன், அதன் பிற்பகுதியை என்னுடைய தம்பி கருணாநிதி நிச்சயமாகத் தீட்டுவான்’ என்று கூறினார்.


“கலைஞர் அவர்கள் மாணவராக இருந்தபொழுதே ‘புண்பட்ட இளைஞராக அவர் இருக்கமாட்டார்; இளைஞர்களிடையே வீரராக விளங்குவார்’ என்று அன்றைக்கே பாவேந்தர் பாரதிதாசன் கலைஞரை வாழ்த்தி எழுதிய கவிதையில் கூறியுள்ளார்.

“கலைஞர் அவர்களுடைய எழுத்தாற்றலை வைத்து எண்ணுகிறவர்களெல்லாம் பாராட்டுவது, இருபது நூற்றாண்டுகளுக்குமுன் வழங்கிய சங்கத் தமிழ் இன்றைக்கு மறுபிறவி எடுப்பதற்குக் காரணமாக இருக்கிற ஆற்றல் மிக்கவர் என்று பாராட்டுகிறார்கள். அவரையே சங்கத் தமிழாகக் கருதுகிறார்கள்; மதிக்கிறார்கள்.

“எனவே- அப்படிப்பட்ட கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டோடு இரண்டறக் கலந்து விட்ட கலைஞர் அவர்கள்- தமிழ்நாட்டினுடைய வரலாற்றை உருவாக்குவதற்கான மிகப்பெரிய பேராற்றலைத் தன்னுடைய தூரிகையினாலே பெற்றிருக்கின்ற கலைஞர் அவர்கள் எழுத்துலகப் போட்டி என்று எந்தவகைப் போட்டி வந்தாலும் ஈடுகொடுக்கக் கூடிய தூரிகையைத் தன் கையிலே கொண்டிருக்கின்றார். சங்கத் தமிழ்போல் கலைஞர் வாழ்க! குறளோவியம் போல் கலைஞருடைய புகழ் ஓங்குக!”

—25.5.90 அன்று தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ‘ராசராசன் பரிசு’ வழங்கு விழா உரையிலிருந்து.





ந.மு.வேங்கடசாமி நாட்டார், கா.சு. பிள்ளை, தமிழ்த் தென்றல் திரு. வி.க. ஆகியோரின் படைப்புகள் தொடர்பாக ஆய்வுரைகள் பல்கலைக் கழகத்தில் நிகழ்த்தப்பட வேண்டுமென்றும் - அந்த ஆய்வுரைகள் ஆண்டுதோறும், தமிழ்ப் பல்கலைக் கழகத்தால் நூல் வடிவில் வெளியிடப்பட வேண்டும் என்றும், இதுபோன்ற பரிசுகள், நான் இன்னும் எழுதுகின்ற நூல்களுக்கு எதிர் காலத்தில் வெளியிடுவதால் கிடைக்குமானால் அந்தத் தொகையிலும் ஒரு பகுதியை இந்த அறக்கட்டளைக்கு அவ்வப்போது வழங்குவேன் என்றும் உறுதியைத் தந்து ஒரு இலட்சத்து ஒரு ரூபாய்க்கான காசோலையைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் பாலசுப்பிரமணியம் அவர்களிடத்திலே அளித்து, விடைபெறுகிறேன்”.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து பல்கலைக் கழகத் துணை வேந்தர் காசோலையைப் பெற்றுக் கொண்டார்.

நிகழ்ச்சித் தொகுப்பு:
- பி.எல்.ஆர்

TNPSC

விளம்பர எண்.16/90

கீழ்க்காணும் பதவிகளுக்கு 26.6.1990 அன்று மாலை 5.45 மணி வரையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மாதச் சம்பளம், வயது வரம்பு மற்றும் கல்வித் தகுதி ஆகியன பதவிகளின் பெயர்களுக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. **இரண்டு, அரசு கவனிப்பு இல்லங்களின் கண்காணிப்பாளர்கள்** (தமிழ்நாடு சீர்திருத்தப் பள்ளிகள் சார்நிலைப் பணி). ரூ. 1,820-3,200/- (நியமன ஒதுக்கீட்டு விதி இத்தெரிவுக்குப் பொருந்தாது)

   1.7.1990 அன்று 30-க்குக் குறைவாக.

   கலை அல்லது அறிவியல் அல்லது வணிகவியலில் ஒரு பட்டம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பி.ஓ.எல். அல்லது மதுரை-காமராஜ் பல்கலைக் கழகத்தின் பி.பி.ஏ. அல்லது சென்னைப் பல்கலைக் கழகத்தின் பி.லிட். அல்லது பாரதியார் பல்கலைக் கழகத்தின் பி.பி.எம். அல்லது பி.லிட். பட்டம்.

2. **இரண்டு, உதவி பயிற்சி அலுவலர்கள்** (சுருக்கெழுத்து - ஆங்கிலம்) (தமிழ்நாடு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி சார்நிலைப் பணி) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை பயிற்சிப் பிரிவைச் சார்ந்தது. ரூ.1,600- ரூ.2,660/-

   ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர் ...1 (முன் தெரிவில் நிரப்ப இயலாத, ஆதிதிராவிட வகுப்பினர்/ பழங்குடி வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட காலியிடம்); பகிரங்கப் போட்டி ...1

   1.7.1990 அன்று 35-க்குக் குறைவாக.

   (அ) பழைய 11 ஆண்டு பள்ளிக் கல்விப் படிப்பிற்குப் பிறகு கல்லூரிக் கல்விப் படிப்பில் சேர தகுதி **அல்லது** தற்போதைய 10 ஆண்டு பள்ளிக் கல்விப் படிப்பிற்குப் பிறகு மேல்நிலைப் பள்ளிக் கல்விப் படிப்பில் சேர தகுதி பெற்றிருக்க வேண்டும்; **மற்றும்**

   (ஆ) ஆங்கிலத்தில் தட்டெழுத்து மேல்நிலை மற்றும் ஆங்கிலத்தில் சுருக்கெழுத்து மேல்நிலை ஆகியவற்றில் அரசு தொழில்நுட்பத் தேர்வு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்; **மற்றும்**

   (இ) தமிழில் தட்டெழுத்து கீழ்நிலை மற்றும் தமிழில் சுருக்கெழுத்து கீழ்நிலை ஆகியவற்றில் அரசு தொழில்நுட்பத் தேர்வு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்; **மற்றும்**

   (ஈ) ஆங்கிலச் சுருக்கெழுத்தராக இரண்டு வருடங்களுக்குக் குறைவில்லாத அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப கோரிக்கைகளிலும் விண்ணப்பத்திலும் பதவியின் பெயரைத் தெளிவாகப் பெரிய எழுத்துக்களில்குறிப்பிட வேண்டும்.

**இரு பதவிகளுக்கும் உரியன:**

குறிப்பு: தெரிவுக்குரிய குறைந்தபட்ச மதிப்பெண்களையேனும்பெறும், இப்பதவிக்குரிய கல்வித் தகுதியைப் பெற்ற ஆதரவற்ற விதவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.


விளக்கம்: ''ஆதரவற்ற விதவை'' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும் பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், பிணைத் தொழிலாளர்கள், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்'' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களிடம் எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ, பதவியின் பெயர், விளம்பர எண், மற்றும் இனத்தின் எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு வழங்கக்கூடிய, 1.5.1990 அன்றோ அதற்குப்பிறகோ வாங்கப்பட்ட ரூ.10/-க்கான (ரூபாய் பத்து) சென்னை அண்ணாசாலை தலைமை அஞ்சல் நிலையத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒருகிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய, 1.5.1990 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம்விளக்குக் கிளை, சென்னை-6-ல் செலுத்தத்தக்க ரூ.10/-க்கான ''கேட்புக் காசோலை (Account Payee Demand Draft) யுடனும் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்பட மாட்டா,

குறிப்பு: ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியே விண்ணப்பப் படிவ விலையைச் (ரூ.10/-) செலுத்தி, தனித்தனியே கோரிக்கை மனுவைச் சமர்ப்பிக்க வேண்டும்.

டிஐபிஆர்/1207/எம்எஸ்/90/அக்கார்ட்



# ஏழை எளியோர்க்கு நில உதவி

இந்த ஆட்சியிலே நாம் செய்து முடித்தவைகள் ஏராளமாக இருந்தாலும்கூட, இன்னும் செய்ய வேண்டியவைகள் ஏராளமாக இருக்கின்றன என்பதை உணராதவன் அல்ல நான். சட்டமன்ற உறுப்பினர் தம்புசாமி அவர்கள் இங்கே பேசும்போது- ''நீங்கள் நிலங்களை மட்டும் கொடுத்தால் போதாது, அதைப் பண்படுத்த வருங்காலத்திலே உதவி செய்ய வேண்டும்'' என்று சொன்னார்.

அவர் இதனை இப்போது கேட்பதற்கு முன்பே - நான் ஏற்கெனவே இது குறித்து, சிந்தித்துத் திட்டமிட்டுக் கொண்டு வந்திருக்கிறேன். இந்த நிலங்களைப் பண்படுத்துவதற்காக உதவித் தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் தரப்படும் என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்!

அதைப்போல ஆழ்குழாய்க் கிணறுகள்; கூட்டு முயற்சியாக நான்கைந்து பேர் சேர்ந்து ஒரு ஆழ்துளைக் கிணறு அமைத்து, தங்கள் நிலங்களுக்குத் தண்ணீர் கொண்டு செல்ல முயற்சிப்பார்களேயானால், அதற்கும் அரசு உரிய கடன் தொகையை வழங்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலிலே சொன்ன நிலத்தைப் பண்படுத்துவதற்காகத் தரப்படும் ஆயிரம் ரூபாய் மானியமாகத் தரப்படுவதாகும். ஆழ்துளைக் கிணறு வைத்துக் கொள்ள நான்கைந்து பேர் ஒன்று சேர்ந்து ஒற்றுமையோடு செய்ய முன்வருவீர்களேயானால், அந்த ஆழ்துளைக் கிணறு அமைக்கின்ற அந்தத் தொகையை அரசாங்கம் கடனாக வழங்கும்.

இப்போது ஏக்கர் ஒன்றுக்கு 3,600 ரூபாய் என்று நிர்ணயித்து, முக்கால் ஏக்கர் பெறுகின்ற ஒரு விவசாயி, ரூபாய் 2,700 தர வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இப்போது நான் எடுத்துள்ள முடிவினை அறிவிக்கிறேன். இந்த 2,700 ரூபாய்க்குப் பதிலாக இரண்டாயிரம் ரூபாய் மட்டும் தந்தால் போதும்; அவர்கள் 2,700 ரூபாய் தர வேண்டியதில்லை. 700 ரூபாய் குறைக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலப் புஞ்சைக்கு ஏக்கர் ஒன்றுக்கு 569 ரூபாய் என்று இப்போது விலை நிர்ணயிக்கப்பட்டு ஒரு நபருக்கு ஒன்றரை ஏக்கரா கொடுக்கப்படுகின்றது. அதனுடைய விலை 854 ரூபாய் ஆகின்றது. இந்தத் தொகையை புஞ்செய் நிலத்தைப் பெறுகின்றவர்கள் தர வேண்டும். இப்போது அறிவிக்கின்றேன்- இந்த 854 ரூபாய் என்பதற்குப் பதிலாக அந்தப் புஞ்செய் நிலத்திற்கு - அதாவது ஒன்றரை ஏக்கருக்கு 700 ரூபாய் கொடுத்தால் போதுமானது என்பதையும் மகிழ்ச்சியோடு இந்த நிகழ்ச்சியிலே அறிவித்து - இந்த நிலத்தைப் பெற்றவர்கள் உரிய தொகையை இருபது தவணையிலே செலுத்தி - ஒழுங்காகச் செலுத்தி, அரசு எப்படி நேர்மையாக நடந்து கொள்கிறதோ, அந்த நேர்மைக்குக் குந்தகம் வராமல் விவசாயப் பெருங்குடி மக்களும் நடந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**— மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 27.5.90 அன்று, தஞ்சை மாவட்டம் வடபாதிமங்கலத்தில், நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் பகிர்ந்தளிக்கும் விழாவில் பேசியதிலிருந்து.**

TNPSC

விளம்பர எண். 17/90

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் உள்ள ஆராய்ச்சி மற்றும் புள்ளியியல் பிரிவில் ஆராய்ச்சி உதவியாளர் பதவியில் ஒரு காலியிடத்திற்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 3.7.1990 அன்று மாலை 5.45 மணி வரையில் வரவேற்கப்படுகின்றன. (நியமன ஒதுக்கீட்டு விதி இத்தெரிவுக்குப் பொருந்தாது).

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூ.1,600-50-2,300-60-2,660

**வயது:** 1.7.1990 அன்று 30-க்குக் குறைவாக.

**தகுதி:** (அ) 50 சதவிகித மதிப்பெண்களுக்கு குறையாது பெறப்பட்ட புள்ளியியலில் ஒரு முதுநிலைப் பட்டம்

**அல்லது**

(ஆ) புள்ளியியலை ஒரு பாடமாகக் கொண்டு 50 சதவிகித மதிப்பெண்களுக்கு குறையாமல் பெறப்பட்ட கணிதத்தில் ஒரு முதுநிலைப் பட்டம்.

**அல்லது**

(இ) கணிதம் **அல்லது** பொருளாதாரத்தில் 50 சதவிகித மதிப்பெண்களுக்கு குறையாமல் பெறப்பட்ட ஒரு முதுநிலைப் பட்டத்துடன் புள்ளியியலில் ஒரு பட்டயம், (Diploma)

**குறிப்பு:** தெரிவுக்குரிய குறைந்தபட்ச மதிப்பெண்களையேனும் பெறும், இப்பதவிக்கான கல்வித் தகுதியைப் பெற்ற ஆதரவற்ற விதவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**விளக்கம்:** ''ஆதரவற்ற விதவை'' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாது, பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாத விதவையைக் குறிப்பதாகும்.

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர், பிற்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்'' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களிடம் எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ, பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு வழங்கக்கூடிய, 18.5.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட ரூ.10/-க்கான (ரூபாய் பத்து), சென்னை அண்ணாசாலை தலைமை அஞ்சல் நிலையத்தில் செலுத்தத் தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 18.5.1990 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம்விளக்குக் கிளை, சென்னை-6-ல் செலுத்தத்தக்க ரூ.10/-க்கான ''கேட்புக் காசோலை'' (Demand Draft)யுடனும், சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/1287/MS/90/ACCORD

தமிழ் வளர்த்த பெரியார்:

# கவியோகி சுத்தானந்த பாரதியார்



இன்றைய பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தின் தலை நகரான சிவகங்கையில் ஜடாதர ஐயர், காமாட்சி அம்மாள் தம்பதி யருக்கு 1897-ஆம் ஆண்டு மே மாதம் 11-ஆம் தேதி சிவகங்கையில் பிறந்தவர் சுத்தானந்த பாரதி. பெற் றோர்களால் முதலில் இட்ட பெயர் வேங்கட சுப்பிரமணியன்; ஆனால் குடும்பத்தார் இவரை 'செல்லம்' என்றும் 'வெங்கட்' என்றும் அழைப்பர். இவருடன் இரண்டு சகோதரிகள், ஒரு சகோதரியும் உடன் பிறந்தனர். எல்லோரையும் விட இவர்தான் 'கடைக்' குட்டி!

சுத்தானந்தரின் தந்தைக்கு ஐதரா பாத் பூர்வீகம். அலுவல் காரணமாக தென்னாட்டிற்கு வந்தவர், சிவகங்கையில் தங்கி வசிக்கலானார். இளமையில் சுத்தானந்தர் சிவகங்கை யில் திண்ணைப்பள்ளியில் கல்வி பயின்றார். பின்பு சிவகங்கை அரசர் உயர்நிலைப்பள்ளியில், பள்ளி இறுதி வகுப்பு வரை படித் தார். இவருக்கு 9-ஆம் வயதில் உப நயனமும் நடந்தது. பள்ளிப்படிப்பை முடித்த இவர் பசுமலையில் போதனா ஆசிரியர் பயிற்சிக்காக 'அமெரிக்கன் கல்லூரியில்' பயின்று பட்டமும் பெற்றார். திருச்சி மாவட்டம் காட்டுப் புத்தூர் ஜமீன்தார் உயர்நிலைப் பள் ளியில் சுமார் மூன்றாண்டுக்காலம் ஆசிரியராகப் பணியாற்றினார். இச் சமயம் இவருடன் பயின்ற ஆப்த நண்பர் ஜி. சுந்தரம் அவர்களுடன்- தேவகோட்டையில் தேசீய கலா சாலையில் பணியாற்றினார். பின்னர் அப்பள்ளி அரசு மான்யம் பெறும் கல்வி நிறுவனமாக மாறியபோது இவர் அப்பள்ளியிலிருந்து விலகி னார். இதற்குப்பின் அவர் உத்தி யோகத்திற்காக முயற்சிக்கவில்லை.

'செல்லம்' என்ற வேங்கடசுப்பிர மணியன் சுமார் நாலைந்து வயதுச் சிறுவனாக இருந்தபோதே, வீட்டில் பூஜை அறையில் இவர்கள் முன் னோர்களால் பூஜிக்கப்பட்டு வந்த 'சாம்பமூர்த்தி' என்ற விக்கிரகத்திற்கு வீட்டுத்தோட்டத்திலிருந்து 'புஷ்பங் களைப் பறித்து வந்து சூட்டி, தனது பெற்றோர்கள் சொல்லித் தந்த சிவஸ்துதிகளைத் தனது மழலையால் பாடி பூஜிப்பாராம். ஒரு சமயம் இவருடைய ஊருக்கு வந்த ஓர் ஞானசித்தர் என்ற துறவி, இச்

-ரகமி

சிறுவனை அழைத்து, சிறு கற் கண்டை அளித்து, நெற்றியில் விபூதி யையும் இட்டுச் சென்றாராம். வேங்கடசுப்பிரமணியனும் அடிக்கடி தன்வீட்டிற்கு அருகாமையிலுள்ள தோப்பில் தங்கியுள்ள அத்துறவியைச் சந்திக்கவே, அவரும் இச்சிறுவனின் பக்தியை மெச்சி 'சுத்தானந்தர்' என்று பெயரையும் சூட்டினார்.

அடுத்து சிருங்கேரி மடம் ஜகத்குரு ஸ்ரீநரசிம்ம பாரதி என்ற சுவாமிகள் சுத்தானந்தரின் தெய்வபக்தி, மற்றும் தானே கவிபாடும் திறமை ஆகிய வற்றைப் பாராட்டி 'கவியோகி' என்ற பட்டத்தையும் அளித்தார். இவர் இளமையிலிருந்தே பராசக்தி யின்மீது அபார பக்தியும், உபா சகராக இருந்ததால் பின்னர் 'பாரதி' என்ற பட்டத்தையும் பெற்றார். அன்றுமுதல் சாதாரண வேங்கட சுப்பிரமணியன் 'கவியோகி சுத்தானந்த பாரதி' ஆனார்.

இளம் வயதிலேயே இவர் மனம் தெய்வீகம், துறவறம் இரண்டிலும் லயித்திருந்தது. ஒரு சமயம் மதுரை யிலுள்ள தாய் வழிப் பாட்டனார்- இல்லத்திற்கு வந்தவர், திடீரென்று தன் தலையை மழுங்க மொட்டை அடித்துக்கொண்டு, அங்குக் கோவி லில் வந்து தங்கியுள்ள துறவிகளிடம் சென்று, துறவறம் பூண்பதற்குரிய

## சக்தி சுகர்ஸ் லிமிடெட், சிவகங்கை யூனிட்

வாழ்வு பெருக்கு மதியே சக்தி
மாநிலங் காக்கும் வலியே சக்தி
தாழ்வு தடுக்குஞ் சதிரே சக்தி
சஞ்சல நீக்குந் தவமே சக்தி
வீழ்வு தடுக்கும் விறலே சக்தி
விண்ணை யளக்கும் விரிவே சக்தி
ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி
உள்ளத் தொளிரும் விளக்கே சக்தி.

*—மகாகவி பாரதியார்*

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் சிவகங்கை தாலுகா கண்ணாரிருப்பு மாத்தூர் கிராமத்தில் அமைந்துள்ள முதல் பெரிய இச் சர்க்கரை ஆலை, 7-வது திட்ட காலத்தில் 2,500 டன் அரவைத்திறனில் உண்டான முதல் ஆலை. உலகத்திலேயே, தானியங்கி முறையில் இயங்கும் முதல் அரவை இயந்திரம். உற்பத்தி முறைகள் அனைத்தையும் கம்ப்யூட்டர்களே இயக்கும் முதல் ஆலை, பல்வேறு எரிபொருளைப் பயன்படுத்தும் முதல் கொதிகலனைக் கொண்ட ஆலை, நவீன தொழில்நுட்ப முறையில் அமைக்கப்பட்டுள்ள இச்சர்க்கரை ஆலை, இப்பகுதியின் விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் நம்பிக்கைகளை நிறைவு செய்வதுடன் சுமார் 10,000 பேருக்கு வேலை வாய்ப்பை அளித்துள்ளது. இதுவரை சுமார் 4 லட்சம் டன்னுக்கு அதிகமாகக்கரும்பு அரவை செய்யப்பட்டுள்ளது.

**சக்தி சுகர்ஸ் லிமிடெட்**
**180, ரேஸ் கோர்ஸ் ரோடு**
**கோயமுத்தூர்-641 018**

நெறிமுறைகளைத் தனக்கு அருளும்படி வேண்டினார். இதுவிவரம் அறிந்ததும் குடும்பத்தினர் இவரைச் சமாதானம் செய்து, வீட்டிற்கு அழைத்து வந்து விட்டனர். ஆனால் சுத்தானந்தரின் மனம் துறவறத்திலேயே வெகு தீவிரமாகியது. மகனின் இந்த எண்ணத்தை மாற்ற விரும்பிய குடும்பத்தினர், அவருக்கு திருமணம் செய்து வைத்தால், அந்த மகிழ்ச்சியில் துறவறத்தை மறப்பார் என்றெண்ணி, வரன்களைத் தேடலாயினர். மகனைத் திருமணம் செய்து கொள்ள வற்புறுத்தியபோது, அவர் ‘பெண்களை பராசக்திக்குச் சமமாக பாவித்து வணங்கிவருகிறேன். எனவே மாதாவை நான் மனைவியாக ஏற்க மாட்டேன்! இதற்காக முயற்சிக்கவும் வேண்டாம்’’ என மறுப்பும் தெரிவித்துவிட்டார்.

சுத்தானந்தர் இளமையிலேயே இராக ஞானத்தோடு பாடல்களைப் பாடும் திறமையும் பெற்றிருந்தார். இவருடைய அத்தையின் கணவரான ஹரிதீர்த்தமய்யர் பெரிய இசைப் புலவர். இவர் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் ஆஸ்தான வித்துவானாக இருந்ததோடு, தந்தி வாத்தியங்கள் வாசிப்பதில் அபார ஞானமுள்ளவர். இந்த வித்வான் சிவகங்கைக்கு வரும்போதெல்லாம் சிறுவன் சுத்தானந்தரை அழைத்து இராக தாளத்தோடு பிழையின்றிப் பயிற்சியும் அளித்தார்.

பின்னர் சுத்தானந்தர் பிடில் வித்வான் ராமசாமிராஜூ, நாயனக்காரர் மாயாண்டி, மதுரை பொன்னுசாமி இவர்களிடம் மேலும் இசை ஞானமும் பெற்றார். அடுத்து ‘பகவத் கீதை’ புகழ் இலக்குமணாச்சாரியார், மாங்குடி சிதம்பரபாகவதர், உள்ளூர் ராமதாஸ் பாகவதர் ஆகியோரிடம் கதாகாலட்சேபம் நிகழ்த்தும் பயிற்சியை மிக்க ஆர்வத்தோடு பெற்று, சிற்சில சமயங்களில் தனது நண்பர்களிடமும் தனது காலட்சேப நிகழ்ச்சிகளை நிகழ்த்திக்காட்டினார்.

தமது சங்கீதத் திறமையால் பாடிய கீர்த்தனைகளையெல்லாம் தொகுத்து ‘சங்கீத ஸாகரம்’ என்ற பெயரில், அதனைப் பாதுகாத்து வந்தார். ஊரில் எங்கே சொற்பொழிவு, இசை விருந்து நடந்தாலும் அக்கம் பக்கத்து ஊர்களில் நடந்தாலும், சுத்தானந்தர் அங்கே சென்று, தான் கேட்ட ராகம், தாளம் மற்றும் அபூர்வ கிருதிகளைத் தனியாகக் குறித்துக் கொள்வார். இவருக்கு, நாடகங்கள் பார்ப்பதிலும், அலாதிப் பிரியமுண்டு. தாமும் நாடகத்தில் சேர்ந்து நடிக்கலாமா என்ற எண்ணம் எழுந்தபோது நாடகங்களில் பெண்களும் கூடவே நடிப்பதினால், அது தமது கொள்கைக்கு முரணானதென்று உணர்ந்து, நாடக விருப்பத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்.

அந்த நாளில் நாட்டில் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துக் கிளம்பிய சுதேசி மக்களின் போராட்டக் கனல், சுத்தானந்தரையும் பற்றிக் கொண்டது. சிவகங்கை மன்னர் ஸ்ரீஉடையன ராஜாவின் மாப்பிள்ளை (மருமகன்) ‘டில்லி பாச்சா தேவர்’, தேசபக்தர் வ. உ. சிதம்பரனார், மகாகவி பாரதியார், சுப்ரமணிய சிவா, வ.வே.சு. ஐயர் போன்றோரின் போராட்டங்கள் இவரைத் தேச சேவைக்கு இழுத்தன. வ.வே.சு. ஐயரின் சுதந்திரப் போதனைகள் சுத்தானந்த பாரதியாருக்குத் தனி வழியைக் காட்டுவதாகவே இருந்தன. தவிர, புதுவையில் வ.வே.சு.ஐயரின் அந்தரங்கத் தூதுவராக இருந்ததினால், அந்நாளில் லோகமான்ய திலகர், லாலா லஜபதிராய், நேதாஜி, ஜியார்ஜ் ஜோஸப், ராஜா மஹேந்திர பிரதாப் போன்றோரிடம் ரகசியமான விஷயங்களைப் பரப்புவதில் இவர் தீவிரமாகவே உழைத்தார். இவர் ‘முழு மறை முகராக’ (அண்டர் கிரவுண்டு) துணிந்து செயல்பட்டார்.

‘மாவீரன்’ செண்பகராமன் பிள்ளையுடன் சுத்தானந்த பாரதிக்கு ரகசியக் கடிதத் தொடர்புகள் இருந்தன. இதனால் சென்னையில் 1974-ஆம் ஆண்டு ‘டாக்டர் செண்பகராமன் பிள்ளை நினைவு மன்றம்’ தொடங்கிய போது கவியோகி சுத்தானந்த பாரதியார் இம் மன்றத்தின் ஸ்தாபகரும், தலைவருமாக இருந்து தொண்டாற்றினார்.

புதுவையில் வ.வே.சு. ஐயர் ‘தமிழ்மறை’ எனச் சிறப்பித்துக் கூறும் திருக்குறளைத் தமிழினின்று ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அவருக்கு உதவியாக சுத்தானந்த பாரதியார் இருந்தார். ராஜதுரோக வழக்கில் வ.வே.சு. ஐயரை பிரிட்டிஷ் அரசாங்கம் கைதுசெய்து பெல்லாரி சிறையில் அடைத்தபோது ஐயரவர்கள் எழுதிய திருக்குறள் ஆங்கிலத் தொகுப்புகளைப் பத்திரமாகக் காப்பாற்றிய பெருமைசுத்தானந்த பாரதிக்கு உண்டு.



யோகாசன நிலையில்

இராமநாதபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு
மொத்த விற்பனைப் பண்டகசாலை லிட்., மதுரை.

வாடிக்கையாளர்களுக்கும், கூட்டுறவாளர்களுக்கும் எனது
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

1988, 1989 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் தமிழ்நாட்டிலேயே
தலைசிறந்த கூட்டுறவு நிறுவனம் எனப் பாராட்டுப் பெற்றுக்
கேடயம் பெற்ற நிறுவனம்.

ஆண்டு விற்பனை ரூ.35 கோடிக்கும் மேல்.

துவக்கம் முதல் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருகிறது.

'ராம்கோ'வின் சிறப்புத் தயாரிப்புகள்.

(1) பள்ளி மாணவர்களுக்கான நோட்டுப் புத்தகங்கள்.
(2) சுவைமிகு 'ராம்கோ' காபித்தூள்.

ராம்கோவில் நிலையான இட்டுவைப்பு செலுத்தி
13½%வரை வட்டி பெறுவீர்!

இவண்,
கே. கந்தசாமி,
தனி அலுவலர்.

குளித்தெழுந்ததும் குளிர்ச்சி
நாளெல்லாம் மகிழ்ச்சி

'கோவாப்'
சீயக்காய்த்தூள்
உபயோகியுங்கள்

தயாரிப்பாளர்கள்:

மதுரை கோட்ஸ் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலை லிமிடெட்,
ஏ.1449, மதுரை-625 010.

கிடைக்குமிடம்:

அனைத்துக் கூட்டுறவுப் பண்டகசாலைகள்
மற்றும்
மளிகைக்கடைகள்.

வ.வே.சு. ஐயர் சேர்மாதேவியில் குருகுலம் அமைத்தபோது சுத்தானந்தரும் அங்குச் சென்று 'பாலபாரதி' என்ற பத்திரிகைக்கு வ.வே.சு.வுடன் இணை ஆசிரியராகவும் இருந்தார். குருகுலத்து மாணவர்களுக்கு கல்விகளைப் போதிக்கும் ஆசிரியராகவும் இருந்து, மாணவர்களை உல்லாசப் பயணமாக அழைத்துச் செல்வார். மாணவர்களுக்கு கல்வி அறிவோடு, நீதிநெறிகளையும் நன்கு போதித்தார். இவரது தூய எண்ணம், இதற்கேற்ற வாழ்க்கையைக் கடைப்பிடித்து வருவதை அறிந்த வ.வே.சு. இவருக்கு 'வாழ்வைத் தவத்திற்கே நிலைக்களமாக்கியவர்' என்று- பாராட்டினார். வ.வே.சு. ஐயரும் அவர் மகள் சுபத்திரையும் கல்யாணி அருவியில் துர்மரணம் அடைய நேர்ந்தபோது அந்தத் துக்கம் தாளாமல் சுத்தானந்த பாரதி அவர்கள் ஒரு வார காலம் பட்டினி கிடந்தோடு, ஐயரவர்களின் நினைவாக 'வீர விளக்கு' என்ற அரிய நூலையும் எழுதினார்.

பின்னர் 'கவியோகி' தஞ்சாவூரில் 'சமரஸ போதினி' என்ற பத்திரிகையையும் நடத்தினார். அப்போது அவரது மனம் துறவறம் பூணுவதையே உறுதியாக்கியது. சாதி-மத வேறுபாடுகளில்லை. மனித சமுதாயம் முழுதுமே ஒரே குலம், உலகமெல்லாம் ஒரே வீடு, அனைத்திற்கும் ஒரே ஆத்மாதான். அன்பும் அருட்பணியுமே இன்ப வழி என்பது அவரது கொள்கைகள். இவர் ஆங்கிலத்தில் எழுதிய 'யோக சித்தி' என்ற நூலை மகாத்மா காந்தியடிகள் படித்து இவரது தத்துவங்களையும் அவரிடம் காணப்பட்ட ஆங்கிலத் திறமையையும் மெச்சினார்.

நாடு சுதந்திரம் அடைய வேண்டி ஆங்காங்கு நடக்கும் காங்கிரஸ் மாநாடுகளில் சுத்தானந்தர் கலந்து கொள்ளத் தவறியதே கிடையாது. தமிழில் 'சுயராஜ்ஜியா' என்ற பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்த போது 'கவியோகி' அடிக்கடி காங்கிரஸ் பிரமுகர்களான எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி, முத்துரங்க முதலியார் மற்றும் பலருடன் நெருங்கிப் பழகி வந்தார். தனது தீவிரமான அரசியல் கருத்துக்களை 'சுயராஜ்ஜியா'வில் வெளியிட்டார்.

இவரது தமிழ்நடை பல இளைஞர்களை ஊக்குவித்தது. விடுதலை இயக்கத்திற்குத் தனது பேராதரவை அளித்ததோடு, தமிழில் பற்பல் சிறு நூல்களையும் வெளியிட்டார். ஒரு சமயம் இவர் பாண்டிச்சேரியில் அரவிந்தர் ஆசிரமத்தில் பாரதநாடு சுதந்திரம் அடையும் வரையில் தீவிர மௌனமாக இருக்க சங்கல்பம் செய்து 1927 முதல் 1947 ஆகஸ்டு 15-ந்தேதி வரை அதனை மேற்கொண்டார். அந்த 20 ஆண்டுகள் 'கவியோகி' எவரிடமும் பேசா விரதத்தைக் கடைப்பிடித்து, நாடு சுதந்திரம் அடைந்ததும் தனது விரதத்தை வெற்றியுடன் முடித்தார்.

'கவியோகி' அவர்களின் பாரத சக்தி மகா காவியம்' என்ற நூல் சுமார் 50,000 வரிகள் கொண்ட கவிதை நூல். இது 5 காண்டங்களாக எழுதப்பட்டது. இதன் ஆரம்ப காலத் தொகுப்பைப் படித்த வ.வே.சு. ஐயர் அவர்கள் தமது முன்னுரையில், 'தவத்திற்கே வாழ்வை நிலைக்களமாக்கிய கவியோகி, அவரது தூய வாழ்வும், தவமும் என்னைக் கவர்ந்தன' என்று குறிப்பிட்டுள்ளார். இந்த நூலினைப் பாராட்டி மகாகவி பாரதியாரும், 'பாரத சக்தியைப் பார்த்தோம்; நன்றாய் இருக்கிறது; கம்பீரமாக இருக்கிறது; அது தமிழுக்கு அரிய கலைச் செல்வமாகும். அத்யாத்ம நிதியாகும்' என்றார். தேசாபிமானி வ.உ.சி. 'பாரத சக்தி பார் வியக்கும் பெருங்காப்பியம்' என்றார். மற்றும் பலரின் பாராட்டுகள் இந்நூலுக்குத் தனிச் சிறப்பைக் கூட்டுகின்றன. பல பெரியோர்கள் பேரறிஞர்கள் பெரிதும் பாராட்டிய இந்த 'பாரத சக்தி மகா காவியம்' என்ற நூலுக்குக் கவியோகி சுத்தானந்த பாரதியைப் பாராட்டும் வகையில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் 1983-84 ஆம் ஆண்டிற்கான தமிழ்ப் படைப்பிலக்கியப் பரிசாக 'மாமன்னன் ராஜராஜன்' விருதைக் கவியோகி சுத்தானந்த பாரதிக்கு வழங்கியது. 1984-ஆம் ஆண்டு மார்ச் 24-ல் மேதகு தமிழக ஆளுநர் குரானா அவர்களால் இந்தப் பரிசு வழங்கப்பட்டது.

அடுத்து 'யோக சித்தி' என்ற தலைப்பில் 405 குறள்களை அமைத்து வெளியிட்டார். இதனையே அவர் ஆங்கிலத்தில் "The Gospel of Perfect Life" என்ற தலைப்பில் எழுதியுள்ளார். மேநாட்டு பிரபல நாவ



• சுத்தானந்த பாரதியார் அறிவால், அன்பால், பாட்டால், உரையால், தமிழ்நாட்டைக் கொள்ளை கொண்டவர். இயற்கையில் தோய்ந்து இயற்கையுண்மையில் உறுதிகொண்டவர். ஒருமையில் நிற்கும் பெருமையாளர்.

-தமிழ்த்தென்றல்

• யோகி சுத்தானந்த பாரதியார் தவம் பெற்ற தவம். அவர் ஓர் வற்றாத இனிய தமிழ் ஊற்று. சுவாமிகளின் கவிதா சக்திப்பிரவாகமும், எழுத்துவன்மையும், யோக சித்தியும் உலகிற்குப் பெருநலமளிப்பதாகும். அவரது பாரத சக்தி, பாரதம் போன்றது.

-டாக்டர் உ.வே.சா.

• தமிழகத்தில் வாழும் தமிழ் முனிவர் திரு சுத்தானந்தபாரதியாரை அறியாதோர் அறியாதாரே. தமிழ்கூறும் நல்லுலகம் அன்னார் பாட்டையும் உரையையும் பொன்னே போலப் போற்றுகின்றது.

-டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை

• சுத்தானந்த பாரதியார் நூலை நான் கருத்துடன் படிப்பதுண்டு. அவரைப்போல் அற்புத நூல் யார் செய்யமுடியும்? ஒரு நாளைக்கு ஒரு நூல் எழுதவல்லவர்.

-மூதறிஞர் ராஜாஜி

லாசிரியரான விக்டர் ஹ்யூகோவின் ஆங்கில இருநாவல்களை தமிழில், 'ஏழை படும்பாடு', 'இளிச்சவாயன்' என்ற தலைப்புகளில் பெயர்த்தார். இவர் எழுதிய 'திருமூலரின் திருமந்திர விளக்கம்', இனிய தமிழ் இலக்கணம்' 'திருநூல் அல்லது தூய வாழ்வு, இரமண விஜயம், சங்கர விஜயம், அருளருவி, உடலுறுதி ஆகிய நூல்கள் பயனுள்ளவை.

இவர் தனது சொந்த வாழ்க்கை வரலாற்றைப் பற்றி 'ஆத்ம சோதனை' என்ற தலைப்பில் முதன்முறையாகவும், பின்பு 'சோதனையும் சாதனையும்' என்ற தலைப்பில் மற்றொரு பாகமும் வெளியிட்டுள்ளார். தமிழில் சுமார் 600-க்கு மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார். இன்னும் அச்சில் வெளிவர வேண்டிய நூல்களும் எழுத்து வடிவிலேயே இருக்கின்றன. தமிழ் நூல்களைத் தவிர ஆங்கிலத்தில் 'Yoga for all', 'Alwar Saints', 'Saint Meikandar', 'Sadhana', 'Pilgrim Soul' மற்றும் பல நூல்களை எழுதியுள்ளார்.

தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, சமஸ்கிருதம், ஹிந்தி, பிரஞ்சு ஆகிய ஆறு பாஷைகளைப் பிழையின்றிப் பேசவும், எழுதவும் ஆற்றல் மிக்கவர். இந்தியாவின் பல இடங்களில் சுற்றுப்பயணங்கள் செய்ததுபோல, போலந்து, ஜெர்மனி, நார்வே, சுவீடன், சோவியத் ரஷ்யா, ஜப்பான், சைனா, மலேஷியா, இலங்கை போன்ற வெளிநாடுகளுக்கும் சென்று தமிழின் பெருமையை விளக்கியதோடு, நமது தொல்பெரும் தெய்வப் பண்பையும் அந்நாட்டு மக்கள் எளிதாகவும், தெளிவாகவும் அறியும்படி செய்த தமிழ்முனிவர் ஆவார். தெய்வ மணம் கமழும் பயனுள்ள பன்னூல்களை எழுதிப் பைந்தமிழ் மக்களின் பெரும் மதிப்பைப் பெற்ற பெரியவராவார். தமிழ் சங்கீத நாடக சங்கத்தின் மான்ய உதவியுடன் இவரது இசைப் பாடல்கள்-'கீர்த்தனாஞ்சலி' என்ற பெயரில் சிறந்த சாகித்திய நூலாக வெளிவந்துள்ளது.

தற்காலத் தமிழிலக்கிய வரலாற்றில் தனிச்சிறப்பைப் பெற்றுப் பல்லாயிரக்கணக்கில் சாகித்தியங்களைப் புனைந்து நாத பிரம்மத்திற்கு இடைவிடாது வழிபாடு செய்த-பெருமை பெற்ற சிறந்த தமிழ் சாகித்திய கர்த்தாவாக விளங்கியவர். தவத்திரு கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள். இத்துறையில் இவருடைய கலைச்சேவையைப் பாராட்டி, தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் 'கலா சிகாமணி' என்ற சிறப்புப்பட்டத்தை 1968-ஆம் ஆண்டு மார்ச் 22-ல் இவருக்கு அளித்து கௌரவித்தது.

இளமையிலேயே இல்லற இன்பத்தைத் துறந்து, ஞான வாழ்வில் கலந்துவிட்ட கவியோகி சுத்தானந்த பாரதி இந்த ஆண்டு (1990) மார்ச் 7-ந்தேதி தமது 93-ஆம் வயதில் சிவகங்கைக்கு அருகிலுள்ள சோழபுரத்தில் காலமானார். மறுதினம் சர்வமத பிரார்த்தனை நடந்தபின் ஆசிரமத்திலேயே அமைக்கப்பட்டிருந்த சமாதியில் நல்லடக்கம் செய்யப்பட்டார். மறைந்த கவியோகி சுத்தானந்த பாரதிக்கு மரியாதை தெரிவிக்கும்வகையில் தமிழக அரசு, அன்னாரின் உடல் அடக்கத்திற்கு ஆயிரம் ரூபாய் அளித்து அஞ்சலியும் செலுத்தியது. 'கவியோகி' யாரின் பூத உடல் மறைந்தாலும் அவரது தனித்தமிழ்ப் புகழ் நிலைத்து நிற்பது உறுதி!

## ஒய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் மொழிக் காவலர்களுக்கு இலவசப் பேருந்துப் பயணம்

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் அறிவித்ததற்கிணங்க, மாநில அரசின் ஒய்வூதியத் தொகை பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள், மற்றும் மொழிக் காவலர்களுக்குத் தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களின் அனைத்துப் பேருந்துகளிலும் இலவசமாகப் பயணம் செய்ய அடையாள அட்டைகள் வழங்குவதுபற்றி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வாணையின்படி, இந்தச் சலுகையினால் பயன் அடைபவர்கள் தாங்கள் வாழ்ந்துவரும் பகுதியைச் சார்ந்த போக்குவரத்துக் கழகத்தின் நிர்வாக இயக்குநருக்குக் குறிப்பிட்ட படிவத்தில் தங்களுடைய சமீப காலத்தில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள் மூன்றுடன் மனுச் செய்ய வேண்டும். இதற்கான படிவம், சம்பந்தப்பட்ட போக்குவரத்துக் கழகத் தலைமையகத்தில் கிடைக்கும்.

மனுதாரர்கள் தங்களது ஒய்வூதியக்கொடுப்பு ஆணையின் சான்றொப்பமிட்ட நகலை மனுவுடன் இணைக்க வேண்டும். மனுவினைப் பரிசீலித்து சம்பந்தப்பட்ட போக்குவரத்துக் கழக அலுவலர் திருவள்ளுவர் போக்குவரத்துக்கழகம் உட்பட அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளிலும் பயணம் செய்ய இலவசப் பயண அட்டைகள் வழங்குவார்.

இந்தப் பயண அட்டை ஆண்டுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட வேண்டும். அடையாள அட்டை வழங்கப்பட்டதற்கான விவரங்கள் மனுதாரரின் மூல ஒய்வு ஊதியக்கொடுப்பு ஆணையில் குறிக்கப்படும். மேலும் இலவசப்பயண அட்டையைக் காண்பித்து திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய முன்பதிவு செய்து கொள்ளவும் அரசு அனுமதி அளித்துள்ளது.

### பாவேந்தரும் அண்ணாமலைப் பல்கலைக்கழகமும்

பேரறிஞர் அண்ணா அவர்களால் பாவேந்தரின் உருவப்படம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1950-ல் திறந்து வைக்கப் பட்டது.




நாவலர் சோமசுந்தர பாரதி அவர்களுக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் வழங்கிய நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பாவேந்தர் உரையாற்றியிருக்கிறார்.



# நெஞ்சினிக்கும் மெய்க் கவிஞர்!

— அகில். வரதராசன்



நீரோட்டம் இருந்தால்தான் கிணறு ஊறும்;
நினைவோட்டம் சிறந்தால்தான் பெருமை சேரும்;
வேரோட்டம் நீண்டால்தான் மரங்கள் ஓங்கும்
வெயிலோட்டம் சேர்ந்தால்தான் பசுமை தேங்கும்.
ஈரோட்டுப் பெரியாரின் கொள்கை யால்தான்
இனமானப் பகுத்தறிவுக் கவிதை ஊறும்.
பாராட்டுப் பெறும் புரட்சிக் கவிஞர் நூல்தாம்
படிப்பவரைக் கவிஎழுதத் தூண்டும் என்பேன்.

மூக்காலே நுகருகின்ற மணத்தி னுக்கும்,
முத்தமிடும் போதுவரும் இன்னோ சைக்கும்,
நாக்காலே உணருகின்ற அறு சுவைக்கும்,
நமக்கெல்லாம் கண்போன்ற மொழியி னுக்கும்
பாக்கதனைப் பிளந்தாற்போல் நறுக்குத் துண்டாய்ப்
பாட்டளித்த பாவேந்தர்; மக்கள் நெஞ்சில்
நீக்கமற நிறைந்திருக்கும் இவரைப் போல
நெஞ்சினிக்கும் மெய்க்கவிஞர் எங்கே உண்டு?

மண்ணுரிமைப் போராட்டம் நடந்த போதே
மனிதர்க்கும் நல்லுரிமை வேண்டும் என்றார்.
பெண்ணுரிமை இருந்தால்தான் மனிதர் பெற்ற
பேருரிமை சிறக்குமெனப் புரட்சி செய்தார்.
கண்ணனைய மொழிகாத்து நாடு காத்துக்
காலமெலாம் தொண்டாற்றி வாழ்க என்றார்.
பண்ணிசைக்கும் பகுத்தறிவுக் கவிதை தந்த
பாவேந்தர் புகழ்பாடி வணங்கு வோமே!



இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி:



# நெசவுத் தொழில் வளர்ப்போம்! நெசவாளர் துயர் துடைப்போம்!

**36**-வது கைத்தறி விழாவின் நிறைவு நாள் விழா, 17.5.90 அன்று, சென்னை– எழும்பூர் கோ-ஆப்டெக்ஸ் வளாகத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

கைத்தறிக் கண்காட்சியின் இறுதி நாளான அன்று, திரளான மக்கள் அங்கே கூடியிருந்தார்கள்.

மங்கல இசையுடன் விழாத் தொடங்கியது.

கோ-ஆப்டெக்ஸ் மேலாளர்–இயக்குநர் திரு என்.பி. குப்தா இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

விழாக்குழு உறுப்பினர் திரு எஸ்.ஏ.எம். உசேன் அவர்கள் பேசுகையில், கைத்தறியின் சிறப்பினை எடுத்துக்கூறினார்.

திரு பரிதி இளம்வழுதி எம்.எல்.ஏ., அவர்கள் பேசுகையில், ''கடந்த ஆண்டில் நஷ்டக் கணக்கைக் காட்டி வந்த இந்தத் துறை **இப்போது** லாபக் கணக்கைக் காட்டி வருகிறது'' என்றார்.

விழாக்குழு உறுப்பினர் திரு பரமத்தி சண்முகம் அவர்கள் பேசுகையில், ''ஏழை நெசவாளர் குடும்பங்களின் பாதுகாவலர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஆவார் '' என்றார்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் எம்.எல்.ஏ., அவர்கள் பேசுகையில், ''விவசாயத்துக்கு அடுத்தபடியாகக் கைத்தறி உள்ளது. விவசாயிகளும், நெசவாளர்களும் முன்னேறினால், நாடு நலமாக இருக்கும். கைத்தறித்துணி தேக்கமில்லாமல், இன்று விற்பனையாகிக் கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது'' என்றார்.

திரு கோ. பூவராகன் எம்.எல்.ஏ., அவர்கள் பேசுகையில், ''விவசாயத்தையும், கைத்தறியையும் இரு கண்களாகப் பாவித்து, அரசு நல்ல முயற்சி எடுத்து வருகிறது'' என்றார்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர திட்சிதர் எம்.எல்.ஏ., அவர்கள் பேசுகையில், ''தமிழ்நாட்டில் பல இலட்சம் நெசவாளர் குடும்பங்கள் உள்ளன. அவர்களுக்கு இலவச சேலை, வேட்டி கொடுப்பது கலைஞரின் சாதனை'' என்றார்.

திரு எம். அப்துல் லத்தீப் எம்.எல்.ஏ., அவர்கள் பேசுகையில், ''கலைஞர் ஆட்சி கைத்தறிக்கு முன்னுரிமையும் முக்கியத்துவமும் அளிக்கிறது. நெசவாளர்களின் ஏக்கங்களைப் போக்கிட-தேக்கங்களை நீக்கிட இந்தக் கண்காட்சி அமைந்திருக்கிறது'' என்றார்.

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு எஸ். தங்கவேலு அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், ''தி.மு.க. அரசு, பொறுப்பேற்ற பிறகு கைத்தறித் துணிகளில் 160 புதிய டிசைன்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 70 கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகளும், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் 117 கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகளும் விற்பனை ஆகாமல் தேங்கியிருந்தன. அரசு பொறுப்

பேற்ற பிறகு கைத்தறித் துணிகளில் தேக்கம் நீக்கப்பட்டுள்ளது" என்றார்.

முன்னதாக, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு, மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு எஸ். தங்கவேலு அவர்கள் பொன்னாடை அணிவித்து, விழாக்குழு சார்பில், வள்ளுவர் கோட்டக் கண்ணாடிப் பேழையை நினைவுப் பரிசாக வழங்கினார். அதேபோல, மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினார்.

25 ஆண்டுகள், இலாபத்துடன் இயங்கிய சங்கங்களுக்குக் கேடயங்களையும், நெசவாளர் குடும்பங்களைச் சேர்ந்த மாணவ மாணவியருக்குக் கல்வி உதவித் தொகையையும் வழங்கி மாண்புமிகு முதல்வர் அவர்கள் **பேசியதாவது:-**

"இங்கே உரையாற்றிய நம்முடைய அன்புக்குரிய நண்பர்கள் அனைவரும் இந்தியத் திருநாட்டில் வேளாண் தொழிலுக்கு அடுத்த தொழிலாக நெசவுத் தொழில் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இடத்திலே அது இரண்டாவது இடத்தை வகித்தாலும், அவசியத்தில் முதலிடம் வகிக்கின்ற தொழில் நெசவுத் தொழிலாகும். நாம் வழக்காற்றலில் உணவு, உடை, உறையுள் என்று குறிப்பிட்டாலும் கூட உடைதான் முதலில். இரண்டாவது தேவைதான் உணவு. மானம் பெரிதா? உயிர் பெரிதா? என்ற கேள்வி எழும் போது உயிர் பெரிது என்று உள்ளபடியே உயிரைப் பெரியதாக எண்ணுபவன் கூட சொல்ல மாட்டான். உலகத்திற்குப் பயந்து 'மானம்தான் பெரிது' என்று சொல்லுவான்.

எனவே உயிர் வளர, உயிர் இருக்க உணவு தேவை என்றாலும் கூட, உணவு, உடை என்று நாம் சொன்னாலும் கூட உடைதான் முதலில், உணவு அடுத்து; கல்தோன்றி மண் தோன்றாக்காட்டு மிராண்டிக் காலத்தில் உணவு முதலிடத்தை வகித்தது. ஆனால், மனிதன் உலகத்தை உணரத் தலைப்பட்ட போது உடைதான் முதலிடம் வகிக்கத் தொடங்கியது. அன்று தொடங்கியது இன்று வரையில் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. உணவு இல்லாமல் ஒரு நாள், இருநாள்கூட இருந்து விடலாம். உணவு இல்லாமல் நடுத்தெருவிலே பந்தல் போட்டுக் கொண்டு உண்ணாவிரதம் கூட இருக்கலாம். ஆனால், உடையில்லாமல் நடுத்தெருவிலே நிற்பவரைக் கண்டால் ஆயிரம் பேர் கல் எடுத்து எறிவார்கள்.

எனவே மானமா? உயிரா? என்ற கேள்வி எழும்போது மானத்தைக் காப்பாற்ற உடை தேவை. எனவே, மானத்தை முதலிடத்திலே வைத்து எண்ணுகின்ற மனிதனுக்கு, உடை மிக அவசியமானது. வீதியில் ஒரு மத்திய இடத்தில் ஒரு கிண்ணத்திலே சோறு வைத்து—அதற்குக்கொஞ்சம் அப்பால் ஆடைகளையும் வைத்து ஒரு வேட்டியையும் வைத்து ஒரு நிர்வாண மனிதனை ஓட விட்டு - போய்ச்சாப்பிடு என்று சொன்னால், அப்படி நிர்வாணமாக விரட்டி அடிக்கப்பட்ட மனிதன் ஓடிப்போய் முதலில் சாப்பிட்டுவிட்டு, ஆடையை உடுத்துவானா? அல்லது ஆடையை உடுத்திக் கொண்டு சாப்பிடுவானா? என்றால் ஆடையை எடுத்து உடுத்திக் கொண்டுதான் சாப்பிடுவான். எனவே, உடை முக்கியம் முதலாவது, உணவு இரண்டாவது.

இன்று பெரிய தொழிலாக இந்தியா முழுவதும் உழவர்கள் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாக உழவுத்தொழில், விவசாயத் தொழில் இருந்தாலும் கூட மானத்தைக்காப்பாற்றுகின்ற நெசவாளப் பெருங்குடி மக்கள் மானத்தைப்பாதுகாக்கின்ற அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற மக்கள், அந்த நெசவாளிகளுடைய வாழ்க்கையை மையமாக வைத்து, எனக்கு முன்னால் இங்கே உரையாற்றிய அப்துல் லத்தீப் அவர்கள் எடுத்துக்காட்டியது போல, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தப்பொருளாதார வட்டத்தை உருவாக்கினார்கள். நெசவாளியினுடைய வாழ்க்கை தாழ்ந்து, தாழ்ந்து, தாழ்ந்தே போய்க் கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தார். பேரறிஞர் அண்ணா எண்ணிப் பார்ப்பதற்கு உரிய இடத்திலே இருந்த காரணத்தால், இன்னும் சொல்லப்போனால் ஒரு நெசவாளர் குடும்பத்தில் பிறந்தவர் என்ற காரணத்தால் நெசவாளர்கள் மத்தியிலே காஞ்சியிலே வாழ்ந்தவர், அவர்களோடு இரண்டற கலந்தவர் என்ற காரணத்தால் அவர்களுடைய வாழ்வின் கஷ்ட நஷ்டங்களையெல்லாம் புரிந்தவர் என்ற காரணத்தால் அவர்களுடைய வாழ்வு பட்டுப் போகாமல் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, தான் எந்த இயக்கத்திற்கு தலைமையேற்றாரோ அந்த இயக்கத்தை—கைத்தறி நெசவாளர்களுக்காகப் பாடுபடுகின்ற– பணியாற்றுகின்ற– இயக்கமாக இருந்திடல் வேண்டும் என்று கருதினார்.

கிராமப்புறத்திலே தொழிலை வளர்க்கவும், கிராமப்புறத்து மக்களுக்கு அவர்களால் இயன்ற தொழிலை அவர்களுக்கு வழங்கவும், அதன்மூலம் அவர்களும் பயன்பெற்று அவர்களைப் போன்ற ஏழை, எளிய நடுத்தர மக்கள் மலிவான விலையிலே உடைகளைப் பெறவும் காந்தியடிகள் கதர்த்திட்டத்தை அறிமுகப் படுத்தினார். கதர்த்திட்டம் எப்படி கிராமப்புறத்தில் ஏழை, எளிய மக்களுக்குத் தேவையான ஒன்றோ அதைப்போல, இன்னும் சொல்லப் போனால் அதைவிட மேலாக ஆண்டாண்டு காலமாக ஒரு தொழிலை நம்பி இருக்கின்ற நெசவாளர்கள்- அந்தத் தொழில் நசிந்தால் தங்களின் வாழ்வு, எதிர்காலம் அனைத்தும் நசிந்து விடும் என்கின்ற ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு அந்தத்தொழில் மேம்பாடு அடையவும் அந்தத்தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற நெசவாளப் பெருங்குடி மக்கள் நல்வாழ்வு எய்திடவும், பல்வேறு திட்டங்களைத்தீட்ட வேண்டும் என்று அண்ணா அவர்கள் விரும்பினார்கள். ஆனால் அவர்கள் விரும்பிய நேரத்திலே ஆட்சிப் பொறுப்பிலே அவர்கள் இல்லை. இல்லாவிட்டாலும் கூட ஆட்சியைப்பற்றி எண்ணிப் பார்க்காத 1952-ஆம் ஆண்டிலேயே – எனக்கு முன்னால் இங்கே பேசியவர்கள் கோடிட்டுக் காட்டியது போல தேங்கிக்கிடக்கின்ற கைத்தறித் துணிகள்- அவை சந்தையிலே விலைபோக வேண்டும் என்கின்ற எண்ணத்தோடு அவற்றைத் தானே தூக்கி, சுமந்து, தன்னைப் போலவே தன்னுடைய இயக்கத்திலே உள்ளவர்கள் எல்லாம் தூக்கி, சுமந்து, வீதி வீதியாக விற்பனை செய்ய வேண்டும் என்று ஆணையிட்டு அப்படி 1952-ஆம் ஆண்டு ஒரு நாள் அந்த நிகழ்ச்சி நடைபெற்ற காரணத்தால் தேங்கிக் கிடந்த கைத்தறித் துணிகளுக்கு நல்ல சந்தை ஏற்படவும், கைத்தறித் துணியைப்பற்றிப் பொதுமக்கள் எண்ணிப்பார்க்கவுமான ஒரு சூழ்நிலை உருவாயிற்று.

அதன் பின்னர் பதினைந்து, இருபது ஆண்டுகளுக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள்



**கைத்தறிக் கண்காட்சித் தொடக்க விழாவில்...**

# TAXIS ARE ALWAYS AVAILABLE

## K.S. KANDASAMY

SPEEDWAYS TAXI SERVICE
86, WEST PERUMALKOIL STREET,
MADURAI.

**PHONE NO: 37551**



**மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட், மதுரை 625 001.**

சேமிப்பு தொடர்வது முன்னே!
செல்வங்கள் வளர்வது அதன பின்னே!
சேமிப்பைத் தொடர்வோர்
செல்வங்கள் சேர்ப்போம்-
சேமிக்க ஏற்ற வங்கி
செல்வம் பெருக்கும் வங்கி
சேவைக்கு சிறந்த வங்கி
அதுவே
உங்கள்

**M.D.C.C. வங்கி.**

உங்களுக்குச் சேவை செய்ய மதுரை மாவட்டததில் 34 கிளைகள்
திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் 19 கிளைகள்.

110 கோடி ரூபாய்க்குமேல் டெபாசிட்டுடன் தொடர்ந்து முன்னேறி வரும் உங்கள் M.D.C.C. வங்கியில் முதலீடு செய்து இதர வர்த்தக வணிக வங்கிகளைவிட ½ சதவிகிதக் கூடுதல் வட்டி பெற்றுப்பயனடையுங்கள்.

வங்கியின் நடைமுறை மூலதனம் ரூ.200/-கோடிக்கு மேல்; வழங்கப்பட்டுள்ள மொத்தக் கடன் தொகை ரூ.160/ கோடிக்கு மேல். கடந்த ஆண்டு ஈட்டியுள்ள நிகர இலாபம் ரூ.128.25 லட்சம். பங்குதாரருக்கு வழங்கப்பட்டுள்ள டிவிடெண்ட் 12 சதவிகிதம்.

வேளாண்மைப் பெருமக்களுக்குக் குறைந்த வட்டியில் பயிர்க்கடன் மற்றும் விவசாயத்தைச் சேர்ந்த இதரக் காரியங்களுக்கு மத்தியக் காலக்கடன் வழுங்கப்படுகிறது.

விவசாயத்திற்குத் தேவையான இடு பொருட்கள் தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் மூலம் உரிய காலத்தில் வழங்கப் படுகிறது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் வழங்குவதன் மூலம் நெசவாளர்களுக்கு நேசக்கரம் நீட்டுகிறது இவ்வங்கி. நலிந்த பிரிவினருக்கு கடன், இவ்வாறு தமிழக அரசின் பல்வேறு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்துகிறது மதுரை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி.

இவ்வங்கியினை அணுகுவீர்! பயனடைவீர்!!

**தனி அலுவலர்,**

## பாவேந்தர் நூற்றாண்டு:



# தமிழர் தந்தை

தீமைதரும் தமிழ்ப்பகைவர் தம்மைச் சார்ந்து
திருநாட்டின் பெருமையினை, தமிழ்ப்பண் பாட்டை
ஏமமுறும் இலக்கியமாம் செல்வந் தன்னை
இத்தனையும் அழித்தொழித்தோம்; அந்த நாளில்
ஊமைஎன இருந்தானா? இல்லை இல்லை;
உயர்தந்தை கடமைகளை உணர்ந்த மேலோன்
தீமைஎன இடித்துரைத்தான் பகைவர் தம்மைச்
சேராதீர் எனப்புகன்றான் எங்கள் தந்தை

இனிமைமிகு தமிழ்மொழியைப் படித்தல் இன்றி
இங்குவந்த சழக்கரையே கூடி நின்று
கனிவுதரும் அவர்வஞ்சப் பேச்சில் சிக்கிக்
கண்கலங்கி நின்றிருந்தோம்; அந்த நாளில்
நனியன்பு மிக்கநல்லான் "மக்காள் அந்தப்
புல்லுருவி நாடாதீர்? உறிஞ்சித் தீர்ப்பார்
இனிஉங்கள் தமிழ்பயில்வீர்" என்றே எம்மை
இடித்துரைத்துத் திருத்தினன்காண் எங்கள் தந்தை

புதுமைமிகும் இலக்கியமாம் செல்வந் தந்தான்,
புரட்சிசெய வீரரென ஆக்கி விட்டான்,
பதுமைஎன வாழாமல் தமிழ மக்கள்
பகுத்தறிவால் அவைமுன்பில் இருக்கச் செய்தான்
எதுகையுடன் மோனைபெறும் கவிதை யாக்கும்
இளங்கவிஞர் பரம்பரையைத் தோற்று வித்தான்,
அதுவன்றித் தமிழ்நலமே நாடு கின்றான்
அக்கவிபா ரதிதாசன் தந்தை யன்றோ?

**கவியரசு முடியரசன்**

சட்டமன்றத்திலே எதிர்க் கட்சிகள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்தபோது திட்டவட்டமாக-தெளிவாக விளக்கினார்கள். 'நான் கைத்தறித் துணிக்கு முன்னுரிமை தருகின்ற காரணத்தால் கதரைக் கைவிடுவேன் என்று யாரும் எண்ணத் தேவையில்லை. கதர்வாரியம் அகற்றப்பட்டு விடும் என்று, யாரும் எண்ணத் தேவையில்லை' என்று கூறி, கிராமப்புறத்திலே இன்றுள்ள சூழ்நிலையில் பொருளாதாரம் வளர வேண்டுமேயானால் அந்த பொருளாதார வட்டத்திற்குள்ளே பட்டிக்காட்டுப் பகுதிகளில் குக்கிராமங்களில், கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் தங்களுடைய, வாழ்க்கையை நகர்த்த வேண்டுமேயானால் இந்தத் திட்டங்கள் உடனடியாக கைவிடப்படக் கூடியவைகள் அல்ல. வேகமாக வளர்ந்து வருகின்ற விஞ்ஞான உலகம் ஒருபுறம் இருந்தாலும்கூட இன்னொரு புறத்திலே அந்த விஞ்ஞான வேகத்தை அப்படியே இன்றைக்கு ஏற்றுக் கொள்ள முடியாத நிலைமையிலே இருக்கின்றது இந்தியநாடு. அந்த விஞ்ஞானத்தை முழுக்க முழுக்க கடைப்பிடிக்க முடியாத நிலையில் இருக்கின்ற இந்திய நாடு- பல கோடி மக்களை ஏழைகளாகப் பெற்றிருக்கின்ற இந்திய நாடு இதுபோன்ற பொருளாதாரத்திலே தான் கொஞ்ச காலம் வாழ வேண்டியிருக்கிறது என்ற மையக்கருத்தை உள்ளடக்கி கைத்தறி, கதர்த்திட்டங்கள் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள்.

ஆனால் அண்ணா அவர்களுடைய மறைவிற்குப் பிறகு அவரால் உருவாக்கப்பட்ட ஆட்சியைத் தொடர்ந்து நடத்திய நாங்கள் அண்ணா அவர்களுடைய எண்ணத்தை ஈடேற்றுகின்ற வகையில் நெசவாளர்களுடைய துயரத்தைப் போக்க எத்தனையோ திட்டங்களை அறிவித்தும், நிறைவேற்றியும் வந்தாலும் இன்னமும் முழுமையான மகிழ்ச்சியடையக் கூடிய அளவிற்கு நெசவாளர் வாழ்வுத் தரம் உயர்ந்துவிட்டதாக நான் கருத இயலாது. நீங்களும் கருத மாட்டீர்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், "கைத்தறியே அணிய வேண்டும் என்று சூளுரை மேற்கொள்க" என்று நான் சொன்னாலும் கூட, நான் இங்கேயே இந்த மேடையிலேயே கண்டேன். கைத்தறி, கூட்டுறவைச் சேர்ந்தவர்கள் என்னிடத்திலே பரிசு பெறவந்தபோது அவர்கள் உடுத்தியிருந்த ஆடைகளைத் தொட்டுப் பார்த்து இது கைத்தறியா என்று கேட்டேன். அவர்கள் புன்னகை புரிந்து நாணிக்கோணிஇல்லை மல் துணி' என்று பதிலளித்தார்கள். எல்லோரும் அல்ல, ஒரு சிலர். ஒரு சிலர் என்று கைத்தறியின் மீதுள்ள அன்பின் காரணமாகச் சொல்கிறேன். மிகச் சிலரல்ல, பெரும்பான்மையோர்; ஒரு சிலர்தான் கைத்தறியோடு காணப்பட்டார்கள். எனவே, பரிசு வாங்குகின்ற அளவிற்குப்புகழும் பெருமையும் பெற்றிருக்கின்றவர்கள்- அந்தத் துறையிலே தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றவர்கள்- அவர்களே கூட கைத்தறியை அணிய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறதென்றால் - கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்வை நாம் அனைவரும் சேர்ந்து ஈடேற்ற வேண்டும் என்கின்ற முயற்சியில் ஒரு ஊனம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும்.

இந்தத் துறை, மீண்டும் இந்த ஆட்சி அமைந்த பிறகு நம்முடைய அமைச்சர்-தம்பி தங்கவேலு அவர்களுடைய பொறுப்பில் மிக நேர்த்தியாகச்செயல்பட்டு வருகிறது என்பதனை எனக்கு முன்னால் இங்கே பேசிய அனைவரும் எடுத்துச் சொல்லி இருக்கின்றார்கள். குறிப்பாக இந்த அரசு பொறுப்பேற்ற கடந்த ஆண்டில் தமிழ் நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள் சேலம் ஆலை ஒன்றைத் தவிர 18 ஆலைகளில் மற்ற எல்லா ஆலைகளும் நஷ்டத்திலே தான் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அதுவும் சாதாரணமாக அல்ல, 35 கோடி ரூபாய் நஷ்டத்தில் சேலத்தைத் தவிர 18 ஆலைகளிலே மற்ற ஆலைகள் அனைத்தும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. கடந்த ஒரே ஆண்டில் 7 கோடி ரூபாய் லாபத்திலே இயங்குகின்ற அளவுக்கு முயற்சியிலே ஈடுபட்டு - 35 கோடி ரூபாய் நஷ்டம் என்பதை 28 கோடி ரூபாய் என்கின்ற அளவுக்குக்குறைத்த பெருமை இந்த

அரசைச்சாரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக்கடமைப் பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே கோ-ஆப்டெக்ஸ், அதிலேகூட கடந்த 3 ஆண்டுகளில் நஷ்டத்தில் இயங்கி வந்தது. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றபிறகு அந்த நஷ்டத்தைக்கடந்து 3 கோடி ரூபாய் லாபம் ஈட்டுகின்ற அளவுக்கு கோ-ஆப்டெக்ஸ் இன்று நல்ல முறையிலே முன்னேறி இருக்கிறது என்பதையும் நான் எடுத்துக் காட்டக்கடமைப்பட்டிருக்கின்றேன்.

நல்லவைகளைச்செய்யும்போது கூட இடையிலே சில பொல்லாதவர்கள் நுழைந்து விடுகின்ற காரணத்தால் நல்லவைகள் யாரைப் போய்ச்சேர வேண்டுமோ அவர்களைப் போய்ச்சேராத ஒரு இடர்நிலை இன்றைக்கு நாட்டிலே இருக்கின்றது.

எந்த ஒரு நல்ல காரியத்தை ஒரு அரசு செய்தாலும் அதைக் கெடுப்பதற்குச் சில பேர் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பெயர்தான் சமுதாய விரோதிகள் என்பதாகும்.

அந்தச் சமுதாய விரோதிகள் எங்கும் இருக்கிறார்கள். இலவச வேட்டி, சேலை கொடுத்தால் தங்களுக்கு கொடுத்ததாக வைத்துக் கொண்டிருக்கின்ற சமுதாய விரோதிகள் இருக்கிறார்கள். அது ஏழை, எளியவர்களுக்குக் கொடுத்ததாக எண்ணாமல் இடையிலே உள்ள தரகர்களுக்குத் தந்ததாக எண்ணிக் கொண்டிருக்கின்ற சமுதாய விரோதிகள் இருக்கிறார்கள். அதைப் போலவே ஏழை, எளிய மக்கள், இல்லாதவர்கள், சாதாரணமான சாமான்ய மக்கள் - அவர்களுக்காக்ச் செய்யப்படுகின்ற காரியங்களைத் தடுத்து நிறுத்துகின்றவர்கள் - அதைத் தங்களுக்கே உரியதாக ஆக்கிக் கொள்கின்ற தன்னலவாதிகள் இன்னமும் சமுதாயத்தில் இருக்கின்ற காரணத்தினாலேதான் ஒரு அரசின் நற்செயல்கள் அனைத்தும் யாரைப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களைப் போய்ச் சேராமல் தடுக்கப்பட்டு விடுகின்றன. அவைகளுக்குப் பொதுமக்களுடைய ஒத்துழைப்பு நிரம்பத் தேவை. அப்படிப்பட்டவர்களைக் கண்டுபிடிக்க போலீஸ் துறை ஒன்றால் மாத்திரம் முடியாது. ஐந்து கோடி மக்கள் வாழ்கின்ற தமிழகத்தில் ஐம்பதாயிரம், அறுபதாயிரம் போலீசார்தான் இருக்கிறார்கள். அவர்கள் மாத்திரம் இந்த ஐந்து கோடி மக்களிலே இருக்கிற சமுதாய விரோதிகளைக் கண்டு பிடித்து விட முடியாது. ஏனென்றால் அந்த ஐம்பதாயிரம், அறுபதாயிரம் பேரிலே சிலபேர் சமுதாய விரோதிகளாக இருக்கின்ற காரணத்தால் அதிலேகூடக் கஷ்டம் இருக்கிறது. எனவே, அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் சமுதாய விரோதிகள் இருக்கிறார்கள். ஒளிந்து கொண்டு - மறைந்து கொண்டு - பச்சைக் கொடியோடு படர்ந்திருக்கின்ற பச்சைப்பாம்பு போல், பச்சைக் கொடிக்கும் பச்சைப்பாம்புக்கும் வித்தியாசம் தெரியாமல் திகைக்கிற நிலைமைக்கு - நல்லது செய்ய வேண்டும் என்று எண்ணுகிற ஒரு அரசு இருப்பது போல அவர்கள் இன்றைக்கு ஒளிந்து கொண்டிருக்கிறார்கள். மறைந்து கொண்டிருக்கிறார்கள் - இன்னும் சொல்லப் போனால், அவர்கள் இருக்கின்ற இடத்திற்குத் தகுந்தாற்போல், நிறத்தை மாற்றிக் கொள்ளும் தந்திரம் கற்றவர்களாகவும் இருக்கின்றார்கள். இந்த நிலையில் ஒரு அரசோடு ஒத்துழைக்க வேண்டிய பெரும் பொறுப்பு பொதுமக்களுக்கு இருக்கின்றது. அந்தப் பொதுமக்கள்தான் அவர்களையெல்லாம் அடையாளம் காட்ட வேண்டும். அப்பொழுதுதான் நாம் எண்ணுகின்றவை, நாம் செய்கின்ற செயல்பாடுகள் அனைத்தும் தக்கவரை, உரியவரை – போய்ச் சேர இயலும். அந்த வகையிலே நீங்கள் இந்த அரசோடு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வளவு பேர் ஒரு அறிவிப்பு வராதா என்று கேட்டபிறகு ஒரு சின்ன அறிவிப்பையாவது செய்யாவிட்டால் அவர்களுக்கு பெரும் குறை உள்ளத்திலே இருக்கும் என்கின்ற காரணத்தால் ஒரு சிறிய அறிவிப்பை நான் கோ-ஆப்டெக்சிலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்காக இங்கே வெளியிட விரும்புகிறேன்.

நீண்ட நாள் அவர்களுடைய கோரிக்கையாக இருந்து வரும் சம்பள உயர்வுகள்- கோ-ஆப்டெக்ஸ் ஊழியர்களின் கோரிக்கையை ஏற்று மொத்த ஊதிய உயர்வாக எல்லா ஊழியர்களுக்கும் 150 ரூபாய் உயர்த்தித்தரப்படும் என்கின்ற ஒரு இனிய அறிவிப்பை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொண்டு, இதனால் 2,500 கோ-ஆப்டெக்ஸ் ஊழியர்கள் பயனடைவார்கள் என்பதையும் தெரிவித்து, மேலும், நம்முடைய துறை அமைச்சரும் அரசு அதிகாரிகளும் அனைத்துத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் மாநில கைத்தறி உயர்மட்டக்குழு உறுப்பினர்களும் கலந்துபேசி எடுத்த முடிவின்படி அதிக விற்பனை செய்யும் கோ-ஆப்டெக்ஸ் ஊழியர்களுக்கு அதிக ஊக்குவிப்பு தரக்கூடிய புதிய விகிதாச்சாரத்தில் ஊக்குவிப்பு தரகு முறையையும் மாற்றி அமைத்து 89-ஆம் ஆண்டுக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. கோ-ஆப்டெக்ஸ் ஊழியர்களின் சம்பள உயர்வையும் புதிய ஊக்குவிப்பு தரகு முறையின் பயனையும் அடைந்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனையை மேன்மேலும் அதிகப்படுத்தி அதன் மூலம் ஏழை நெசவாளர் வாழ்வும் வளமும் பெற ஒவ்வொரு ஊழியரும் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த இனிய விழாவிலே நான் கேட்டுக் கொண்டு உங்களையெல்லாம் காணுகின்ற நல்ல வாய்ப்பு கிட்டியமைக்காக நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

விழாக் குழு உறுப்பினர் திரு ச.சி. பெருமாள் அவர்கள் நன்றி நவின்றார்.

விழா இறுதியில், வழுவூர் திரு சாம்ராஜ் குழுவினர், கலைஞரின் 'சங்கத்தமிழ்' நாட்டிய நாடகத்தை நடத்தினர்.

—நமது செய்தியாளர்


WITH THE BEST COMPLIMENTS
FROM

A.P. ARUNACHALAM
PROPRIETOR
HOTEL APPOLO
NO.1, T.P.K. ROAD
MADURAI-1.



# நிலம், நீர் வளம் காப்போம்

ச. சவடமுத்து
தலைமைப் பொறியாளர்
வேளாண்மைப் பொறியியல் துறை, சென்னை.

பசுமையான காட்சிகள்-இயற்கை வளத்தின் தோற்றங்கள் எங்கு பார்த்தாலும் பச்சைப்பசேலெனக் காணும் புல்தரைகள், புதர்கள், பூத்துக் குலுங்கும் செடிகள், வண்ண வண்ணப் பூக்கள், பல்சுவைக் கனிகள், இவற்றை ஏந்தி நிற்கும் செடிகள், மரங்கள், தோப்புகள், அவற்றை உண்டு வாழும் பறவைகள், வன விலங்குகள், அவை எழுப்பும் இனிய குரல்கள், குயில்களின் சங்கீதம், குரங்குகளின் சேட்டைகள், ஆயிரக் கணக்கான பூச்சிகள், வண்டுகள், புழுக்கள் வாழும் வனங்கள், இவற்றினால் உண்டாகும் நாதங்கள், குளுமையான சூழல், காற்று, சாரல் மழை, கண்ணாடி போன்ற மாசு மருவற்ற நீரோட்டம், நீர்வீழ்ச்சி, நீர்த்தேக்கம், அவற்றில் வாழும் ஆயிரக்கணக்கான உயிரினங்கள் இவையெல்லாம் பசுமையான கண்ணிற்கும் மனதிற்கும் குளுமை மற்றும் வளமையூட்டும் காட்சிகளாக, காடுகளாக, நீர்நிலைகளாக நமது கண் முன் நிற்கின்றன.

இதுபோன்ற பசுமையான சூழல் நீர்நிலைகள், இவற்றில் வாழும் உயிரினங்கள், மாசு மருவற்ற மென்மையான காற்று, இவையெல்லாம் ஒருங்கிணைந்து பறைசாற்றும் நிலையைத்தானே இயற்கை வளம் என்கிறோம்.

இயற்கையின் படைப்பிலே மனித குலம், மற்றெல்லா உயிரினங்கள், மரம் செடி கொடி, புல்பூண்டு ஆகிய தாவரங்கள், நீர்நிலைகள் இவற்றில் வாழும் உயிரினங்கள் ஆகிய யாவையும் ஒன்றையொன்று அழித்துக்கொள்ளாமல் ஒருங்கிணைந்து இனிய வாழ்வு கண்டு இயற்கை வளம் பேணுதல்தான் நம் இனிய பணி.

எங்கெல்லாம் இந்த நியதிகள் மீறப்படுகின்றனவோ அங்கெல்லாம் இயற்கையின் சீற்றத்தைக் காணலாம். மரங்களை வெட்டி, காடுகளை அழித்து நிலத்தைப் பிளந்து, மழையாலும் காற்றாலும் வளமான மண்ணைப் பறிகொடுத்து, மனிதனின் சதையும் இரத்தமும் போலுள்ள மேல்மண்ணை இழந்து விட்டால் நாளடைவில் நிலம் தரம் குறைந்து, நீர்கொள்ளும் திறனிழந்து, மண்ணிலுள்ள ஊட்டத்தையிழந்து, காசநோயால் வலுவிழந்து , எலும்புக் கூடாக வாழும் பயனற்ற உடலைப் போன்று பாலைவனமாகக் காட்சி அளிக்கும் நிலையுண்டாகிறது. உலகில் பாலைவனமாகியுள்ள பல்வேறு பகுதிகள் ஒருகாலத்தில் வளமான நிலங்களாகயிருந்தவைதான்.

வறட்சியும், வெள்ளமும் மாறி மாறி நமக்குப் பல்வேறு வழிகளில் இன்னல்களைக் கொடுத்து வருகின்றன. வறட்சியின் போது கிணறுகள், குளங்கள், ஆறுகள் போன்ற நீர்நிலைகள் வற்றி விடுகின்றன. பயிர்கள் பாதிக்கப்பட்ட நிலையில், உழவர்கள் அடைந்த இன்னல்களை விளக்கமுடியாது. அரசு அனேக கோடி ரூபாய்களை நிவாரணப் பணிகளுக்காகச் செலவிட்டது. இந்நிலைக்கு மாறாக வெள்ளம் ஏற்படும்போது, மக்கட்கு ஏற்பட்ட அவதிகள் தான் எவ்வளவு? நல்ல விளை நிலங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு விரயமாகின.

பசுமையாகக் காட்சியளித்த குன்றுகள், மலைகள் இன்று வெறிச்சோடி நிற்கின்றன. மானாவாரி நிலங்களில் குறிப்பாக, சரிவான நிலங்களில் தக்க பாதுகாப்பு முறைகள், சரியான உழவு முறைகளின்றிப் பயிர் செய்வதால், அந்நிலங்களில் மண்ணரிப்பு ஏற்பட்டு வளமான மேல் மண்ணை எளிதாகவும் விரைவாகவும் இழந்து வருகிறோம். இவ்வாறு ஏற்படும் மண்ணரிப்பினால் ஏற்படும் பல்வேறு பாதிப்பினை மக்கள் நன்கு உணர வேண்டும். இந்த வளமான மண்தான் தாவரங்கள் உண்டாகி, வளர்ந்து பசுமைப் போர்வையையுண்டாக்கும் ஊட்டத்தை, நீர்தங்கும் சக்தியைப்

தந்தி:
''அண்ணாஸ்பின்ஸ்''
தேனி.

தொலைபேசி
தனிஅலுவலர் இல்லம்: 2405
ஆலை அலுவலகம்: 2507 தேனி
ஆலை: 388
ஆண்டிப்பட்டி

# அண்ணா கூட்டுறவு நூற்பாலை லிட்.,
# ஆண்டிப்பட்டி - 626 512.
# மதுரை மாவட்டம்.

கீழ்க்காணும் இரகங்களில் தரமான சிட்டம் மற்றும் கோன் நூல்கள் எங்களது ஆலையில் உற்பத்தியாகின்றன.

---

சிட்டம் நூல்: 30, 40, 2/40, 2/60, 60 கார்டட், 60 கோம்புடு, 80 கோம்புடு

கோன் நூல்: 30, 34, 40, 44, 50, 60 கார்டட், 60 கோம்புடு

---

நூல் தேவைகளுக்கு எங்களது ஆலையுடன் தொடர்பு கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

பி. சுப்பிரமணியம்,
தனி அலுவலர்.

# நாவின் சுவைக்கு ''ஆவின்''...

## ஆவின் தரும் நலம் உங்களுக்கே...

பதப்படுத்தி நிலைப்படுத்திய பால், நறுமணப் பால்
பாலாடைக் கட்டி (சீஸ்), மனங்கவர் சுவைகளில்
சுவையூட்டிய தயிர், பனிக்குழைவு (ஐஸ் கிரீம்),
பால்கோவா, பதப்படுத்திய சமையல்,
உப்பிட்ட வெண்ணெய், தரமான நெய்,
பால்பவுடர்... இவையனைத்தும் தங்கு தடையின்றி...
அனைத்து முக்கிய அங்காடிகளிலும் மற்றும்
எங்களது பாலகங்களிலும் கிடைக்கிறது...

A 1301 மதுரை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம்,
சாத்தமங்கலம், மதுரை 625 020

தொலைபேசி—42561 தொலை அச்சு-210


பெற்றுள்ளது: விழுந்த மழைநீரைத தன்னிடத்தே தேக்கி வைதது, தாவரங்களுக்கு வேண்டிய நீர், உணவுப் பொருட்களைக் கொடுக்க வல்லது. ஆனால் மேல்மண் போய்விட்டால், மண்ணும் மழைநீரும் நிலத்தில் தேங்காமல், தங்காமல் ஓடிப்போவதால் திரும்பவும் பெறமுடியாத பெருத்த இழப்புகள், நஷ்டங்கள், கஷ்டங்கள் பல உண்டாகின்றன.

எந்தவித தாவரங்களும் வளரும் சக்தி போய்விடுவதால், நிலங்கள் பசுமையிழந்துவிடுகின்றன. மனித உடலில் காயம் ஏற்பட்டால் எவ்வாறு காட்சி தருமோ அவ்வாறு கோரமான நிலைமையுண்டாகிறது. நீர், நிலத்தில் தங்காமல், தேங்காமல் ஓடிவிடுவதால், ஓடைகள், ஆறுகள் இவற்றில் தொடர்ந்த நீரோட்டம் குறைந்து, நாளடைவில் ''பாலாறு'' போனற வறண்ட நிலையுண்டாகின்றது. நிலத்தில் மண்ணுக்கு நீர் கொள்ளும் சக்தி குறைவதால், மழை சிறிது குறைந்தாலும் வறட்சி நிலைமையுண்டாகி விடுகின்றது. அரிக்கப்பட்ட மண்ணானது, ஆறுகளிலும், நீர்நிலைகளிலும் போய்ச் சேர்வதால், அவற்றின் கொள்ளளவு குறைந்து, நாளடைவில் தூர்ந்து போய்விடுகின்றன.

பெரிய மழை. பெய்யும்போது ஏற்படும் அதிக நீரோட்டம் கரை புரண்டோடுவதாலும், நீர்நிலைகளில் கொள்ளளவு குறைவதால் ஏற்படும் உடைப்புகளாலும் வெள்ளம் ஏற்படுகிறது. மழை நீரை ஆங்காங்கு தக்கவைத்துக் கொள்ளும் சக்தியை நிலம் இழக்க இழக்க வறட்சி நிலையும், வெள்ள அபாயமும் அதிகரித்துக் கொண்டே போகின்றது. ஆகவே மண்ணரிப்பைக் குறைத்து, மண்ணின் நீர்கொள்ளும் திறனைப் பெருக்குவது, நில நீர்வளப் பாதுகாப்பின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

இந்த மண்ணரிப்பு ஏன் உண்டாகின்றது? அதை எவ்வாறு குறைப்பது என்பதைப் பார்ப்போம்.

நிலத்தின் மேலுள்ள போர்வை போன்ற மேல்மண்ணில்தான் தாவரங்கள் வளர்கின்றன. இந்த மேல் மண்தான் தாவரங்களுக்கு வேண்டிய நீர், உணவுப் பொருட்கள், காற்று இவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மழையினால் கிடைக்கும் நீரை இந்த மண் பிடித்து வைத்துத் தாவரங்களுக்குக் கொடுத்து வருகின்றது.



மண்ணரிப்பைத் தடுப்பதோடு, நீர்வளம் பெருகக் கசிவு நீர்க் குட்டைகள் கட்டப்படுகின்றன.

மனிதன் விவசாயம் செய்ய ஆரம்பித்த நாள் முதல், 'மண் மேலுள்ள மற்ற தாவரங்களை அகற்றிவிட்டு, தனக்குவேண்டிய பயிர் வகைகளை உண்டாக்கி வாழ்ந்து வருகின்றான். பொதுவாக, பாசன வசதி கிடைக்கும் இடங்களில் மனிதன் அதிகச்செலவில் நிலங்களைச் சமன் செய்து, வரப்புகள் அமைத்து, பாசன நீரும், மழைநீரும் நிலத்தைவிட்டு ஓடாமல் தடுத்துவிட்ட காரணத்தால் பாசன நிலங்களில் மண்ணரிப்பு ஏற்படுவதில்லை. ஆனால் புஞ்சை நிலங்களில், இவ்வாறு சமன்செய்து வரப்புகள் அமைக்காத காரணத்தால், மழை வரும்போதெல்லாம் நீரோட்டம் ஏற்பட்டு மண்ணரிப்பு உண்டாகின்றது. மானாவாரிப் பயிர்களினால் போதிய வருமானம் கிடைக்காததால், நிலத்தைச் சமன் செய்து, வரப்புகள் போட்டு, நீரோட்டத்தைத் தடுப்பதில்லை.

நமது நாட்டிலும் சரி, மாநிலத்திலும் சரி விவசாயம் செய்யும் நிலங்களில் 50 சதத்திற்குமேல் மானாவாரிப்பயிர் செய்யப்பட்டு வருகின்றது. இந்த நிலங்களில் உண்டாகும் மண்ணரிப்பைத் தடுத்து நீரோட்டத்தைக் குறைப்பதற்கு நாம் எல்லா முயற்சிகளும் செய்ய வேண்டும். வேளாண்மைப் பொறியியல் துறையானது - கடந்த 30 ஆண்டுகளாக மலைப்பகுதிகளிலும், சமவெளிப் பகுதிகளிலும், நில, நீர் வளப் பாதுகாப்புத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது. இத்திட்டங்களினால் மண்ணரிப்பு குறைந்து, நிலத்தடி நீர் கூடுவதோடு, மானாவாரிப் பயிர்விளைச்சலும் அதிகரிக்கின்றது. இம்முறைகளில் முக்கியமாக நிலச்சரிவிற்குக் குறுக்கே மண் வரப்புகள் அமைத்து நீரோட்டத்தைத் தடுத்து, நீரை அதிக நேரம் நிலத்தில் தங்க வைக்கிறோம். நீரோட்டத்தின் வேகம் குறைவதால் மண்ணரிப்பு குறைந்து, அரிபட்ட மண்ணும் ஆங்காங்கே நிலத்தில் தங்கி விடுகின்றது. நாளடைவில் நிலத்தின் தரமும் மதிப்பும் அதிகரிக்கின்றன.

மண்ணரிப்பானது, வேகமான காற்றடிக்கும் போதும் உண்டாகிறது. நிலத்தில் தக்க பாதுகாப்பின்றி, வறண்ட நிலையில நிலத்தின் மேலுள்ள மண்துகள்களை வேகமாக, காற்றும் சூறாவளிக்காற்றும் மற்ற இடங்களுக்கு எடுத்துச்சென்று மணல் மேடுகளை உண்டாக்குகின்றன. ஆகவே, மண்ணரிப்புக்குட்பட்ட



# பாவேந்தரும் திருச்சி நகரும்

**பாவேந்தர் நூற்றாண்டு:**

**திருச்சி நகரத்திற்கும் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுக்கும் மிகுந்த தொடர்பு இருந்து வந்தது.**

பாவேந்தரின் முதல் கவிதைத் தொகுதிக்கு அணிந்துரை வழங்கியவர் திருச்சியைச் சேர்ந்த முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் ஆவார்.

பாவேந்தரின் மணி விழா 1951-ல் திருச்சி நகரில் நடைபெற்றது.

பாவேந்தரின் கவிதைகளைப் புகழ்ந்து பாராட்டி அவற்றைத் தமது குடியரசு இதழில் வெளியிட்டு வந்த தந்தை பெரியாரின் தலைமை அகம் திருச்சியில் தான் இருந்தது.

'தாயின் மேல் ஆணை-தந்தை மேல் ஆணை' என்ற பாடலை 1944-ல் பாவேந்தர் இயற்றி அவரே மேடையில் பாடியது திருச்சி நகரில் தான்!

பாவேந்தர் பெயரால் பாரதிதாசன் பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டுள்ளது திருச்சியில்தான்!

பாவேந்தரின் நூற்றாண்டு விழா தொடக்க நிகழ்ச்சி கொண்டாடப்பட்டதும் திருச்சியில்தான் (6.5.90, 7.5.90)

(பாவேந்தர் நூற்றாண்டுத் தொடக்க விழா உரைகளிலிருந்து)

தகவல்: த.பி.

---

நிலங்களும், மண்மேடு உண்டான நிலங்களும் பாதிப்படைகின்றன. சாலைகளில் மண்படிந்து போக்குவரத்துகள் பாதிப்படைவதை நாம் பல இடங்களில் காண்கிறோம். ஆடிக்காற்றினால் வீடுகளில் மண் படிவதையும் அதனால் மனிதர்களுக்கு உண்டாகும் பாதிப்புகளையும் காண்கிறோம். இந்த நிலையை நீடிக்க விட்டால், மணல் மேடுகள் உண்டாகி, பாலைவனமாக மாறும் நிலை உண்டாகி விடுகிறது.

இவ்வாறு காற்றினால் மண்ணரிப்பு ஏற்படும் நிலங்களில், காற்றடிக்கும் திசைக்கு எதிராக, தாவர அரண்களை அமைத்து, காற்றின் மண்ணரிப்புத் திறனையும், வேகத்தினையும் குறைக்கலாம். பலவகையான மரங்களை நான்கு, ஐந்து வரிசைகளில் நட்டு தாவர (அரண்களை) வேலிகளை அமைப்பதால், காற்றரிப்பினைத் தடுக்கலாம். இவ்வாறு காற்றினால் மண்ணரிப்பு ஏற்பட்டுள்ள இடங்களில் தாவர வேலிகள் அமைத்து, குறிப்பாக மதுரைமாவட்டத்தில் போடிநாயக்கனூர் பகுதிகளிலும், சிதம்பரனார் மாவட்டத்தில் திருச்செந்தூர் பகுதிகளிலும் காற்றுக்கு வேலியமைத்து, காற்றரிப்பின் கொடுமைகளைத் தவிர்த்து நல்ல பலன் கண்டுள்ளோம்.

மேலும், மிகவும் அரிபட்டு ஓடையாக மாறிய இடங்களில் தடுப்பணைகள் போட்டும், தரம் குறைந்த நிலங்களில் மரங்களை உண்டாக்கியும் நிலவளத்தையும், நீர்வளத்தையும் பெருக்கி வருகின்றோம். ஆங்காங்கு கசிவுநீர்க் குட்டைகளைக் கட்டி, நீர் நிலைகள் ஏற்படுத்துவதால், மண்ணரிப்பு குறைவதோடு, நீர்வளம் பெருகி, கிணறுகளில் நீர் பெருக்கம் உண்டாகிறது. ஆகவே, நிலவளம் காத்து, நீர் வளம் பெருக்கி, நாம் இயற்கை வளத்தைப் பேணி பாதுகாக்க வேண்டும். இயற்கை வளம் பெருக, மண்வளப் பாதுகாப்பு முறைகளைக் கையாளுவது மிகவும் அவசியமாகும். நமது பிற்கால சந்ததிகளுக்கு நாம் செய்யும் பெரிய பணியும் கடமையும் ஆகும். இதற்கான சில முறைகளை விவசாயப் பெருமக்கள் கையாளுவதால், சிறந்த பலன் கிடைக்கும். மண்ணரிப்பைத் தடுக்க ஏற்படுத்தியுள்ள மண்வரப்புகளைப் (அணைகளை) பாதுகாக்க வேண்டும். அவற்றில் புல் வளர்த்தால், வரப்புகள் பல்லாண்டு காலம் பலனளிக்கும். உழவு செய்யும்போது சரிவிற்குக் குறுக்கே உழுது பயிர் செய்வதால், நீர்ப் பிடிப்பு கூடுவதோடு, ஓரளவு மண்ணரிப்பும் குறையும். கூடியமட்டும் அவரவர்கள் நிலத்தில் விழும் மழைநீர், இடும்எரு, உரங்கள் அங்கேயே தங்க வழி வகைகள் செய்யவேண்டும்.

விவசாயம் செய்யாத நிலங்களிலும், வேலிகளிலும், வீட்டைச்சுற்றிலும் மரங்களை வளர்க்க வேண்டும். மழை குறைந்த இடங்களிலும், வேப்ப மரங்கள், வேல மரங்கள் நன்கு வளரும். அவை வறட்சியைத் தாங்கும் சக்தியுள்ளவை. ஆகவே, மிகப் பெரிய அளவில் இம்மரங்களை உண்டாக்கலாம். குறிப்பாக வேலிகளில் அதிக வேப்ப மரங்களை உண்டாக்கலாம். மலைகளிலுள்ள மரங்களையும், புதர்களையும் அழித்து, சரிவான நிலங்களில் வேளாண்மைப் பயிர்கள் செய்வதைத் தவிர்க்க வேண்டும். இப்படிப்பட்ட நிலங்களில் வேளாண்மைப் பயிர்கள் செய்தால் அதிக மண்ணரிப்பு ஏற்படும். மலைகளில் கூடியமட்டும் மரங்கள் வளர்ப்போம். மரங்களும் இப்போது நல்ல வருமானத்தைக் கொடுக்கின்றன. மலைப்பகுதிகளிலிருந்து தான் பெரிய நீரோட்டங்களும், ஆறுகளும் உற்பத்தியாகின்றன. இந்த ஆறுகளின் குறுக்கே பெரிய அணைகள் கட்டி, மின்சாரம் உண்டாக்குகின்றோம். அதிகப்பாசன வசதியும் உண்டாக்குகின்றோம். இந்நீர்நிலைகள், அணைகள், பாதிக்கப்படாமல் இருப்பதற்கு மலைகளிலுள்ள மரங்கள், வனங்கள் இவற்றைப் பாதுகாக்க வேண்டும். மலைப்பகுதிகளில் உண்டாக்கும் மண்ணரிப்பைத் தடுப்பதனால், மலைவளம் காப்பதோடு, அணைகளில் மண்சேர்ந்து கொள்ளளவு குறைவதையும் தடுக்கலாம்.

ஆகவே, நில, நீர்வளம் காப்போம். மரங்கள் வளர்ப்போம். வனங்கள் பெருகி வளங்கள் பெருகட்டும். இயற்கைவளம் பொங்கட்டும். இதுவே இயற்கையைப் பேணும் பெரும் பணி.



# மாண்புமிகு முதல்வர் பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள்

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் 67-வது பிறந்த நாள் ஜூன் 3-ஆம் தேதி எனினும்- அது குறித்த சிறப்பு நிகழ்ச்சிகள் 1.6.90 முதலே தொடங்கின.

அன்று மாலை, செங்கை - அண்ணா மாவட்டத்திலுள்ள பரனூர் தொழுநோயாளர் மறுவாழ்வு இல்லத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாலை 4 மணியளவில் சென்னையிலிருந்து புறப்பட்டார். வழிநெடுகிலும் ஏராளமான வரவேற்பு வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன. வண்ண வண்ண வாழ்த்துச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. ஆங்காங்கே, சாலையின் இருமருங்கிலும் நின்றிருந்த மக்கள்- மாண்புமிகு முதல்வர் அவர்களின் காரை நிறுத்தி அவருக்கு மாலைகள் கைத்தறி ஆடைகள் அணிவித்துப் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார்கள்.

2.10.1971-ல், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் துவக்கிவைக்கப்பட்டதுதான் பரனூர் தொழுநோயாளர் இல்லம். 425 பேர் தங்குவதற்கு வசதிகள் உள்ள இல்லமாக அது அமைக்கப்பட்டது. இப்போது அங்கே 202 ஆண்களும், 138 பெண்களும் 37 குழந்தைகளும் இருக்கிறார்கள்.

இந்த இல்லத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுடன்- மாண்புமிகு அமைச்சர்கள் திரு மு. கண்ணப்பன், திரு எஸ். துரைமுருகன், டாக்டர் க. பொன்முடி, டாக்டர் எ இராம கிருஷ்ணன், சட்டமன்றத் துணைத் தலைவர் திரு துரைசாமி, திரு முரசொலி செல்வம் ஆகியோரும் வருகை தந்தார்கள். எல்லோரையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சமீர் வியாஸ், இ.ஆ.ப. வரவேற்றார்.

பிறந்த நாள் விழா நிகழ்ச்சியில், அவர்களோடு முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் மதுராந்தகம் எஸ். ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் திருமூர்த்தி, திரு. முருகேசன், திரு. வீ. தமிழ்மணி, திரு. மாசிலாமணி, திரு கோதண்டம், திரு மீ.அ. வைத்திலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.





சிறைத்துறை உயர் அதிகாரி திரு இரா. வைகுந்த் வரவேற்புரையாற்றினார். இல்லத்தைச் சேர்ந்த திரு அம்புரோஸ், மாண்புமிகு முதல்வர் அவர்களை வாழ்த்திப் பாடல்கள் பாடினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள்- பரனூர் தொழுநோயாளர் இல்ல வாசிகளுக்கெல்லாம் புத்தாடைகளும், அங்குள்ள மாணவ மாணவிகளுக்கெல்லாம் பாடப் புத்தகங்களும் நோட்டுப் புத்தகங்களும் வழங்கினார். சட்டமேதை அம்பேத்கர் படத்தைத் திறந்து வைத்தார்.

அதன்பின் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகையில்- "ஆண்டுதோறும் எனது பிறந்த நாளுக்கு முதல் நிகழ்ச்சியாக நான் வணங்கும் தெய்வங்களான உங்களை வந்து பார்ப்பதையே வாடிக்கையாகக் கொண்டிருக்கிறேன். நான் ஆலயம் சென்று தெய்வத்தை வழிபட்டதில்லை; நடமாடும் தெய்வங்களாகிய உங்களை வணங்குகிறேன். இங்கே என்னிடத்தில் வைக்கப்பட்ட கோரிக்கைகள் நிர்வாகச் சீரமைப்பின் கீழ் படிப்படியாக நிறைவேற்றப்படும்" என்றார்.

அதன்பின், தொழுநோயாளிகள் இல்லத்தினுள் சென்ற மாண்புமிகு



அறிஞர் அண்ணா நினைவிடத்தில்...

முதல்வர் அவர்கள், அங்கிருந்த நோயாளிகளுக்கெல்லாம் தமது திருக்கரத்தினாலேயே உணவு பரிமாறி உவகை கொண்டார்.

விழா முடிவில் சிறைத்துறைத் துணைத் தலைவர் திரு பெருமாள் நன்றி கூறினார்.

இந்த விழாவில்- முதலமைச்சரின் நிவாரண நிதிக்காக ரூ. 33 ஆயிரம் நிதி வழங்கப்பட்டது.

**இரத்த தானம்:**

அதே நாளில், சென்னை - கலைவாணர் அரங்கில் நடைபெற்ற இரத்ததான முகாமில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளையொட்டி ஏராளமானவர்கள் இரத்ததானம் செய்தார்கள்.

மாலை 5 மணியளவில், முதன் முதலாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி, மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் திரு. எ. இராமகிருஷ்ணன், திரு டி.ஆர்.பாலு, எம்.பி., ஆகியோர் இரத்ததானம் கொடுத்து இந்நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்கள். தொடர்ந்து நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்களும், ஏராளமான இளைஞர்கள்- மற்றும் தாய்மார்களும் இரத்தம் கொடுத்தார்கள்.

இராயப்பேட்டை மருத்துவ மனைக்காக இரத்தம் சேமிக்கப்பட்ட இந்த முகாம்,டாக்டர் முத்துவீரப்பன் தலைமையிலான மருத்துவக் குழுவினர் மூலம் தொடர்ந்து மூன்று நாட்கள் நடத்தப்பட்டது.

**புத்தக வெளியீடு:**

1.6.90 அன்று மாலை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு புதுவை மாநில முதலமைச்சர் திரு டி. இராமச்சந்திரன் அவர்களும் மற்றும் அமைச்சர்களும் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு புதுவை மாநிலக் கல்வியமைச்சர் திரு மணிமாறன் முதல்வர் கலைஞர் குறித்து தமிழில் எழுதி-பிரஞ்சு மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட கவிதைநூலை மாண்புமிகு தமிழ்நாடு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு க. அன்பழகன் அவர்கள் வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினார். முதல்நூலை புதுவை மாநிலத்தில் உள்ள பிரெஞ்சுத் தூதர் திரு ரொபர்லேயோன் பெற்றுக் கொண்டார். அடுத்தமாதம், பிரெஞ்சு நாட்டின் தலைநகரான பாரிஸில், மாண்புமிகு முதல்வர் அவர்களின் 67-வது பிறந்தநாள் விழா கொண்டாடப்படவிருப்பதாக, இவ்விழாவில் பேசுகையில் மாண்புமிகு புதுவை மாநிலக் கல்வியமைச்சர் திரு மணிமாறன் அவர்கள் குறிப்பிட்டார்.



செங்கை மருத்துவக்கல்லூரி கலை நிகழ்ச்சி...

பாரதி பதிப்பகத்தார் தயாரித்துள்ள 'கலைஞர் களஞ்சியம்' என்ற நூலும் இவ்விழாவில் வெளியிடப்பட்டது.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு மு. தமிழ்க்குடிமகன் அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு மற்றும் புதுவை மாநில அமைச்சர் பெருமக்களும், மற்றும் சட்டமன்ற-நாடாளுமன்ற முன்னாள்-இந்நாள் உறுப்பினர்களும் மற்றும் ஏராளமான தமிழறிஞர்களும், தாய்மார்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் குடும்பத்தாரும் இந்த இனிய விழாவிற்கு வருகை தந்திருந்தார்கள்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளையொட்டி சென்னை மாநகரமே விழா நகரமாகக் காட்சியளித்தது. ''சங்கத் தமிழே! எங்கள் உயிரே! வாழிய பல்லாண்டு!'' போன்ற பல வாசகங்களைக் கொண்ட வண்ணச் சுவரொட்டிகள், வரவேற்பு வளைவுகள், தோரணங்கள், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, - மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஆகியோரின் முழு உருவ கட்-அவுட்டுகள் நகரின்முக்கிய வீதிகளிலெல்லாம் காட்சியளித்தன.

ஏடுகள் பல, பிறந்தநாள் சிறப்பிதழ் வெளியிட்டிருந்தன.

**கருத்தரங்கம்**

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் 67-வது பிறந்தநாள் கருத்தரங்கு 1.6.90 அன்று மாலை 8 மணியளவில் கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது.

'கலைஞர்களின் பார்வையில் கலைஞர்' என்ற தலைப்பில் நடைபெற்ற அந்தக் கருத்தரங்கிற்குப் பட

அதிபர் திரு ஏ.வி.எம். சரவணன் அவர்கள் தலைமை தாங்கினார்.

திரைத்துறையில் புகழ்பெற்றவர்களான திரு பாரதிராஜா, திரு கே. பாலச்சந்தர், நடிகை திருமதி லட்சுமி, திரு முக்தா சீனிவாசன், திரு கே.ஏ. தங்கவேலு, திரு விஜயகாந்த், திரு ராதாரவி, திரு பாண்டியன், திரு பாண்டியராஜன், திரு செந்தாமரை, திரு ரவிச்சந்திரன், திரு சந்திரசேகர், திரு ராஜராஜன், திருமதி சரோஜா தங்கவேலு, திரு கே.எஸ். கோபாலகிருஷ்ணன், திரு ஆர்.சி. சக்தி, திரு மணிவண்ணன், திரு பஞ்சு அருணாசலம் ஆகிய பலரும் பேசினார்கள்.

கருத்தரங்க நிகழ்ச்சிகளைத் திரு எஸ்.எஸ். சந்திரன் தொகுத்து வழங்கினார்.

**கலைஞர் கருவூலம்:**


கலைவாணர் அரங்கின் பின்புறம் அமைந்திருந்த பிரம்மாண்டமான பந்தலில் 'கலைஞர் கருவூலம்' என்ற பெயரில் அமைக்கப்பட்டிருந்த மாபெரும் புகைப்படக் கண்காட்சியை- மாண்புமிகு அசாம் மாநில முதலமைச்சர் திரு மகந்தா அவர்கள் திறந்து வைத்தார்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு நாஞ்சில் மனோகரன் அவர்கள் இவ்விழாவிற்குத் தலைமை தாங்கினார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், முன்னாள் அமைச்சர்கள் திரு மன்னை நாராயணசாமி, திரு அன்பில் தர்மலிங்கம் ஆகியோரும் திரு என்.வி.என். சோமு, திரு டி.ஆர். பாலு, எம்.பி.யும் கலந்து கொண்ட விழா முடிவில் ஆயிரம் விளக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு மு.க. ஸ்டாலின் நன்றி கூறினார்.

'கலைஞர் கருவூலத்'தில்- மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் 66 ஆண்டுக்கால வரலாற்றுப் புகைப் படங்கள் - சரித்திரச் செய்திகள் தியாகச் சம்பவங்கள்- அவர் எழுதிய நூல்கள்- அவரைப் பற்றிய நூல்கள்- திரைத் துறைத் தொடர்பு விவரங்கள்- பெற்ற விருதுகள்- பரிசுகள் யாவும் பாங்குறப் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

**தந்தை பெரியார் போக்குவரத்து பயணவழி உணவக வளாகம்!**

1.6.90 அன்று இரவு 8 மணியளவில், செங்கை - அண்ணா மாவட்டம் மாமண்டூரில் ரூ.69 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள 'தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் பயணவழி உணவக வளாகத்'தை மாண்புமிகு முதல்வர் கலைஞர் தன் 67-வது பிறந்தநாளையொட்டித் திறந்து வைத்தார்.



விழாவிற்கு முன்னதாகத் 'தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக இசைக் குழுவினரின்' இசை நிகழ்ச்சி நடந்தது.

ஐந்து ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்பட்டுள்ள இந்த வளாகத் திறப்பு விழாத் தொடக்கத்தில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் திரு எஸ். ரங்கநாதன் வரவேற்புரையாற்றினார்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு மு. கண்ணப்பன் அவர்கள் தலைமையுரையின்போது குறிப்பிட்டதாவது:

''தமிழ்நாட்டில் உள்ள 'மோட்டல்'கள் அனைத்திற்கும் சிகரம் வைத்தது போலத் திகழக் கூடியது இது. பேருந்து வழியில் இப்போதுள்ள சில உணவகங்களில்- அவர்கள் குறிப்பிட்டதுதான் விலை; கொடுப்பதுதான் சாப்பாடு என்ற நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களிலெல்லாம் இனி பேருந்துகளை நிறுத்தக் கூடாது; இங்கே மாமண்டூரில் தான் நிறுத்தவேண்டும் என விரைவில் ஆணை பிறப்பிக்கப்படும். பயணிகளுக்கு இங்கே தரமான உணவு நியாயமான விலையில் அளிக்கப்படும் விரைவில்; சிறிது நேரம் இங்கே பயணிகள் தங்கி ஓய்வெடுத்துக் கொள்ளவும் வசதி செய்யப்படும். தமிழ்நாட்டில் உள்ள சாதாரண கிராம மக்களுக்கும் பஸ் வசதி செய்து தரவேண்டும் என்ற அடிப்படையில் நமது அரசு செயல்பட்டு வருகிறது. இனி, ஆயிரம் பேருக்குமேல் மக்கள் உள்ள கிராமங்களுக்கும்கூட பஸ் வசதி செய்து தரப்படும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.''

—இதைத் தொடர்ந்து, திரு மதுராந்தகம் ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு தமிழ்மணி, திரு உகம்சந்த், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் திரு ஏ. இராமகிருஷ்ணன் ஆகியோர் உரையாற்றினர், மாண்புமிகு அமைச்சர்கள் திரு எஸ். துரை முருகன், திரு பொன்முடி, சட்டமன்றத் துணைத் தலைவர் திரு துரைசாமி ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

இந்த விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள்- தந்தை பெரியார் போக்குவரத்துப் பயணவழி உணவக வளாகம் கட்டும் நேரத்தில் விபத்தில் இறந்துபோன திரு கன்னியப்பன், திரு குருமணி, திரு குணசேகரன் ஆகியோர் குடும்பத்தாருக்குத் தலா 25 ஆயிரம் ரூபாயும், விபத்தில் கால்இழந்த தொழிலாளி இரத்தினத்திற்கு 12 ஆயிரம் ரூபாயும் நிதியுதவி வழங்கப்படுகிறது என்றார்.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத் தொழிற் கூடத்தில் சிற்றுண்டி மற்றும் தொழிலாளர் ஓய்வு விடுதி, தொழிலாளர் குடியிருப்பு, மேனிலை குடிநீர்த் தொட்டி, சமுதாயக் கூடம் ஆகியவற்றுக்கு அடிக்கல் நாட்டினார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், உணவக வளாகத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''இந்த உணவு வளாகத்தைக் குத்தகைக்கு எடுப்பவர்கள், இலாப நோக்கத்தோடு உணவின் தரத்தைக் குறைத்து விடக்கூடாது; பயணிகளிடமிருந்து அப்படிப்பட்ட புகார் வருமானால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் கடந்த ஆண்டு இந்தியாவிலேயே இரண்டாவது சிறந்த போக்குவரத்துக் கழகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. எனவே,

இதன் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வரும் பணியாளர்களைப் பாராட்டும் வகையில் இதில் பணியாற்றும் சுமார் 6,200 தொழிலாளர்களுக்கும் தலா 50 ரூபாய் பெறுமானமுள்ள பரிசு வழங்கிட உத்தர விடப்படுகிறது. இந்த வளாகம் நல்ல முறையிலே செயல்பட, போக்குவரத்துக் கழகப் பணியாளர்களோடு பயணிகளும் ஒத்துழைக்க வேண்டுகிறேன்."

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

**மருத்துவக் கல்லூரி வெள்ளி விழா**

செங்கற்பட்டில் உள்ள மருத்துவக் கல்லூரியின் வெள்ளி விழா 1.6.90 அன்று இரவு 8.30 மணியளவில் நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும், சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு துரைசாமி மற்றும் அமைச்சர் பெருமக்களும், முன்னாள்-இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்களும் நகராட்சித் தலைவர் திரு அஸ்மத் ஆகியோரும் கலந்து கொண்டனர். மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் லலிதா அனந்த சுப்பிரமணியம் வரவேற்புரையாற்றினார். குத்து விளக்கு ஏற்றி வைக்கப் பட்டது. விழாத் தொடக்கத்திலும், முடிவிலும் மருத்துவக் கல்லூரி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. டாக்டர் வேல்முருகன் அவர்கள் கலைஞரின் 'பராசக்தி' திரைப்பட வசனம் பேசி மகிழ்வித்தார். டாக்டர் வரகுணன் அவர்கள் பாவேந்தரின் 'தமிழுக்கும் அமுதென்று பேர்' பாடலை இசைநயத்தோடு பாடினார்.

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் வே.ப. நாராயணன், பொதுச் செயலாளர் டாக்டர் எம்.எத்திராஜன், மாணவர் பேரவைத் தலைவர் திரு எஸ்.டி. இன்பராஜ் ஆகியோர் அறிக்கை படித்தனர்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி தலைமை உரையாற்றினார். நகராட்சித் தலைவர் திரு அஸ்மத், திரு வீ. தமிழ்மணி எம்.எல்.ஏ., மதுராந்தகம் திரு சி. ஆறுமுகம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு எ. இராமகிருஷ்ணன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். துரைமுருகன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு மு. கண்ணப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்- செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி வெள்ளி விழா நினைவுச் சின்னத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"படித்துப் பட்டம் பெற்ற மருத்துவர்கள் கிராமங்களுக்குச் சென்று பணிபுரியத் தயங்குகிறார்களே என்கிற வேதனை எங்களுக்கு உண்டு. செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி, வசதி குறைவானதாக இருந்தாலும், மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தில் கடந்த ஆண்டு முதன்மை பெற்றிருப்பதை அறிந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். படிப்பின் மீதுள்ளது போலவே தமிழின் மீதும் ஆர்வம் கொண்டிருந்த நீங்கள்-நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போதும் என்னை இங்கே அழைத்துப் பெருமைப்படுத்தியதை நான் மறக்கமாட்டேன். இங்கு-தாய்சேய் நல மருத்துவக் கட்டடம் ஒன்று தேவை என்று தெரிவிக்கப்பட்டது; ஏற்கெனவே இருக்கிற கட்டடத்தை இப்போதைக்கு அதற்கெனப் பயன் படுத்தி வந்தால், விரைவில் தாய் சேய்நலத் தனிக் கட்டடத்தைப் படிப் படியாக அரசு கட்டித் தரும்."

— இவ்வாறு உரையாற்றிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், பல லட்ச ரூபாய் மதிப்பில் கட்டப் படவிருக்கும் பல்வேறு மருத்துவ மனைக் கட்டடப் பிரிவுகளுக்கு அடிக்கல் நாட்டினார். பெண் நர்சுகள் குடியிருப்பைச் சுற்றி சுற்றுச்சுவர் எழுப்பிட ஆணையிட்டார்.

விழா முடிவில், செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி உதவி முதல்வர் டாக்டர் பெ. பாலுசாமி நன்றி தெரிவித்தார்.

**இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்**

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளின் தொடக்கமாக (2.6.90) காலை 10 மணி அளவில் கலைவாணர் அரங்கில் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

ஆயிரம் விளக்கு எஸ். ஏ. எம். உசேனின் 'சாம் சிங்கர்ஸ்' குழுவினரின் இன்னிசை நடைபெற்றது.


திருமதி எஸ்.பி. சற்குணம், எம்.எல்.ஏ. வரவேற்க, மாண்புமிகு அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் முன்னிலை வகித்தார்.


காலை 11 மணி அளவில் பட்டிமன்றம் துவங்கியது. 'தமிழவேள் கலைஞர் உயர்ந்தோங்கி நிற்பது அவரது தியாகத்தாலா? அவரது திறமையாலா?' என்ற தலைப்பில் நடைபெற்ற பட்டிமன்றத்திற்கு டாக்டர் மா. நன்னன் நடுவராகப் பொறுப்பேற்றார். மாண்புமிகு அமைச்சர் திரு கே.பி. கந்தசாமி முன்னிலை வகித்தார்.

'தியாகத்தால்' என்ற அணியில் திரு புலவர் ஆடலரசு, தஞ்சை கூத்தரசன், டாக்டர் ராஜேந்திரன், திருமதி சக்தி கோதண்டம் ஆகியோரும், 'திறமையால்' என்ற அணியில் திரு அ. ரகுமான்கான், எம்.எல்.ஏ., திரு நாஞ்சில் சம்பத், சிங்கார சடையப்பன், கண்மணி தமிழரசன் ஆகியோரும் வாதிட்டனர்.

இறுதியில் நடுவர் திரு மா. நன்னன் தீர்ப்புக் கூறும் போது







மன்றத்தில் கூடியிருந்த மக்களின் கருத்தைக் கேட்டு, அவர்கள் அளித்த முடிவைப் பட்டிமன்றத் தீர்ப்பாக அளித்தார். "தமிழவேள் கலைஞர் உயர்ந்தோங்கி நிற்பது அவரது திற மையால்" என்ற தீர்ப்பைத் திரு மா. நன்னன் பலத்த கரவொலிக் கிடையே அறிவித்தார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் எழுதிய 'பொன்னர்–சங்கர்' நூல் பேச்சாளர்களுக்கெல்லாம் வழங்கப் பட்டது. முன்னதாகத் திரு து. புரு டோத்தமன் வரவேற்றார். திருமதி ராஜம் நடராசன் நன்றி கூறினார்.

அடுத்து வழக்காடு மன்றம் நடை பெற்றது.

'தலைவர் கலைஞர் வழியில் நடக்காத தமிழினம் குறையுடையதே' என்ற பொருளில் நடைபெற்ற வழக்காடு மன்றத்திற்குத் திருச்சி என். செல்வேந்திரன் நடுவராகப் பொறுப்பேற்றார். திரு பெரியார் தாசன் வழக்குத் தொடுக்க, திரு சபாபதி மோகன் மறுத்துப் பேசி னார். முடிவில் திரு செ. கண்ணப்பன் நன்றி கூறினார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு தமிழ்க்குடி மகன் மற்றும் அமைச்சர் பெரு மக்கள், முன்னாள் அமைச்சர்கள் திரு மன்னை நாராயணசாமி, திரு அன்பில் தர்மலிங்கம் மற்றும் நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப் பினர்கள் இவ்விழாவில் பங்கேற் றார்கள்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு 67-வது பிறந்தநாள் 2-ஆம் தேதி நள்ளிரவு 12 மணிக்கு பிறந்தது. கலைவாணர் அரங்கில் அப்போது உவமைக்கவிஞர் சுரதா அவர்கள் தலைமையில் கவியரங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. கவிஞர்கள் திரு புலமைப்பித்தன், திரு வைரமுத்து, திரு பொன்னி வளவன், திரு குடியரசு, திரு அப்துர் ரகுமான், திரு கவிதைப் பித்தன், மாண்புமிகு புதுவை மாநிலக் கல்வி அமைச்சர் திரு மணி மாறன், திருமதி நிர்மலா சுரேஷ், திருமதி அரசுமணிமேகலை ஆகி யோர் கவிதை பாடினர். பார்வை யாளர்கள் வரிசையில் அமர்ந்திருந்த முதல்வர் கலைஞர் அவர்கள் மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

ஏற்கனவே தயாராக வைக்கப் பட்டிருந்த "அண்ணா அறிவாலய வடிவமைப்பு" கொண்ட மிகப் பெரிய கேக்கை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வெட்டினார்.

கூடியிருந்த லட்சக் கணக்கான தமிழ்ப்பெருங்குடி மக்கள் "கலைஞர் வாழ்க! தமிழினத் தலைவர் வாழ்க!" என விண்ணதிர முழக்கமிட்டனர்.

**மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள்**

3-6-90 அன்று, தனது பிறந்த நாளையொட்டி, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் புத்தாடை அணிந்து தன் தாயார் அஞ்சுகத் தம்மையார், தந்தையார் முத்துவேலர் திருவுருவப்படங்களுக்கு மாலையணி வித்து வணங்கினார்.

அதன்பின், அண்ணா நினை விடத்திற்கு வந்து, மலர் வளையம் வைத்து வணங்கினார். தனது 67-வது பிறந்த நாளை முன்னிட்டு, 67 வெண்புறாக்களைப் பறக்கவிட்டார்.

பிறகு, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் நினைவிடத்திற்குச் சென்று, மலர் வளையம் வைத்து வணங்கினார். பின்பு காலை 7.30 மணியள வில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழகமெங்கிலு மிருந்து வந்திருந்த லட்சோபலட்சம் மக்களிடமிருந்து பிறந்த நாள் வாழ்த் தைப் பெறுவதற்காகக் கலைவாணர் அரங்கிற்கு வந்துசேர்ந்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர் களுக்கு ஒரு யானை, மாலை சூட்டி மகிழ்ந்து பிளிறி வரவேற்றது.

கலைவாணர் அரங்க மேடைக்கு வந்து நின்ற மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் அருகே ஒரு பெரிய உண்டியல் வைக்கப்பட்டி ருந்தது. முதலமைச்சர் நிவாரண நிதிக்காக அதில் தம்மால் இயன்ற தொகையைச் செலுத்திவிட்டு, எண்ணற்றோர் - மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு மாலைகள், சால்வைகள், பொன் னாடைகள் அணிவித்து இதயவாழ்த் தைத் தெரிவித்தார்கள்.

மேதகு தமிழக ஆளுநர் திரு சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் நேரில் வந்திருந்து பிறந்தநாள் வாழ்த்துக் கூறினார். சென்னைக்கு வருகைதந்த மாண்புமிகு செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு உபேந்திரா அவர்களும், சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி திரு ஏ. எஸ். ஆனந்த் அவர்களும் கலை வாணர் அரங்கத்திற்கே வருகை தந்து மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

**பொதுக் கூட்டம்**

அன்றுமாலை, தியாகராய நகரில், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு க. அன்பழகன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், திரு டி.ஆர். பாலு எம்.பி. அவர்கள் வரவேற்புரை யாற்றினார்.

தேசிய முன்னணித் தலைவர் திரு என்.டி. ராமராவ், மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு உபேந்திரா, மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சி மேம் பாட்டுத்துறை அமைச்சர் திரு முரசொலி மாறன், மாண்புமிகு தமிழக சட்ட அமைச்சர் திரு சாதிக்பாட்சா, முன்னாள் அமைச்சர் திரு ப.உ. சண்முகம், திரு கி. வீரமணி (தி.க.), திரு மாணிக்கம் (இந்.கம்.), திரு வரதராசன் (மார்க்.கம்.), திரு அப்துல் லத்தீப் (மு.லீக்.), திரு வெங்கடேச தீட்சிதர் (ஜனதா தளம்) ஆகியோர், பிறந்த நாள் விழா காணும் மாண்புமிகு முதல்வர் அவர்களை வாழ்த்திப் பேசினார்கள்.

கூட்ட முடிவில் திரு கோ. அய்யாவு நன்றி கூறினார்.

நிகழ்ச்சித் தொகுப்பு:
-ராஜு

**TNPSC** **விளம்பர எண்: 19/90**

தமிழ்நாடு பொதுச் சார்நிலை பணியில், சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள கீழ்க்காணும் பதவிகளுக்கு 10.7.1990 அன்று மாலை 5.45 மணி வரையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மாதச் சம்பளம், வயது வரம்பு மற்றும் கல்வித் தகுதி ஆகியன பதவிகளின் பெயர்களுக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. (நியமன ஒதுக்கீட்டு விதி இப்பதவி களுக்குப் பொருந்தாது)

1. ஒரு காப்பாட்சியர் (புவியியல் பிரிவு)
   ரூ.1,820-3,200/-.
   1.7.1990 அன்று 30-க்குக் குறைவாக.
   புவியியலில் ஒரு முதுநிலை அல்லது ஹானர்ஸ் பட்டம்.

2. ஒரு காட்சிக்கூட விளக்குநர் (இயற்கை அறிவியல் பிரிவு).
   ரூ. 1,200-2,040/-
   1.7.1990 அன்று 30-க்குக் குறைவாக
   விலங்கியலில் அல்லது தாவரவியலில் அல்லது புவியியலில் பி.ஏ. அல்லது பி.எஸ்சி. பட்டம்.

விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப கோரிக்கைகளிலும் விண்ணப்பத்திலும் பதவியின் பெயரைத் தெளிவாகப் பெரிய எழுத்துக்களில் குறிப்பிட வேண்டும்.

**இரு பதவிகளுக்கும் உரியன:**

குறிப்பு: தெரிவுக்குரிய குறைந்தபட்ச மதிப்பெண்களையேனும் பெறும், இப்பதவிக்குரிய கல்வித் தகுதியைப் பெற்ற ஆதரவற்ற விதவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**விளக்கம்:** ''ஆதரவற்ற விதவை'' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும் பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், பிணைத் தொழிலாளர்கள், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்'' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களிடம் எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ, பதவியின் பெயர், விளம்பர எண் மற்றும் இனத்தின் எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு வழங்கக்கூடிய, 31.5.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட ரூ.10/-க்கான (ரூபாய் பத்து) சென்னை அண்ணாசாலை தலைமை அஞ்சல் நிலையத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய, 31.5.1990 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம்விளக்குக் கிளை, சென்னை-6-ல் செலுத்தத்தக்க ரூ.10/-க்கான ''கேட்புக் காசோலை'' (Account Payee Demand Draft) யுடனும் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்பட மாட்டா.

**குறிப்பு:** ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியே விண்ணப்பப் படிவ விலையைச் செலுத்தி, தனித்தனியே கோரிக்கை மனுவைச் சமர்ப்பிக்க வேண்டும்.

DIPR/1347/MS/90/B



# கார் நெல்லுக்கு உரமிடல்

தற்சமயம் ஆழியார் பாசனத்தில் ஆனைமலைப் பகுதியில் கார்/குறுவை நெல் சாகுபடி (வைகாசி-ஆவணிப்பட்டம்) தீவிரமாக நடைபெறுகிறது. எக்டேருக்கு 10-11 டன் மகசூல் எடுக்கத் தீவிர முயற்சிகள் செய்து தக்க செயல்முறைகளைக் கையாள வேண்டும்.

இப்பருவத்தில் ஐ.ஆர்.50 ஏடிடி.36, மற்றும் ஏடிடி.37 வித்துக்களில் ஒன்றைத் தேர்வு செய்து கொள்ளலாம். நாற்றங்கால்களை நன்றாகப் பண்படுத்தி பட்டையான, குட்டையான, பூச்சி நோய் தாக்காத வீரிய நாற்றுக்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும்.

நடவு வயலில் கீழ்க்கண்ட பிரகாரம் உரமிடுவது அவசியம்.

அடியுரமாக எக்டேருக்கு 50-50-50 கிலோ முறையே தழை - மணி - சாம்பல் சத்து இட வேண்டும். இதற்கு 110 கிலோ யூரியா, 310 கிலோ சூப்பர், மற்றும் 85 கிலோ மியூரேட் பொட்டாஷ் தேவைப்படும்.

இத்துடன் எக்டேருக்கு 10-12 டன் இலை-தழை அல்லது தொழுஉரம் இட்டு சேற்று உழவு செய்து மக்க வைத்திருக்க வேண்டும். அதாவது, நடவுக்கு 15 நாட்களுக்கு முன் இவ்வுரத்தை இடவேண்டும்.

நடவு நட்டு 15-வது நாள் 8 கிலோ யூரியாவை 16 கிலோ வேப்பம் புண்ணாக்குடன் கலந்து முதல் மேலுரமாக இடவேண்டும். இதனால் அதிக தூர்கள் கட்ட ஏதுவாகும். நடவு நட்டு 30-வது நாள் இரண்டாவது மேல் உரம் இட வேண்டும். 83 கிலோ யூரியாவுடன் 42 கிலோ பொட்டாஷ் உரத்தையும் சேர்த்து இடவேண்டும். இதனால் கதிரின் எண்ணிக்கையும், எடையும் கூடுதலாகக் கிடைக்கும்.

மூன்றாவது மேலுரமாக, நடவு நட்டு 45-வது நாள் எக்டேருக்கு 55 கிலோ யூரியாவை இடவேண்டும். இதனால் மணிகளின் எடை கூடிக் கிடைக்கும்.

நடவு செய்யும் பொழுது எக்டேருக்கு 25 கிலோ ஜாஸ் சல்பேட்டை இட வேண்டும். இதனால் துத்தநாகப் பற்றாக்குறையைத் தீர்க்க முடியும்.

நடவு செய்யும் பொழுது, சதுர மீட்டருக்கு 70-80 குத்துக்கள் நாற்றுகளை நட்டு (ஒரு குத்துக்கு 2-3 நாற்றுக்கள்) மேற்கண்டபடி உரமிட்டு, ஒருங்கிணைந்த களைக் கட்டுப்பாடும்,பயிர்ப்பாதுகாப்பும் செய்தால் திட்டமிட்ட மகசூல் கிடைக்கும்.

## மாம்பழத்து வண்டு

முக்கனிகளுள் ஒன்றான மாம்பழங்களை விரும்புவோர் ஏராளம். மாமரங்களைத் தாக்கும் பூச்சிகளும் ஏராளம். அதனில், மாம்பழங்களை மற்றும் மாங்கொட்டைகளைத் தாக்கும் கூன் வண்டு முக்கியமான ஒன்றாகும். இக்கூன் வண்டுகள் கரும்பழுப்பு நிறமாக 6 மி.மீ. நீளமுள்ளதாக இருக்கும். சித்திரை அல்லது வைகாசி மாதங்களில் அறுவடை செய்யப்பட்ட மாம்பழங்களைச் சாப்பிட்டு தூக்கி எறியப்பட்ட கொட்டைகளினுள் இவ்வண்டுகள் அசைவற்று இருக்கும். மாமரப்பட்டைகளிலும் இவ்வண்டுகளைக் காணலாம். பெண் வண்டுகள் மாம்பிஞ்சு மற்றும் மாங்காய்களின் மீது சுரண்டி தனித்தனியே முட்டைகளை இடும்.

இம்முட்டைகள் மாங்காய்களில் இருந்து வடியும் பால் போன்ற திரவத்தினால் மூடப்பட்டிருப்பதால் நம்மால் முட்டைகளைக்காண முடியாது. சுமார் 7 நாட்களில் இளம் புழுக்கள் வெளிப்பட்டு மாங்காய்களைக் குடைந்து பாதை மூடப்படுவதால் சேதம் புலப்படுவதில்லை. வெண்மையான நிறமும் கருமையான தலையும் கொண்ட புழுக்கள் மாங்கொட்டைக்குள் விதைப் பருப்பைத் தின்று கூண்டுப்புழுவாகி சுமார் 7-10 நாட்களில் கூன் வண்டுகளாக மாறுகின்றன.

பழுத்த பழத்தினுள் முழு வளர்ச்சியடைந்த கூன் வண்டு காணப்படும். மாம்பழத்தைத் தவிர வேறு எந்தப் பழ வகைகளையும் இவ்வண்டு தாக்குவதில்லை. ஒரு வருடத்தில் ஒரு தலைமுறை காணப்படும். சாதாரணமாக நீலம், பெங்களூரா ரகங்கள் அதிக தாக்குதலுக்குள்ளாகும். மல்கோவா ரகத்தில் தாக்குதல் குறைந்து காணப்படுகிறது.

மாம்பழத்து வண்டுகளைத் தடுக்க மாம்பிஞ்சு தோன்றும் காலங்களில் பயிர் பாதுகாப்பு செய்தல் அவசியம். முட்டைகளையும் இளம் புழுக்களையும் அழிக்க கார்பரில் 50 சதம் நீரில் நனையும் தூளை 1 லிட்டர் நீருக்கு 4 கிராம் என்ற அளவிலோ அல்லது பென்தியான் 0.1.1 சத மருந்துக் கரைசலை மாம்பிஞ்சுகள் தோன்றும் காலங்களில் ஒரு முறையும், அதன் பின்னர் 15 நாட்கள் கழித்து மறுமுறையும் ராக்கர் ஸ்ப்ரேயர் கொண்டு தெளித்துப்பயன்பெறலாம்.

அதன் பின்னர் சுமார் 15-20 நாட்களுக்கு ஒரு முறை மருந்து தெளிப்பதால் இவ்வண்டுகளின் தாக்குதலை மேலும் குறைக்கலாம். நீலம் மற்றும் பெங்களூரா ரகங்கள் அதிக தாக்குதலுக்குள்ளாவதால் அந்த ரகங்களைப் பயிர் செய்பவர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பது நலம்.

## வேர்க்கடலைக்கு ஏன் ஜிப்சம் இடவேண்டும்?

எண்ணெய்வித்துப் பயிர்களிலேயே வேர்க்கடலைப் பயிர்தான் முதன்மை வகிக்கின்றது. பயிரிலிருந்து அதிக லாபம் கிடைப்பதிலும், சத்துள்ள உணவு கிடைப்பதிலும் மிகச் சிறந்து விளங்குகிறது.

வேர்க்கடலைப் பயிருக்கு சுண்ணாம்புச் சத்து, கந்தகச்சத்து இவை இரண்டும் மிகவும் முக்கியமானதாகும்.

முதல்களை எடுக்கும் சமயத்தில் ஒரு எக்டருக்கு 200 கிலோ ஜிப்சம் இடுவதால் பின்வரும் நன்மைகள் ஏற்படுகின்றன.

(அ) விழுதுகள் நன்கு மண்ணில் வளர்ந்து பரவப்பயன்படுகிறது. இதனால் திரண்ட காய்கள் கிடைக்கவும், காய்களில் மணிலாப் பயிறு விரைவில் நன்கு வளரவும் பயன்படுகிறது.

(ஆ) கந்தகச் சத்தினால் எண்ணெயின் அளவும் புரதச்சத்தும் கூடுகிறது.

(இ) வேர்க்கடலைத் தோல் நன்கு வளர, சுண்ணாம்புச்சத்து மிகவும் அவசியமாகிறது.

ஆதலால் வேளாண்குடிப்பெருமக்கள் ஒரு எக்டருக்கு 200 கிலோ ஜிப்சத்தை வேர்க்கடலைப் பயிருக்கு அளித்து, அதிகமான மகசூல் பெறுவதோடு ஊட்டச்சத்து மிகுந்த வேர்க்கடலையைத் தயாரித்து மிகுந்த பயனடையலாம்.

**வேளாண் தகவல் பணிமையம்,**
**தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக் கழகம்,**
**கோவை-641 003.**

## மாணவர் பக்கம்

# வெற்றி பெற விரும்பு



பூவிதழை வண்டமர்ந்து
படிக்கும் விடியலில்
பூந்தென்றல் தொட்டெழுப்பும்
புலரும் காலையில்


ஆவலுடன் எழுந்துபடி
அதிகாலையில்!
அறிவுக்கண் திறக்கும் அந்த
அமைதி வேளையில்!

நாளும் விரும்பிப் பாடங்களைக்
கேட்க வேண்டும்நீ!
நல்லாசான் அறிவுவழியில்
நடக்க வேண்டும்நீ!

மாலை வீடு திரும்பி ஆடி
மகிழ வேண்டும் நீ!
வகுப்பில் நடந்த பாடம் நினைந்து
படிக்க வேண்டும் நீ!

தொடர்புப் படுத்திக் கற்றவற்றை
நினைக்க வேண்டும்நீ!
தோழரோடு விவாதித்துத்
தெளிய வேண்டும்நீ!

சுடர் விளக்காய் விளங்கி இருளைத்
துரத்த வேண்டும் நீ!
சுறுசுறுப்பால் வெற்றிக் கனியைச்
சுவைக்க வேண்டும் நீ!



—கவிஞர் பல்லவன்

## அறிவுச்சுடர்

1. உலகத்திலேயே ஆறுகளே இல்லாத நாடு எது?
2. தண்ணீரே குடிக்காத மிருகம் எது?
3. ஏரிகள் அதிகம் உள்ள நாடு எது?
4. 'இமாமி' என்பது எந்த மொழிச் சொல்? அதன் பொருள் யாது?
5. 'லிஃப்டைக்'க் கண்டுபிடித்தவர் யார்?
6. கிரிக்கெட் டெஸ்ட் பந்தயத்தில் உலகில் இள வயதில் பங்கு கொண்ட ஆட்டக்காரர் யார்?
7. ஒரு தந்தை, அவரது மகன் இருவருமே அமெரிக்கக் குடியரசுத்தலைவர்களாக இருந்திருக்கின்றனர். அவர்கள் யார்?
8. ஹாக்கி விளையாட்டில் உலக அளவில் முதன் முதலில் வெற்றி கண்ட நாடு எது?
9. உயில் எழுதி வைக்கும் வழக்கத்தை முதன்முதலில் எந்த நாட்டினர் ஆரம்பித்து வைத்தார்கள்?
10. Y.M.C.A. நிறுவனத்தை நிறுவியவர் யார்?
11. நவரத்தினங்கள் யாவை?
12. சிறுத்தையின் வேகம் மணிக்கு எத்தனை கிலோமீட்டர்?
13. தமிழறிஞர் திரு.வி.க. எழுத்தராகப் பணியாற்றிய நிறுவனம் எது?
14. டெல்லி எந்த நதிக் கரையில் உள்ளது?
15. ஐரோப்பாவிலே பிறந்து, ஆசியாவிலே இருந்து, ஆப்பிரிக்காவில் அடக்கம் செய்யப் பட்ட மாமனிதர் யார்?

## அறிவுச்சுடர் (விடைகள்)

1. அரேபியா
2. கோலா கரடி
3. பின்லாந்து
4. இத்தாலி மொழிச் சொல். 'என்னை விரும்புங்கள்' என்பது பொருள்.
5. ஈ.ஜீ. ஒட்டிஸ்
6. பாகிஸ்தானைச் சேர்ந்த முஷ்டாக் முகம்மது தம்முடைய 15-வது வயதில்.
7. முறையே ஜான் ஆடம்ஸ், ஜான் குவின்ஸ் ஆடம்ஸ்.
8. இங்கிலாந்து.
9. ரோம் நாட்டவர்கள்
10. ஜார்ஜ் வில்லியம்
11. கோமேதகம், நீலம், பவழம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், வைரம், வைடூரியம், முத்து.
12. மணிக்கு 120 கிலோ மீட்டர்.
13. சென்னையில் உள்ள ஸ்பென்சர் நிறுவனம்.
14. யமுனை நதிக்கரை
15. மாவீரன் அலெக்சாண்டர்.

—நன்றி: 'தமிழ்நாடு பெற்றோர்-ஆசிரியர் கழகச் செய்தி'




# வெள்ளி விழாக் காணும் திரைப்படக் கல்லூரி

தமிழ்நாடு அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிக் கல்லூரியின் வெள்ளிவிழா, 4.6.90 அன்று, கல்லூரி வளாகத்திலேயே மிகச்சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு பி. உபேந்திரா அவர்களும், மாண்புமிகு மத்தியநகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு முரசொலி மாறன் அவர்களும் பங்கேற்ற இந்த இனிய விழா, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் நடை பெற்றது.

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர்திரு க. அன்பழகன் அவர்களும், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு பொன். முத்துராமலிங்கம் அவர்களும் மற்றும் நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள்.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு கி. இராஜமாணிக்கம் இ.ஆ.ப., அவர்கள் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிய இவ்விழாவில்-திரைப்படக் கல்லூரியின் தலைவர் திரு கே. சொர்ணம் அவர்கள் வரவேற்புரையாற்றினார் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார்.

ஏராளமான கலையுலகினர் வருகை தந்து சிறப்பித்த தமிழ்நாடு அரசு திரைப்படம் மற்றும் தொலைக் காட்சிக் கல்லூரி வெள்ளி விழாவில்- திருவாளர்கள் எஸ்.பி. முத்துராமன், திரு கே.எஸ். கோபால கிருஷ்ணன், திரு பாரதிராஜா, திரு முக்தா சீனிவாசன், திருமதி லட்சுமி, திரு சிவகுமார், திரு கமல் ஹாசன், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு பொன். முத்துராம லிங்கம், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு க. அன்பழகன், மாண்புமிகு மத்தியநகர்ப்புறவளர்ச்சி மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு முரசொலிமாறன் ஆகியோர் வாழ்த் துரை வழங்கினார்கள்.

அரசு திரைப்படக்கூடம் மற்றும் வெளிப்புறப் படப்பிடிப்பு வளாகத் திற்கு அடிக்கல் நாட்டி மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு பி. உபேந்திரா அவர்கள் உரையாற்றினார்.

இவ்விழாவில், அரசு திரைப் படக் கல்லூரி சார்பில், அதன் தலைவர் திரு கே. சொர்ணம் அவர்கள் முதலமைச்சர் நிவாரண நிதிக்காக ரூ. 6,800 வழங்கினார். திரு பாரதிராஜா ஐயாயிரம் ரூபாய் வழங்கினார். திரைப்படக் கல்லூரி முன்னாள் மாணவர்கள் ரூ. 1001/-ம், திரு சாம்ராஜ் ரூ. 1001/-ம் நிதி வழங்கினார்கள்.

அரசு திரைப்படக் கல்லூரியின் ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கும், இங்கே பயின்று திரைத்துறையில் ஒளிவீசித் திகழ்வோருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறக்கட்டளை விருது களையும் நினைவுப் பரிசுகளையும் வழங்கினார்.

அதன்பின், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தமது சிறப்புரை யில் குறிப்பிட்டதாவது:

"மாநில அரசு பெரிய மாளிகை களை இங்கே எழுப்பலாம். இங்கே

TNPSC

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.

தேர்வாணையத்தால் 7.3.90 அன்று தமிழ்நாடு பொது சுகாதார சார்நிலைப் பணியில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை இயக்ககத்தில் புள்ளி விவர ஆராயவாளர் (Statistical Investigator) பதவிக்கு நடத்தப்பட்ட சுருக்குத்தேர்வு (Short Listing Examination) முடிவின் அடிப்படையில் தற்காலிகமாக நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் பதிவெண்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. நேர்முகத் தேர்வு சென்னை-2 அண்ணாசாலை அரசினர் தோட்டத்திலுள்ள அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெறும். நேர்முகத் தேர்விற்கான நாள் மற்றும் நேரம் ஆகியவை குறித்து விவர அறிவிப்பு தனித்தனியே விண்ணப்பதாரர்களுக்கு உரிய நேரத்தில் அனுப்பப்படும். இப்பட்டியலில் இடம்பெறாத பதிவு எண்களை உடைய விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறார்கள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 22 | 26 | 42 | 44 | 46 | 48 | 64 |
| 73 | 78 | 92 | 111 | 140 | 169 | |

DIPR/1302/MS/90/ad.bureau/3548

சுட்டிக் காட்டப்பட்டதைப்போல ஒரு ஐம்பது ஏக்கரா வெற்றிடம் இருக்கிறது. மத்திய அமைச்சர் உபேந்திரா அவர்கள் இங்கே வெளிப்புறக் காட்சிகளுக்கான கட்டிடங்களைக் கட்டுவதற்காகவும், அமைப்புக்களை உருவாக்குவதற்கும்தான் அதற்கான அடிக்கல்லை நாட்டியிருக்கிறார். அந்தக் கட்டிடங்கள், விரைவிலே இங்கே எழுந்திடவிருக்கின்றன. மாநில அரசின் சார்பில் அதற்கென உதவிகள் செய்யப்பட்டாலும்கூட மத்திய அரசும் தன்னுடைய கடமையை மறந்துவிடக் கூடாது. அதற்கான செலவின் ஒரு பகுதியை மத்திய அரசு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகின்றேன்.

**காவிரி நதிநீர்ப் பிரச்னைக்குத் தீர்வு காண மூன்று நீதிபதிகளைக் கொண்ட நடுவர் மன்றத்தை (டிரிபியூனல்) மத்திய அரசு அமைத்துள்ளது. இது பற்றிய அறிவிப்பு 2.6.90 அன்று வெளியிடப் பட்டது.**

**நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் செய்தியாளர்கள் கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்:**

**''என் பிறந்த நாளினையொட்டி இது எனக்குக் கிடைத்த மகிழ்ச்சியான செய்தி!''**


''ஏனென்றால் தொலைக்காட்சியிலே அரசின் செய்திகளை – மக்களுக்குத் தேவையான அறிவுரைகளை சொல்வதற்கு அந்த அரும்பெரும் சாதனத்திலே இன்றைக்குப் பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டியவர்கள் கலைஞர்கள். அவர்கள் எந்தக் கலைஞர்களாக இருந்தாலும் சரி; நடிப்புக் கலைஞர்களாக இருந்தாலும், எழுத்துக் கலைஞர்களாக இருந்தாலும், இசைக் கலைஞர் அல்லது பாட்டுக் கலைஞர் அல்லது ஒளிப்பதிவு, ஒலிப்பதிவுக் கலைஞர்களாக இருந்தாலும் அவர்களையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு வேகவேகமாக ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிடமும் உலகத்திலே இன்றைக்கு அறிவிக்கப்படுகின்ற செய்திகளை நாட்டுமக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய அந்த அரும் பணியைச் செய்கின்ற, படைக்கலனாக விளங்குகின்ற இந்த அரிய தொழிலுக்கு மாநில அரசினுடைய உதவிகள் மாத்திரம் இருந்தால் போதாது. மத்திய அரசின் உதவியும் தேவை.

''எனவே அந்தத் தேவையை உணர்ந்து அடிக்கல் நாட்டிய அமைச்சர் உபேந்திரா அவர்கள் அடுத்த ஆண்டு வரும்பொழுது எத்தனை கட்டிடங்கள் எழுந்திருக்கின்றன என்று கேட்டால், பணம் இல்லாத காரணத்தால் ஓரளவுதான் முடிந்திருக்கிறது என்று சொல்லுகின்ற அவல நிலை எங்களுக்கு இல்லாமல் அவர் அடிக்கல் நாட்டிய காரணத்தினால் அவருடைய கைராசியை அனைவரும் புகழ வேண்டுமென்ற காரணத்திற்காகவாவது இந்தக் கட்டிடங்கள் உடனடியாக உருவாவதற்கான வழி வகைகளை ஆராய்ந்து, போதுமான நிதியை அவர்களும் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

''இங்கே அமைச்சர் நேரு பேசும் பொழுது இதை ஒரு பல்கலைக்கழகமாக மாற்றவேண்டும் என்று சொன்னார்.

''ஒரு திரைப்படக் கல்லூரி பல்கலைக் கழகமாக மாறுவதற்கு என்னென்ன வாய்ப்புக் கூறுகள், எத்த்கைய சூழ்நிலைகள் அமைய வேண்டுமென்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும். ஏற்கனவே அதனை ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்தக் குழுவினுடைய ஆலோசனைகளைப் பெற்ற பிறகு அதைப் பற்றிச் சிந்திக்கலாமென்ற கருத்தை மாத்திரம் இங்கே எடுத்து வைத்து, இந்தத் திரைப்படக் கல்லூரியிலிருந்து வெளிவந்து ஒளி தந்து கொண்டிருக்கின்ற கலைஞர்களையெல்லாம் வாழ்த்துகின்றேன்.''

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்கள். மாணவர் தலைவர் திரு திருமுருகன் நன்றி கூறினார்.



மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் - அரசு திரைப்படக் கல்லூரி வெள்ளிவிழா மலரை வெளியிட முதல் மலரை நடிகர் திரு. கமல்ஹாசன் பெற்றுக் கொண்டார்.

TNPSC

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.

தேர்வாணையத்தால் 28.1.90 அன்று தமிழ்நாடு பிற்பட்டோர் நல சார்நிலைப் பணியில் இடைநிலைப்பள்ளிகளில் ஆசிரியர் (Teachers in Secondary Schools in the Tamil Nadu Backward Classes Welfare Subordinate Service) பதவிகளுக்கு நடத்தப்பட்ட சுருக்குத்தேர்வு (Short Listing Examination) முடிவின் அடிப்படையில் தற்காலிகமாக நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் பதிவெண்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. நேர்முகத்தேர்வு சென்னை-2, அண்ணாசாலை, அரசினர் தோட்டத்திலுள்ள அரசுப்பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெறும். நேர்முகத்தேர்விற்கான நாள் மற்றும் நேரம் ஆகியவை குறித்து விவர அறிவிப்பு தனித்தனியே விண்ணப்பதாரர்களுக்கு உரிய நேரத்தில் அனுப்பப்படும். இப்பட்டியலில் இடம்பெறாத பதிவு எண்களை உடைய விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்வுக்கு அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறார்கள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | 15 | 16 | 55 | 56 | 61 | 64 |
| 71 | 116 | 117 | 126 | 127 | 129 | 132 |
| 148 | 162 | 168 | 178 | 180 | 183 | 185 |
| 190 | 191 | 193 | 197 | 205 | 214 | 217 |
| 223 | 229 | 235 | 238 | 239 | 242 | 319 |
| 337 | 346 | 352 | 355 | 366 | 378 | 383 |
| 390 | 407 | 435 | 454 | 455 | 463 | |

டி.ஐ.பி.ஆர்/1300/எம்எஸ்/90/அக்கார்ட்

பெரியார் மாவட்டத்தில்

# விவசாயிகளுக்கு அரசு மானியம்

பெரியார் மாவட்டத்தில் விவசாயப் பெருங்குடி மக்களின் நலனுக்காகவும், வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கு வதற்காகவும், பல்வேறு சலுகைகளையும் மானிய உதவிகளையும் மத்திய அரசும், மாநில அரசும் வழங்கியுள்ளன. வேளாண்மை வளர்ச்சியையும், உற்பத்தியையும் கருத்திற்கொண்டு தமிழ்நாடு வேளாண்மைத் துறையும், எண்ணெய் வித்துத் துறையும் தற்போது பல்வேறு மானியங்களை வழங்கி வருகின்றன.

குறைந்த விலையில் விதை விநியோகம், மானாவாரியில் தொழில் நுட்பத் திடல்கள் அமைக்க மானியம், கரும்பு விதைக் கரணை உற்பத்திக்கு மானியம், களைக்கொல்லி உபயோகத்தை ஊக்குவிக்க மானியம், நெற்பயிரைத் தாக்கும் பூச்சி நோய்களைக் கட்டுப்படுத்த 50 சத மானியம், எலி ஒழிப்பு மானியம், சோளப் பயிரைத் தாக்கும் புழுவைக் கட்டுப்படுத்த மானியம், ஆதிவாசிகள் பழங்குடியினர் மக்காச்சோளம் சாகுபடி செய்ய ஊக்குவிப்பு உதவி, ஆதிதிராவிடர் சிறப்பு நலத்திட்டம், பண்ணைக்காடுகள் வளர்ப்புக்கு மரக்கன்றுகள் இலவசம், வீட்டுக்கு ஒரு முருங்கை, பப்பாளிக் கன்றுகள் இலவசம் மற்றும் வறட்சி நிவாரணத் திட்டம் போன்ற மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

உயர் விளைச்சல் தரும் புதிய ரக விதைகளை விவசாயிகளிடையே பிரபலப்படுத்த தலா 2 கிலோ எடையுள்ள நெல் மினிகிட் விதைப் பைகள் சிறு, குறு மற்றும் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு மிகக் குறைந்த விலையாக பை ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் 2,100 விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

அதே போல ரூ. ஒன்றுக்கு ராகி, சோளம், கம்பு ஆகிய சிறு தானியங்கள் 5,690 விவசாயிகளுக்கும், மிகக் குறைந்த விலையாக ரூ.5/-க்குத் தலா 4 கிலோ எடையுள்ள பயறு வகை விதைப் பைகள் 4,400 விவசாயிகளுக்கும் வழங்கப்படுகின்றன.

மானாவாரியில் மகசூலைப் பெருக்கப் பயன்படும் தொழில் நுட்பங்களைப் பிரபலப்படுத்த ஏக்கருக்கு ரூ.40/- வீதம் மானிய உதவிகள் வழங்கிச் செயல் விளக்கத்திடல்கள் அமைக்கப்படுகின்றன. மொத்தம் 1,150 ஏக்கரில் இத்திடல்கள் ரூ.46,000/- செலவில் அமைக்கப்படவுள்ளன. ஒவ்வொரு திடலும் 5 ஏக்கர் பரப்பில் இருக்கும். இதன்மூலம் 230 விவசாயிகளுக்கு மானிய உதவி கிடைக்கும்.

சிறுகமணியில் உள்ள கரும்பு ஆராய்ச்சி நிலையம் வழங்கும் கோ.க.671, கோ.க.85061, கோ.க.86071, கோ.க. 86062, கோ.க.6304 ஆகிய ரகங்களை உபயோகித்து, விதைக் கரணைகளை உற்பத்தி செய்து, நாற்றங்கால் அமைக்கும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.600/- வீதம் மானிய உதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 100 ஏக்கரில் தரமான விதைக்கரணைகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படும்.

நெற்பயிரைத் தாக்கும் இலை சுருட்டுப் புழு, புகையான் மற்றும் குலைநோய் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த 50 சத மானிய விலையில் விவசாயிகளுக்குப் பூச்சி மருந்து வழங்கப்படுகிறது. இந்தப் பூச்சி நோய்களின் தாக்குதலைக் கணக்கிட்டுப் பொருளாதார சேத அளவைத் தாண்டியதாக முதல் அறிவிப்பு வெளியானவுடன் இந்தச் சலுகை விவசாயிகளுக்குக் கிடைக்கும். ஏக்கருக்கு ரூ.18/- மானியம் வீதம் சுமார் 5,000 ஏக்கருக்கான மருந்துகள் ரூ. 90,000/- செலவில் இலை சுருட்டுப் புழுவைக் கட்டுப்படுத்தவும், சுமார் 10,000 ஏக்கருக்கான மருந்துகள், ரூ.1,80,000/- செலவில் புகையானைக் கட்டுப்படுத்தவும், ஏக்கருக்கு ரூ.30/- மானியம் வீதம் சுமார் 5,000 ஏக்கருக்கான மருந்துகள் ரூ. 1,15,000/- செலவில் குலைநோயைக் கட்டுப்படுத்தவும் வழங்கப்படுகிறது. ஏக்கருக்கு ரூ.38/- வீதம் சுமார் 9,625 ஏக்கருக்கான மருந்துகள் ரூ. 3,69,250/-மானியத்தொகையின் உதவியுடன் பச்சைத் த்த்துப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த வழங்கப்படுகிறது.

25 சத மானியமாக, ஏக்கருக்கு ரூ.1.40 வீதம் சுமார் 30,625 ஏக்கருக்குத் தேவைப்படும் எலி ஒழிப்புக்கான விஷ மருந்துகள் ரூ. 43,750/- மானிய உதவியுடன் அரசு வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

இளம் சோளப் பயிரை ஒரு வகை குருத்துப் புழு தாக்கி சேதத்தை ஏற்படுத்தி வருகிறது. இதனைக் கட்டுப்படுத்த 50 சத மானிய விலையில் ஏக்கருக்கு ரூ. 4/- வீதம் சுமார் 1,937 ஏக்கருக்கான மருந்துகள் ரூ.7,750/- செலவில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

பவானி மற்றும் கோபி கோட்டங்களில் வாழும் ஆதிவாசிகளும், பழங்குடியினரும் தமது நிலத்தில் மக்காச்சோளத்தைச் சாகுபடி செய்து நல்ல வருமானம் பெற ஊக்குவிக்க இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏக்கருக்கு ரூ. 326/- மதிப்புள்ள விதை உரங்கள் இவர்களுக்கு ஊக்குவிப்பு மானியமாக வழங்கப்படும். 15 ஏக்கர் பரப்பிற்கான மானிய உதவி இந்த ஆண்டு வழங்கப்பட்டு வருகிறது.

சிறப்புத் திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் ரூபாய் செலவில் சுமார் 1,000 ஆதிதிராவிட விவசாயிகளுக்கு 50 சத விகித மானிய விலையில் - வேளாண் கருவிகள் வழங்கப்படுகின்றன. அதே போல 50 சதவிகித மானிய விலையில் 8,700 விவசாயிகளுக்கு ரூ.2,90,000/- மதிப்புள்ள நெல் மற்றும் சிறுதானிய விதைகளும், 4,400 விவசாயிகளுக்கு ரூ.80,000 மதிப்புள்ள பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளும் வழங்கப்படுகின்றன.

தற்போது ரூ.1,66,900/- செலவில் 2,72,143 மரக் கன்றுகளும், 5,900 பழக்கன்றுகளும், சிறு, குறு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடக் குடியிருப்புப் பகுதியில் வீட்டு விவசாயத்தை ஊக்குவிக்க, ரூ.3,234/- செலவில், 5,700 குடும்பங்களுக்கு மொத்தம் 11,400 கன்றுகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

1988-89-ல் தாராபுரம், பெருந்துறை, காங்கயம் பகுதிகளில் கடும் வறட்சியினால் பாதிக்கப்பட்ட சிறு குறு விவசாயிகளுக்கு, ஒவ்வொரு விவசாயிக்கும் தலா ரூ.200/- வீதம், ரூ.15,43,800/- மதிப்புள்ள உரம் இலவசமாக வழங்கப்பட்டது.

இவ்வாறாக வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க இப்பகுதியில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

—எஸ். நாகராசன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
பெரியார் மாவட்டம்.

**TNPSC**

**விளம்பர எண்: 18/90**

தமிழ்நாடு பொறியியல் சார்நிலைப் பணியில், பொதுப்பணித்துறை நிலத்தடி நீர்ப்பிரிவில் உதவி புவிவேதியியலர் பதவியில் ஒரு காலியிடத்திற்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பைச் சார்ந்த விண்ணப்ப தாரர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் 10.7.1990 அன்று மாலை 5.45 மணி வரையில் வரவேற்கப்படுகின்றன. (இந்த காலியிடம் முன் தெரிவில் நிரப்பப்பட இயலாத ஆதிதிராவிடர்/பழங்குடி வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட காலியிடமாகும்).

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூ. 1,640-60-2,600-75-2,900

**வயது:** வயது வரம்பு இல்லை.

**தகுதி:** வேதியியலில் முதுநிலைப் பட்டம்

**குறிப்பு:** தெரிவுக்குரிய குறைந்தபட்ச மதிப்பெண்களையேனும் பெறும், பதவிக்கான கல்வித் தகுதியைப் பெற்ற ஆதரவற்ற விதவைகளுக்கு முன்னுரிமை வழங்கப் படும்.

**விளக்கம்:** ''ஆதரவற்ற விதவை'' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும் பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாத விதவையைக் குறிப்பதாகும்.

தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர் போன்றவர்களுக்கு கல்வி தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக் கான விதிமுறைகளில்'' தரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களிடம் எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம், கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத் திலோ, பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவை குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு வழங்கக்கூடிய, 28.5.1990 அன்றோ, அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட ரூ.10/-க்கான (ரூபாய் பத்து), சென்னை அண்ணாசலை தலைமை அஞ்சல் நிலையத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 28.5.1990 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம் விளக்குக் கிளை, சென்னை-6-ல் செலுத்தத்தக்க ரூ.10/-க்கான ''கேட்புக் காசோலை'' (Demand Draft)-யுடனும் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

**DIPR/1347/(A)/MS/90**

# மானாமதுரையில் மட்பாண்டத் தொழில் வளர்ச்சி

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் மானாமதுரையில் மட்பாண்டத் தொழிலாளர் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம் 1946 முதல் செயல்பட்டு வருகிறது.

மானாமதுரை மட்பாண்டங்கள் தமிழகத்தில் பெயர் பெற்றவைகளாகும். இங்கு செய்யப்படும் மட்பாண்டங்கள் தமிழ் நாட்டில் பரவலாகப் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இம்மட்பாண்டங்கள் இங்கிருந்து கேரள மாநிலத்திற்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இம்மட்பாண்டங்கள் உறுதியாகவும், நீடித்த உழைப்பிற்கும் பெயர் பெற்றவை. இதற்கு ஏற்ற மண் இங்கு கிடைக்கின்றது.

மட்பாண்டங்களில் சமைக்கப்படும் உணவு ருசியாகவும், உடல் நலத்திற்கு ஏற்றதாகவும் உள்ளது. மட்பாண்டங்களை மக்கள் இன்றும் பயன்படுத்தி வருகின்றனர். மானாமதுரையில் மட்பாண்டங்கள் செய்வதற்கு ஏற்ற மண் பெருமளவில் கிடைக்கின்றது. நான்கு வகையான மண் இதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இம்மண்ணில் இரும்புத்தாது உள்ளது. 2.2.1946-ல் இதற்கான சங்கம் ஒன்று ஆரம்பித்து அமைக்கப்பட்டுச்செயல்பட்டு வருகிறது. இந்த மட்பாண்டத் தொழிலை ஏறத்தாழ அறுபது குடும்பங்கள் செய்து வருகின்றன.

குடும்பம் ஒன்றிற்கு ரூ.350 முதல் 400 வரை மாத வருமானம் கிடைக்கிறது. இத்தொழிலில் ஈடுபட்டுள்ளோர் பொருளாதாரத் துறையில் பிற்பட்டோர்களாகவே உள்ளார்கள்.

இந்த மட்பாண்டத்தொழிலாளர் கூட்டுறவு குடிசைத்தொழில் சங்கம் பல சீரிய நோக்கங்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

இச்சங்கம், மட்பாண்டத்தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்படும் மட்பாண்டங்களைத் தகுந்த விலை கொடுத்து வாங்கி, அவற்றைத் தேவைப்படும் இடத்திற்கு அனுப்புகிறது. கேரளத்திற்கும் ஏற்றுமதி செய்கின்றது. இத்தொழிலாளர்களுக்கு முன்பணமும் கடனாகக் கொடுத்து உதவுகிறது. மாதம் ரூ.10,000/-க்குச் சராசரியாக மட்பாண்டங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. நவம்பர், டிசம்பர், ஜனவரி போன்ற மழைக்காலங்களில் உற்பத்தித்திறன் குறைந்து ரூ.6,000/- அளவிற்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. நூறு வகையான மட்பாண்டங்கள் செய்யப்படுவதை இங்கு காணலாம். வேளாண் துறை, தோட்டக்கலைத்துறை போன்ற அரசுத் துறைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் இம்மட்பாண்டங்களைப் பெரிதும் வாங்கிப் பயன்படுத்துகின்றன. புகைப்போக்கி (CHIMNEY), புகைத்தட்டு (SMOKING OVEN) தண்ணீர்ப்பானை, பூந்தொட்டிகள் போன்றவை சிறப்பானவை. மின்குளிர்சாதனப்பெட்டியை (FRIDGE)யொத்த காய்கறி வைக்கப்பயன்படும் சட்டி இங்கு தயாரிக்கப்படுவது



மிகவும் சிறப்பான இயல்பைக் கொண்டதாக உள்ளது. அதாவது இப்பானையில் வைக்கப்படும் காய்கறிகள் அதனுடைய பசுமைநிறம் மாறாமல், குன்றாமல் ஒரு வாரம் வரை அப்படியே இருக்கும். இதனை அனைவரும் விரும்பி வாங்குகின்றனர்.

மான், குதிரை, சிங்கம், வாத்து போன்ற பிராணிகளின் தலை உருவங்கள் பொறிக்கப்பட்ட மட்பாண்டங்களும் இங்கு செய்யப்படுகின்றன. மட்பாண்டக் கூட்டுறவுச் சங்கம், சக்கரம், உபகரணங்கள் போன்ற தொழிற்கருவிகளைத் தொழிலாளர்களுக்கு வாங்கிக் கொடுக்கின்ற 1/8 குதிரை சக்தி கொண்ட சகிலாசக்கரம் (SAHILA WHEEL) எனும் தொழிற்கருவிகளை இருபது பேர்களுக்கு இச்சங்கம் வாங்கிக் கொடுத்துள்ளது. மின்சாரத்தில் இயங்கும் இச்சக்கரத்தின் உதவி கொண்டு வேகமாக உற்பத்தியைப் பெருக்கிட முடிகிறது. கதர் மற்றும் கிராமத்தொழில் வாரியத்தின் மூலம் முப்பது நபர்களுக்குத் தலா 9,500 ரூபாய் வீதம் இத்தொழிலுக்காகக் கடன் வழங்கப்பட்டுள்ளது. மானியம் ரூபாய் 3,500/- ஆகும்.

மேலும் கதர் மற்றும் கிராமத்தொழில் வாரியத்தின் மூலம் ரூபாய் ஒரு லட்சம் இத்தொழில் வளர்ச்சிக்குக் கடன் வழங்கிட சங்கத்தின் வாயிலாகக் கேட்கப்பட்டுள்ளது.

இத்தொழிலில் ஈடுபட்டுள்ள திரு எம். ராமமூர்த்தி வயது 40 என்பவரை நேரில் பார்த்தபோது சுமார் 20 வருடமாக இத்தொழிலைச் செய்து வருவதாகத் தெரிவித்தார். மாதம் ஒன்றுக்குத் தாம் செய்யும் உற்பத்தியைப் பொறுத்து சுமார் ரூ.400/- முதல் 500/-வரை வருமானம் கிடைப்பதாகவும் சொன்னார். பரம்பரை, பரம்பரையாக இத்தொழிலைத் தான் செய்வதாகவும், வேறு தொழில் தெரியாது எனவும் அவர் குறிப்பிட்டார். காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை தொடர்ந்து வேலை செய்கின்றனர்.

20 ஆண்டுகளாக இத்தொழிலில் ஈடுபட்டுள்ள இவருக்கு இரண்டுமுறை கனத்த மழையின் காரணமாக ரூபாய் 2,000/- வரை தாம் உற்பத்தி செய்த மட்பாண்டங்கள் பாதிப்பிற்கு உள்ளாயின எனக்குறிப்பிட்டார். ஆனால் தற்போது மட்பாண்டங்களைப் பாதுகாக்கப் போதிய கொட்டகை போடப்பட்டுள்ளது என்றார். மட்பாண்டத்திற்குத் தேவையான மண், சேகரம் செய்யப்பட்டு, மாட்டு வண்டி மூலம் கொண்டுவரப்படுகின்றது. ஒரு வண்டி மண் ரூ.15/-க்கு விற்கப்படுகின்றது.

இவர்கள் உற்பத்தி செய்யும் தொகையில் ரூபாய் ஒன்றுக்கு 6 பைசா வீதம் சங்கம் பிடித்தம் செய்து, அவற்றைச் சேமித்து அவசரத் தேவைகளின்போது இவர்களுக்குச் சங்கம் வழங்குகிறது.

மேலும் லாபத்தில் 25 சதவிகிதம் போனசாகவும் வழங்கப்படுகிறது.

ந. பாலையா,
உதவிமக்கள் தொடர்பு அலுவலர்
பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்,

TNPSC

விளம்பர எண்: 20/90

# மாவட்ட முன்சீப் மற்றும் குற்றவியல் நீதிபதி

28.4.90 அன்று வெளியிடப்பட்ட தேர்வாணைய விளம்பர எண். 13/90-ல், தமிழ்நாடு நீதிப்பணியில் உள்ள 41 மாவட்ட முன்சீப் மற்றும் குற்றவியல் நீதிபதி பதவிகள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன. தமிழ்நாடு வழக்குரைஞர் கழகத்தின் விருப்பத்திற்கிணங்க நேரடி நியமனம் மற்றும் மாறுதல் மூலம் நியமனங்களுக்கு திருத்திய விதிகள் விதிக்க அரசு பரிசீலிப்பதால் மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்ட அறிவிக்கை திரும்பப் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

டிஐபிஆர்/1376/எம்எஸ்/90/அக்கார்ட்


போன்: கடை : 33213
இல்லம்: 31922

தந்தி: பெரியார்





**தரம் நாடுவோர் தவறாமல் நாடுவது**

# தமிழக

**எண்ணெய்ப்பலகாரம்**

92, திருப்பரங்குன்றம் சாலை,
மதுரை-1.

உரிமையாளர்: பே. தேவசகாயம்.



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

அதி / நவீன / பட்டு / வகைகள்




உங்கள் உலகில் முக்கிய பங்கு பெறுவது வண்ணங்கள்... அவைகளின் அழகு ஜாலங்களை பொலிவும் நேர்த்தியும் மிக்க பட்டு வகைகளில் உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் — உங்கள் இனிய நேரங்களில்!

100% உன்னதமான பட்டு
உத்தரவாதமான சரிகை

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23





பரனூர் தொழுநோயாளர் இல்ல நிகழ்ச்சியில்...
(1.6.'90)





# நாளும் தொடரும் நமது பணிகள் !

முதல்வர் கலைஞர்

# நாளும் தொடரும் நமது பணிகள்!

**முதல்வர் கலைஞர்**

# பதிப்புரை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் 18.1.90 அன்று ஆற்றிய உரை மீது நடைபெற்ற விவாதத்திற்கு, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 24.1.90 அன்று ஆற்றிய பதிலுரையை 'நாளும் தொடரும் நமது பணிகள்' என்னும் தலைப்பில் சிறுநூல் வடிவாக்கி தமிழரசு 16.2.'90 இதழின் இலவச இணைப்பாக வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத் துறை
தமிழ்நாடு அரசு.

# நாளும் தொடரும் நமது பணிகள்!

### முதல்வர் கலைஞர்

ஆளுநர் உரையின் மீது இந்த மாமன்றத்தில் நண்பர் ரமணி அவர்களோடு நாற்பது பேர் தங்களுடைய கருத்துக்களை-உரையின்மீது கொள்கை விளக்கங்களை-இந்த அரசு இந்த உரையைத் தொடர்ந்து எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்கின்ற அறிவுரைகளை வழங்கியிருக்கின்றார்கள்.

உரைக்கு நன்றி தெரிவித்தும், உரையில் தங்களுக்குள்ள மன வேறுபாடுகளை எடுத்துரைத்தும் நடுநிலையாக நின்று இந்த அரசு செயல்பட வேண்டிய விதம் குறித்தும் உரையாற்றிய அனைவருக்கும் நான் இந்த அரசின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலில் ஒரு மகிழ்ச்சிகரமான அறிவிப்போடு என்னுடைய உரையைத் தொடங்கலாமென்று கருதுகின்றேன். நாளை மறுநாள் குடியரசு நாள். நேற்றையதினம், இதுவரையிலே பெருமளவு மறந்து போயிருந்த அல்லது மறக்கின்ற அளவிற்கு செய்யப் பட்டிருந்த நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களுடைய பிறந்தநாளை இந்தியா முழுமையும் கொண்டாடி இந்தியாவின் பிரதமர், தேசிய முன்னணியின் தலைவர் வி.பி. சிங் அவர்கள் நேதாஜி அவர்களைப் பற்றிப் பாராட்டுரை வழங்கி, தொலைக் காட்சியில் - வானொலியில் அவருடைய அருமை பெருமைகளை யெல்லாம் பேசப்பட்ட நாள்.

நாளை மறுநாள் குடியரசு நாள். அதற்கிடையே இந்த அரசு நாட்டு விடுதலைக்காகப் போராடியவர்களை மறந்ததில்லை என்பதற்கு அடையாளமாக, கடந்த காலத்தில் பல காரியங் களைச் செய்திருக்கின்றது. அதைப்போலவே எல்லை மீட்புப் போராட்டம், மொழிக் காவலர்கள் என்ற நிலையில் மொழியைப் பாதுகாக்க, களம் புகுந்தவர்களுடைய தியாகம் இவற்றை யெல்லாம் மனதில் கொண்டு அவர்களுக்கு ஏற்கெனவே 250 ரூபாயாக இருந்த, மாதாந்திர ஓய்வு ஊதியமாக வழங்கப் பட்ட தொகையை, ரூ.350- ஆக மாற்றியது இந்த அவை உறுப்பினர்களுக்கு மிக நன்றாகத் தெரியும்.

நேற்றைய தினம் அவர்களின் சார்பாக காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த சிலரும், எந்த இயக்கத்தையும் சாராத சுதந்திரப் போராட்ட வீரர்களுக்காக அமைப்புக்களை வைத்திருப்பவர்களும் என்னைச் சந்தித்து அவர்களுக்கு இலவசப் பேருந்து அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டார்கள். அதனை அதிகாரிகளோடு கலந்து பேசி இப்பொழுது அறிவிக்க விரும்புகின்றேன்.

தமிழக அரசுப்போக்குவரத்துக் கழகங்களில் சுமார் ஆறாயிரம் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு - மாநில அரசு ஓய்வு ஊதியமாக ரூ.350 பெறுகின்ற அந்தப் போராட்ட வீரர்கள், அதேபோல எல்லைப் போராட்ட வீரர்கள் உள்ளிட்ட சுமார் ஆயிரம் மொழிக்காவலர்கள் - இவர்களுக்குப் போக்குவரத்துக் கழகங்களில் இலவசமாகச் செல்ல ஒவ்வொருவருக்கும் அதிக பட்சமாக ஆண்டு ஒன்றுக்கு ஐயாயிரம் கிலோ மீட்டர் என்ற அடிப்படையில் ரூபாய் ஐநூறு மதிப்புள்ள பேருந்து பாஸ் வழங்க இந்த அரசு முடிவு எடுத்துள்ளதென்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். *(கர ஒலி)*

இந்த ஆளுநர் உரையின் முகப்பில் இன்று மத்தியில் அமைந்துள்ள தேசிய முன்னணி அரசு குறித்தும் அந்த அரசு தேர்தல் நேரத்திலே வழங்கிய வாக்குறுதிகளைப் படிப்படியாக நிறைவேற்றத் தொடங்கியிருப்பது குறித்தும் குறிப்பிடப்பட்டு உள்ளது. அதனையொட்டியும், வெட்டியும் இந்த மாமன்றத்திலே பல உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கின்றார்கள்.

## எட்டு ஆண்டுகளாகக் கேட்பாரற்றுக்கிடந்த அறிக்கை!

குறிப்பாக இன்று காலையிலே பேசிய சட்டப் பேரவையின் முன்னாள் தலைவர் பி.எச். பாண்டியன், நேற்றைய தினம் பேசிய பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டுள்ள மண்டல் கமிஷன் குறித்துத் தங்களுடைய பாராட்டுதலை-மகிழ்ச்சியை-தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மண்டல் கமிஷன் என்பது ஏற்கெனவே ஜனதா ஆட்சிக் காலத்தில் 1978 டிசம்பர் 20-ந் தேதி அறிவிக்கப்பட்ட ஒரு குழு. அது தன்னுடைய பணிகளைத் தொடங்கிய நாள் 21.3.79. அது தன்னுடைய பணியை முடித்து அறிக்கை வழங்கிய தேதி

31.12.80. அது நாடாளுமன்றத்திலே வைக்கப்பட்ட தேதி 20.4.82.'78-இல் அறிவிக்கப்பட்டு, நாடாளுமன்றத்திலே அந்த அறிக்கை 82-இல் வைக்கப்பட்டு, கிட்டத்தட்ட எட்டு ஆண்டுக் காலமாக அது கேட்பாரற்ற நிலையில் ஆனால் இந்தியாவிலுள்ள பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் - குறிப்பாக தமிழகத்திலே உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள், தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் அவர்களுக்காகக் குரல் எழுப்புகின்ற இயக்கங்கள் குறிப்பாக தி.மு.க., திராவிடர் கழகம் போன்ற இயக்கங்கள் எடுத்த முயற்சிகளைப்பற்றியோ, அவர்கள் வடித்தெடுத்த மாநாட்டுத் தீர்மானங்கள் பற்றியோ, முன்பிருந்த அரசு கவனிக்கவுமில்லை. அதிலே ஆர்வம் காட்டவுமில்லை. அது மாத்திரமல்ல.

இங்கே நண்பர் பாண்டியன் குறிப்பிட்டதைப் போல் இந்த அவையிலேயே கடந்த கூட்டத் தொடரில் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை ஆராய்ந்து உடனடியாக நிறைவேற்ற மத்திய அரசு முன்வர வேண்டுமென்று நிறைவேற்றிய தீர்மானம் அன்றைய ராஜீவ் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அது பற்றியும் யாரும் கவலைப்படவில்லை. மண்டல் கமிஷன் அறிக்கையிலே அப்பொழுது தரப்பட்ட புள்ளிவிவரங்கள் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டிய மிக முக்கியமான குறிப்பாகும்.

மண்டல் கமிஷனை அமைத்த குறிக்கோளே இந்தியா முழுமையுமுள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் மத்திய அரசு அலுவலகங்களிலோ அல்லது மத்திய அரசுச் சார்புடைய நிறுவனங்களிலோ ரயில்வே அல்லது வங்கிகள், நெய்வேலி லிக்னைட் போன்ற கார்ப்பரேஷன்கள் இவைகளில் எல்லாம் வேலைவாய்ப்புக்களை பிற்படுத்தப்பட்ட மக்கள் பெற முடியாமல் ஏற்கெனவே முன்னேறிய மக்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு ஒரு நியாயமான விழுக்காடு வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்ற அடிப்படையிலே தான் - அந்த மையக் கருத்தை வைத்துத்தான் மண்டல் குழு அறிக்கை தயாரிக்கப்பட்டது. அப்படித் தயாரிக்கப்பட்டு அது வெளியிடப்பட்டபோது அதிலே தரப்பட்ட சில விவரங்களை இங்கே நான் படித்துக் காட்டுவது உறுப்பினர்களுக்குப் பயன் உள்ளதாக இருக்கும் என்று கருதுகின்றேன்.

Class I பெரிய அதிகாரிகள், மத்திய அரசு அல்லது நிறுவனங்கள் இவைகளிலே பணியாற்றுகின்ற பெரிய அதிகாரிகள் என்ற பட்டியலை எடுத்துக் கொண்டால் மொத்தப் பணியாளர்கள்

1,74,043 பேர். இந்த 1,74,043 பேரில் தாழ்த்தப்பட்ட மக்களும், மலைவாழ் மக்களும் 9,891 பேர். பிற்படுத்தப் பட்டவர்கள் 8,169 பேர். மீதமுள்ள 1,55,983 பேர் முன்னேறிய வகுப்புக்களைச் சார்ந்தவர்கள். இது Class I.

அடுத்தது Class II அதிகாரிகள். அதிலே மொத்தமுள்ள பணியாளர்கள் 9,12,925. இதிலே தாழ்த்தப்பட்டவர்கள் 1,65,982. அதாவது முதல் வகுப்பு வேலைவாய்ப்புக்களில் மிகக் குறைவாகவும் அடுத்து Class II என்ற அந்த வாய்ப்புக்களில் ஓரளவு அதிகமாகவும் ஆனால் நியாயமான அளவிற்கு அல்ல, ஓரளவு அதிகமாகவும் 9,12,925 மொத்தப் பணியாளர்களில் தாழ்த்தப்பட்டவர்கள் 1,65,982 பேராக, பிற்படுத்தப்பட்ட வர்கள் 97,000 பேராக, முன்னேறிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் 6,49,943 உள்ள இந்த நிலையையும் மண்டல் கமிஷன் அறிக்கை வெளிப்படுத்தியது.

Class III, IV ஆகிய இந்தப் பிரிவுகளைச் சேர்ந்த அலுவலாளர் களின் மொத்த எண்ணிக்கை 4,84,646. அதிலே தாழ்த்தப் பட்டவர்கள் 1,18,282 பேர். பிற்படுத்தப்பட்டவர்கள் 90,575 பேர். மீதமுள்ளவர்கள் முன்னேறிய சமுதாயப் பிரிவைச் சேர்ந்தவர்கள்.

## வாக்குறுதிகளை நிறைவேற்ற மும்முரமான முயற்சி!

இந்த ஏற்றத்தாழ்வு ஒழிக்கப்பட்டு, வகுப்புவாரியாக அவர் களுக்குள்ள உரிமை வழங்கப்பட வேண்டுமென்ற அடிப்படை யிலே பரிந்துரைத்த இந்தக் குறிப்புக்கள் எதுவும் ராஜீவ் காந்தி காலத்திலே நடைபெற்ற அரசால் ஏற்றுக் கொள்ளப்படாமல் அல்லது அதை ஆய்ந்து முடிவெடுக்க முன்வராமல் புறக்கணிக்கப் பட்டு விட்டபோது, தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கையில் மண்டல் கமிஷன் பரிந்துரைகள் நிறைவேற்றப்படும் என்று எடுத்துச் சொன்னதற்கு இணங்கவும், அதைப் போலவே தமிழகத் திலே வெளியிடப்பட்ட தி.மு. கழக தேர்தல் அறிக்கையிலே மண்டல் கமிஷன் பரிந்துரைகள் நிறைவேற்றப்பட வேண்டும், அதற்காக நாம் குரல் எழுப்ப வேண்டுமென்று எடுத்துச் சொன்ன அடிப்படையிலும், தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கையில் திட்டவட்டமாகத் தெரிவித்த வகையிலும் இன்றைய தினம் அதற்கான முயற்சிகள் மும்முரமாக மத்திய அரசிலே நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

அப்படி நடைபெறுகின்ற அந்த முயற்சிகள் 'ஏதோ ஒரு காரியம் நடைபெறக்கூடாதென்றால் அதன் தலையிலே ஒரு கல்லைப் போடு; இல்லா விட்டால் கமிட்டியைப் போடு' என்று ஒரு காலத்திலே 'கல்கி' சொன்னதைப்போல ஆகிவிடாமல் அந்தக் காரியம் உடனடியாக நிறைவேறுவதற்கு உரிய முயற்சி களை மத்தியிலே உள்ள அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை இங்கே நான் மீண்டும் ஒருமுறை வலியுறுத்திக்கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இதைப்போலவேதான், இந்த மண்டல் கமிஷன் பரிந் துரையை நிறைவேற்றுவதற்கு எப்படி தேர்தல் அறிக்கை யினுடைய அடிப்படையிலே தேசிய முன்னணி அரசு முன் வந்திருக்கிறதோ, அதைப் போலவே 'எலக்ஷன் மானிபெஸ்டோ' - தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடப்பட்ட 'இண்டர்-ஸ்டேட் கவுன்சில்', அதையும் உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் என்கின்ற ஆர்வத்தோடு மத்தியிலே உள்ள தேசிய முன்னணி அரசு பணிகளைத் தொடங்கி இருக்கிறது. அதுகுறித்து நேற்றையதினம் நம்முடைய நண்பர் பூவராகன் அவர்கள் இங்கே விளக்கமாகப் பேசி இருக்கின்றார்கள். முதல்நாள் இந்த விவாதம் தொடங்கிய நேரத்திலே காங்கிரஸ் கட்சியின் சார்பில் உரையாற்றிய உறுப்பினர்கள், 'இண்டர்- ஸ்டேட் கவுன்சிலை' விமர்சித்து, அதை ஏதோ ஒரு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைப் போலவும், இப்போது, 'இண்டர்-ஸ்டேட் கவுன்சிலை' ஏற்றுக் கொள் கிறீர்களா என்பதைப் போலவும் சில வினாக்களை எழுப் பினார்கள்.

## மாநில சுயாட்சி:
## இந்திரா காந்தியின் விவேகமான பதில்!

இதே மாமன்றத்தில் '74-ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதல் முறையாக மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றப் பட்டதை நீங்கள் அனைவரும் தெளிவாக அறிவீர்கள். மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்குக் காரணமாக, அடிப்படையாக அமைந்த அறிக்கை, 'இராஜமன்னார் குழு அறிக்கையாக' இருந்தது என்பதும் அந்தத் தீர்மானம் நிறை வேறியபோது எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

இராஜமன்னார் குழுவின் அறிக்கை எல்லா மாநில முதல் அமைச்சர்களுக்கும் அப்போது அனுப்பப்பட்டது. அன்றைய

தினம் பிரதமராக இருந்த அன்னை இந்திரா காந்தி அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் அன்றைய பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவர்கள் மாநில சுயாட்சி என்பது பயங்கரமான ஒன்று என்று கூறாமல் இது முதல் அமைச்சர்கள் மட்டத்திலே விவாதிக்கப்பட வேண்டிய ஒன்று என்று இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் விவேகத்தோடு ஒரு பதிலை அன்றைய தினம் தமிழக அரசுக்கு அனுப்பி வைத்தார்கள்.

அதற்குத் தொடர் நடவடிக்கை இல்லையே தவிர மாநில சுயாட்சி என்கிற வார்த்தை பயங்கரமானதென்றோ அல்லது நாட்டைப் பிரிக்கக்கூடியதென்றோ அல்லது தேச விரோதமானதென்றோ அன்றைய பிரதமர் இந்திராகாந்தி சொல்லவில்லை.

ஆனால் மாநில சுயாட்சி என்றாலே தேச விரோதமானது என்ற ஒரு கருத்தை நாடாளுமன்றத் தேர்தல் நேரத்திலும் அதற்கு முன்பு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் நேரத்திலும் இந்தியாவின் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி அவர்கள் எல்லா இடங்களிலும் பேசினார்கள். 'இது தேசத்தைப் பிரிக்கக்கூடியது. நாட்டைக் காட்டிக் கொடுக்கக்கூடியது. வெளிநாட்டுக்காரனுக்கு நாட்டை துரோகம் செய்து காட்டிக் கொடுக்கக்கூடியது' என்றெல்லாம் மிகக் கடுமையான— பயங்கரமான வார்த்தைகளைப் பயன்படுத்தி மாநில சுயாட்சி என்கின்ற அந்தத் தத்துவத்தையே உடைப்பதற்கு ராஜீவ் காந்தி, அன்றைக்கு முயற்சித்தார்கள்.

## இண்டர் - ஸ்டேட் கவுன்சில்: '74-இல் நிறைவேறிய தீர்மானம்!

இண்டர்-ஸ்டேட் கவுன்சில், திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்த ஒன்று என்பதற்கு அன்றைய தினம் இங்கே பேசிய உறுப்பினர் பாலசுப்பிரமணியம் அவர்கள் எடுத்து வைத்த வாதம், நாம் '74-ஆம் ஆண்டு நிறைவேற்றிய தீர்மானத்தின் முழுப் பகுதியையும் எடுத்து வைத்துக் கொள்ளாமல், அதிலே இரண்டு வரிகளை மாத்திரம் பிரித்து எடுத்துக் கொண்டது தன்னுடைய வாதத்திற்கு வலுச் சேர்த்துக் கொண்ட முயற்சி ஆகும்.

'74-ஆம் ஆண்டுத் தீர்மானத்தில், அந்த வரிகள் அரசியல் அமைப்பின் 263-ஆவது பிரிவில் சொல்லப்பட்டுள்ள மாநிலக் குழு, அனைத்து மாநிலக் குழு பயனற்றது, அதனால் எவ்விதப்

பயனும் கிட்டாது என்று நாம் அதிலே சொல்லியிருந்தாலும்கூட, முன்னும் பின்னும் என்ன சொல்லியிருக்கிறோம் என்பதுதான் முக்கியம். 'முதலில் எல்லா முதலமைச்சர்களையும் அல்லது அவர்களுடைய நியமனதாரர்களையும் கொண்ட அனைத்து மாநிலங்கள் குழு அமைக்கப்பட வேண்டும், எல்லா மாநிலங்களுக்கும் சம பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும், இந்தியாவினுடைய தலைமை அமைச்சர் அதன் தலைவராக இருக்க வேண்டும், மைய அமைச்சர்கள் அந்தக் குழுவில் உறுப்பினராக இருக்கத் தேவையில்லை, பாதுகாப்பு, அயல்நாட்டு உறவுகள், மாநிலங்களுக்கிடையே போக்குவரத்து, நாணயச் செலாவணி ஆகியவை குறித்து எடுக்கப்பட வேண்டிய எந்தவொரு நடவடிக்கையும், மைய - மாநில அரசுகளுடைய உறவைப் பாதுகாக்கின்ற வகையில், அதைப் பொறுத்து, அனைத்து மாநிலக்குழு கலந்து ஆலோசிக்கப்பட வேண்டும். அதைப்போல மைய அரசு மேற்கொள்ளும் பொருளாதாரம், நிதி, பணம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் விவாதிக்கும் வாய்ப்பையும் அந்த மாநிலக் குழு, இண்டர்-ஸ்டேட் கவுன்சில் கொண்டிருக்க வேண்டும். அரசியல் அமைப்பின் 263-வது பிரிவில் சொல்லப்பட்டுள்ள அனைத்து மாநிலக்குழு பயனற்றது. அதனால் எந்தப் பயனும் கிட்டாது, எனவே அனைத்து மாநிலக் குழுவினுடைய பரிந்துரைகள் மைய அரசையும் மாநில அரசுகளையும் கட்டுப்படுத்துவதாக இருக்க வேண்டும். பரிந்துரை எதுவும், ஏதேனும் காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டால், அந்தப் பரிந்துரை நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்கள் நாடாளுமன்றத்தின் முன்பும், மாநில சட்டமன்றங்கள் முன்பும் வைக்கப்பட வேண்டுமென்பது, இண்டர்-ஸ்டேட் கவுன்சில் எப்படி மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்ற நிலையிலே, '74-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கொணர்ந்து இங்கே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினுடைய வாசகங்களாகும்.

## மாநிலங்களின் யோசனைகளைக் கோரி பிரதமர் வி.பி. சிங் கடிதம்!

இப்போதும்கூட நம்முடைய பிரதமர் வி.பி. சிங் அவர்கள் அப்படியே 263-ஆவது பிரிவில் சொல்லப்பட்ட அனைத்தையும் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர்கள்கூடச் சொல்லவில்லை. அவர்கள் கூட, என்னென்ன திருத்தங்கள் செய்யலாம் என்று மாநில முதலமைச்சர்களுக்கு எல்லாம் கடிதம் எழுதி இருக்கிறார்கள். அந்தக் கடிதத்தில், 'இண்டர்-ஸ்டேட் கவுன்சில் கொண்டுவர மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது.

அதிலே என்னென்ன திருத்தங்கள் செய்யலாம் என்பதை நீங்கள் எழுதி அனுப்புவீர்களேயானால் அவைகளையெல்லாம் நாங்கள் சீர்தூக்கிப் பார்த்து உடனடியாக முதலமைச்சர்களையெல்லாம் அழைத்து ஒரு மாநாடு கூட்டி அதிலே உங்களுடைய கருத்தைக் கேட்டு, அதிலே திருத்தங்களோடு, அந்த 263வது பிரிவை நடைமுறைப்படுத்த ஏதுவாக இருக்கும்' என்று அவர்கள் எழுதி இருக்கின்றார்கள்.

நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். 25.3.89-இல் இந்த மாமன்றத்தில் நிதிநிலை அறிக்கையை வைத்தபோது நான் ஒன்றைக் குறிப்பிட்டேன். 'பிப்ரவரித் திங்களில் புதுடில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் மத்திய - மாநில உறவுகளைப் பற்றி விரிவாக எடுத்துரைத்துள்ளேன். அவ்வமயம், சட்டம், நிர்வாகம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் மத்திய மாநில அரசின் உறவுகள் குறித்து ஒன்றுக்கொன்று தொடர்பான முறையில் தொகுத்து விவாதிக்க முன்வருவது அவசரமும் அவசியமுமானதாகும் என்று விளக்கியுள்ளேன். இதன் தொடர் பாக அரசியல் சட்டத்தின் 263-வது பிரிவின் கீழ் 'அனைத்து மாநிலங்களின் குழு''வை (இண்டர்-ஸ்டேட் கவுன்சில்) உடனடி யாக ஏற்படுத்த வேண்டுமென்றும், அத்தகைய குழுவின் அமைப்பு, செயல்முறைகள் பற்றிப் பிரதமர் அவர்கள் (அப் போது ராஜீவ் காந்தி பிரதமர்) மாநில முதலமைச்சர்களுடன் வெகுவிரைவில் கலந்தாலோசிக்க வேண்டுமென்றும் வற்புறுத்தி யுள்ளேன்' என்று கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நான் குறிப்பிட்டேன். அப்போது அது கவனிக்கப்படவில்லை. இப்போது கவனிக்கப்பட்டிருக்கிறது. இதிலே இன்னொரு விஷயம் என்னவென்றால், மத்திய மாநில உறவுகளைப் பற்றி அறிய, மத்திய அரசு ஏற்கெனவே அமைத்த சர்க்காரியா கமி ஷனுக்கு எல்லாக் கட்சிகளின் சார்பிலும் கருத்துக்கள் அனுப்பப் பட்டன. அப்படி அனுப்பப்பட்டபோது அன்றைக்கு இருந்த அ.தி.மு.க அரசின் சார்பிலும் கருத்துக்கள் அனுப்பப்பட்டன.

## அ.தி.மு.க. அரசில் முன்னுக்குப் பின் முரணான காரணங்கள்!

அந்தக் கருத்துக்கள் எப்படி அமைந்தன என்றால்,'இண்டர்-ஸ்டேட் கவுன்சில் தேவையே இல்லை. 263-வது பிரிவையே எடுத்துவிடலாம்' என்று அ.தி.மு.க. ஆட்சியினால் கருத்துக்கள் அனுப்பப்பட்டன. 1985-ஆம் ஆண்டு அந்தக் கருத்துக்கு ஒரு காரணம் சொன்னார்கள். அந்தக் குழு, மத்திய-மாநில அரசுகள்

சொல்வதைக் கேட்டு நடக்க வேண்டுமென்ற அளவிலே இல்லாத காரணத்தால் இந்த 263-வது பிரிவையே எடுத்துவிடலாம் என்று எழுதினார்கள். பிறகு மீண்டும் காரணம் கேட்டு சர்க்காரியா கமிஷன் அ.தி.மு.க. அரசை வினவியபோது, 1985-ஆம் ஆண்டு ஒரு கருத்தை எழுதினார்கள். அதுதான் வேடிக்கை. '35 ஆண்டுகளாக இந்த 263-வது பிரிவின் கீழ் இண்டர்-ஸ்டேட் கவுன்சில் அமையவில்லை. ஆகவே இனியும் அமையத் தேவையில்லை' என்று முன்பிருந்த அ.தி.மு.க. அரசு ஒரு அருமையான கருத்தை எழுதி, 'அப்படியே அந்தப் பிரிவை அரசியல் சட்டத்திலிருந்து எடுத்துவிடலாம்' என்று எழுதி னார்கள்; இதில் வேடிக்கை என்னவென்றால், அ.தி.மு.க. அரசு இப்படி எழுதியது, இண்டர்-ஸ்டேட் கவுன்சில் உள்ள பிரிவையே எடுத்து விடலாம் என்று. ஆனால் அண்மையில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. வெளியிட்ட அவர்களது தேர்தல் அறிக்கையில், 'மத்திய மாநில அரசுகளின் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண, இண்டர்-ஸ்டேட் கவுன் சிலை அமைத்திடப் பாடுபடுவோம்' என்று தெரிவித்தார்கள். இது தேர்தல் அறிக்கை. 1985-ஆம் ஆண்டு இண்டர்-ஸ்டேட் கவுன்சில் தேவையில்லை என்று எழுதி, 263-வது பிரிவையே எடுத்துவிடலாம் என்று எழுதினார்கள். ஆகவே அந்தப் பதிலைப் படித் தார்களோ படிக்கவில்லையோ, ஆனால் இப்படி இவர்களுடைய தேர்தல் அறிக்கையில் இண்டர்-ஸ்டேட் கவுன்சில் தேவையில்லை என்று எழுதி, 263-வது பிரிவையே எடுத்து விடலாம் என்று எழுதினார்கள். ஆகவே அந்தப் பதிலை படித்தார்களோ படிக்கவில்லையோ, ஆனால் இப்படி இவர் களுடைய தேர்தல் அறிக்கையில் இண்டர்-ஸ்டேட் கவுன்சிலை அமைக்கப் பாடுபடுவோம் என்று அ.தி.மு.க கட்சியின் சார்பில் அறிக்கை வெளியிடப்பட்டது. இவ்வளவு முரண்பாடுகளுக்கு இடையில் இண்டர்-ஸ்டேட் கவுன்சிலைப் பற்றி அந்தக் கட்சி தன்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்கிற அதே நேரத்தில், நாம் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் இண்டர்-ஸ்டேட் கவுன்சில் தேவை, அதற்காக 263-வது பிரிவில் சில திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்று முடிவெடுத்து, அந்த முடிவு எவ்வாறு அமைய வேண்டுமென்பதற்கு முதல் அமைச்சர்களைக் கூட்டி, பிரதமர் வி.பி. சிங் அவர்கள் கலந்தாலோசிக்கக் கூடிய ஒரு நல்ல நிலையை இந்த இண்டர்-ஸ்டேட் கவுன்சில் மட்டத்தில் உருவாக்கியிருப்பதற்கு நான் இந்த மாமன்றத்தில் அவருக்கும், மத்திய அரசுக்கும் நன்றி கூற, பெரிதும் கடமைப்பட்டு இருக்கிறேன். *(கர ஒலி)*

## நல்வாழ்வுப் பணிகளின் திட்டச் செலவு குறையாது!

இங்கே பேசிய நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்களில் சிலர் - குறிப்பாக நண்பர் அப்துல் லத்தீப் அவர்களும், நேற்றைய தினம் பேசிய பொன். விஜயராகவன் அவர்களும் 'பைனான்சியல் டிசிப்ளின்' கெட்டுவிடாமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று அறிவுரைகள் சொன்னார்கள். அதிலும் குறிப்பாக இலவச அரிசி, சத்துணவு, இலவச முட்டை வழங்குதல் போன்ற காரியங்களால் 'பைனான்ஷியல் டிசிப்ளின்' சீர்குலைந்துவிடும் என்கின்ற அச்சத்தைத் தெரிவித்தார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். இந்தச் செயல்பாடுகளால் நிச்சயமாக நிதியாதாரக் கட்டுப்பாடு குலைந்து விடாது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் மூலதனச் செலவையோ அல்லது திட்டச் செலவையோ, நலிந்தோருக்காகச் செய்யப்படுகிற இந்த நல்ல உதவிகள் பாதித்துவிடவில்லை. அதற்கு உதாரணம் சொல்ல வேண்டுமென்றால் நல்வாழ்வுத் திட்டங்களை நாம் செய்தாலும்கூட 1,360 கோடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்ட திட்டச் செலவு எந்த அளவிலும் குறையாது என்ற நம்பிக்கை யோடு நாம் இருக்கிறோம்.

இன்னும் இரண்டு, மூன்று மாதங்கள் இருக்கின்றன இந்தத் திட்ட ஆண்டு நிறைவுற. அதிலே நாம் ஏற்கெனவே அறிவித்த வாறு 1,360 கோடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்ட திட்டச் செலவு முழுமை பெறும் என்ற நம்பிக்கையோடு நாம் செயல் பட்டுக் கொண்டிருக்கிறோம். அதைப்போல, மூலதனச் செலவும் எந்த வகையிலும் குறையப் போவது இல்லை என்ற உறுதியையும் நான் இந்த அளவுக்குத்தரத் தயாராக இருக்கிறேன். ஆனால் கடந்த ஆண்டு, அதாவது 1989-ஆம் ஆண்டில், ஆளுநர் ஆட்சியிலே அறிவிக்கப்பட்ட திட்டச் செலவு 1,457 கோடி ரூபாய். திருத்திய மதிப்பீட்டில் அது 1,202 கோடி ரூபாயாகக் குறைந்ததையும் நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நாங்கள் இந்த 1,360 கோடி ரூபாயை நிச்சயமாக இந்தத் திட்டத்திற்குப் பயன்படுத்துவோம் என்று உறுதிபூண்டிருப்பதை எண்ணும் போது ஏற்கனவே பைனான்ஷியல் டிசிப்ளின் குலைந்துபோய் இருந்தாலும், அந்த டிசிப்ளின் குறையாமல் காப்பாற்றுகிற பொறுப்பை இந்த அரசு ஏற்று, உங்கள் நம்பிக்கைக்கு உரியதாக நடக்கும் என்பதையும் நான் இங்கே திட்டவட்டமாகத் தெரி வித்துக் கொள்கிறேன்.

நல்வாழ்வுத் திட்டங்களுக்காக ஒரு அரசு செலவிடுவது இன்றைய சூழ்நிலையில் தவிர்க்க முடியாததொன்றாகும். நண்பர் திரு. பாண்டியன் அவர்கள் கூடச் சொன்னார்கள் - 'ஓட்டு களுக்காக நாம் செய்கின்ற காரியம் இது' என்று. நான் அவருக்கும் சொல்கிறேன், மற்றும் இங்கே பேசிய பல நண்பர்களுக்கும், 'இந்த இலவச உணவு, இல்வச உடை, இலவச முட்டை இவைகள் எல்லாம் தேவைதானா?' என்று கேட்ட மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட ஒரு மக்கள் கூட்டம் இன்றைக்குத் தமிழ்நாட்டில் இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. அவர்கள் வாக்களிப்பார்களா? அல்லது வாக்களிக்க மாட்டார்களா என்பதல்ல. நான் நன்றாக இதை ஆராய்ந்து பார்த்திருக்கிறேன். நண்பர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்தில் ஏறத்தாழ 60 இலட்சம் பிள்ளைகளுக்குச் சத்துணவு போடப்பட்ட போது அப்போது நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலோ அல்லது அதற்குப் பிறகு நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தலிலோ அந்தக் கட்சி வெற்றி பெற்றுவிடவில்லை. எனவே வாக்குகளுக்காக இந்தத் திட்டங்கள் என்றோ அல்லது திட்டங்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துவதால் வாக்குகள் விழுந்துவிடும் என்றோ கடந்த காலத்திலே திரு. எம்.ஜி.ஆர். ஆட்சியிலே நாம் அதை ஆராய்ந்து பார்த்தால், 'அல்ல' என்ற விடை நமக்கு நிச்சயமாகக் கிடைக்கும். எனவே வாக்குகளுக்காக அல்ல!

வாழ்க்கையில் எந்தவிதமான பிடியும் இல்லாமல், சுதந்திர இந்தியாவில் இன்னமும் நடைபாதையில் வாழ்கிற மக்கள், ஊனமுற்ற நிலைமையில் எந்த உதவியும் கிடைக்காமல் நலிந்து கொண்டிருக்கிற மக்கள், தங்களுடைய நோயைப் போக்க முடியாமல் துடித்துக்கொண்டிருக்கிற மக்கள், பசிப் பிணியால் பரிதவித்துக்கொண்டிருக்கிற மக்கள், குடிசையில் குமுறிக் கொண்டிருக்கிற மக்கள் ஆகிய இவர்களுக்கெல்லாம் ஒரு அரசு, 'நாங்கள் நீண்ட காலத் திட்டங்களைத் தந்து நிறைவேற்றுவோம், அதுவரையில் பொறுத்திரு' என்று சொன்னால் அது 'அரசன் வருவான், கழுத்திலே உனக்கு மாலை சூட்டுவான்' என்று ஒரு ஏழையைப் பார்த்து 'அதுவரையில் நீ எதிர்பார்த்துக் கொண்டிரு' என்று சொல்லி ஏங்க வைத்து, எதிர்பார்த்தது நடக்காமல் வாழ்விழந்து போவதுபோல் அது முடிந்துவிடும். எனவேதான் இன்றைக்கே நம்மால் முடிந்த காரியங்களை, நல்உதவிகளை அவர்களுக்குச் செய்ய வேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது.

## கட்சிச் சார்பற்ற முறையிலே
## சிகிச்சைக்கு உதவி!

அதற்காக நீண்ட காலத் திட்டங்களை இந்த அரசு புறக் கணித்து விடவில்லை. புறக்கணிக்கப்போவதும் இல்லை. அது வரையிலே பொறுத்திருக்க இயலாதவர்கள். துடித்துக்கொண்டு இருப்பவர்கள், அவர்களை ஓரளவுக்காவது கை தூக்கிவிட வேண்டும் என்று எடுக்கின்ற முயற்சிகள்தான் இவைகளே தவிர வேறு அல்ல. உங்களுக்கு ஒரு விவரத்தைச் சொல்ல வேண்டுமே யானால், 10.1.1990 இந்த நாள் வரையில் இந்த ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்டு, இந்தக் கால கட்டத்தில், இருதய நோய், அதனால் பாதிக்கப்பட்டு அறுவைச் சிகிச்சைக்குச் சென்ற வர்கள், சிறுநீரகக் கோளாறால் சிகிச்சைக்குச் சென்றவர்கள், மற்றும் வேறு பல நோய்களுக்கு ஆளாகியவர்கள் இவர்களுக் கெல்லாம் உதவி அளிக்கும்படி, இந்த மாமன்றத்திலே உள்ள பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த நண்பர்கள், கட்சிச் சார்பற்ற முறையில், அவர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்க லாம் அல்லது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்க லாம், யார் ஆதாரங்களோடு அரசுக்கு முறையீடு செய்தாலும் அவைகள் எல்லாம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இந்த ஓராண்டுக் காலத்திற்குள்ளாக இருதய நோய் சிகிச்சைக்காக மாத்திரம் 88 பேர்களுக்கு இந்த அரசு உதவித் தொகை வழங்கியிருக்கிறது. அது போலவே, சிறுநீரக சிகிச்சைக்காக 23 பேர்களுக்கு உதவித் தொகை வழங்கியிருக்கிறது. வேறு பல நோய்களுக்காக 9 பேர்களுக்கு, மொத்தம் 120 பேர்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

## 10,100 பேருக்கு
## திருமண உதவித் தொகை!

திருமண உதவித் திட்டம், மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் பெயரால் அமைந்துள்ள திருமண உதவித் திட்டம். அதில் இதுவரையில் 10,100 பேர்களுக்கு இந்த ஓராண்டுக் காலத்தில், முழுமையாக ஓராண்டு முடியாத இந்தக் கால கட்டத்தில் 10,100 பேர்கள் பயன் அடைந்திருக்கிறார்கள் என்றால் அவர்கள் படிக்க வேண்டுமென்ற ஊக்கத்தையும் பெறுகிறார்கள். அதே நேரத்தில் ஏழ்மை நிலைமையில் இருக்கின்ற காரணத்தினால், அவர்களுக்கு வாழ்வே இல்லை என்ற அவநம்பிக்கையிலிருந்து அவர்கள் விடுபட்டு, ஒரு புதிய

ஒளியை அவர்கள் பெற முடிகிறது. இந்த ஓராண்டுக் காலத்திலே 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட பெண்களுக்கு வாழ்வு வழங்கப்பட்டு இருக்கிறது. அதுபோலவே கருவுற்ற மகளிருக்கு, கிட்டத்தட்ட 66 ஆயிரம் பெண்களுக்கு, அவர்கள் கருவுற்றிருக்கிற நேரத்தில் அவர்களுடைய ஆரோக்கியத்திற்கும், குழந்தை பிறந்த பிறகும் கூட அதற்கான செலவினங்களுக்காக 200 ரூபாய் தருவதாக அறிவித்து, அது அறிவிக்கப்பட்டு நின்று விடாமல், அப்படியும் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 5 அல்லது 6 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தச் செலவால் நம்முடைய நிதி ஆதாரக் கட்டுப்பாடு குலைந்துவிடும் என்று நாம் அஞ்சத் தேவையில்லை. நீண்டகாலத் திட்டங்களை நாம் நிறைவேற்றுகிற அதே நேரத்திலேயே, இந்தத் திட்டங்களையும் நிறைவேற்ற, தவிர்க்க முடியாத சூழ்நிலை இந்த அரசுக்கு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இங்கே பேசிய நண்பர்கள் சிலர் விவசாயிகளுடைய பிரச்சனை பற்றி ஆளுநர் அவர்களுடைய உரையிலே எதுவும் குறிப்பிடவில்லை என்று வருத்தப்பட்டார்கள். விவசாயிகளுடைய வேதனைகளைத் தீர்க்க இன்னும் பல முயற்சிகளை இந்த அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கோடிட்டுக் காட்டினார்கள். ஏற்கெனவே நம் வரவுசெலவுத் திட்டத்திலே அறிவித்ததற்கு இணங்க, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், மாற்றியமைக்கப்பட்ட குறுகிய காலக் கடன்களும், தவணை தவறிய கடன் தொகைகள் அனைத்தும் அறவே ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. குறுகிய, மத்திய காலக் கடன்கள் மீதுள்ள அபராத வட்டியும் அறவே தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கிறது. நீண்ட காலக் கடன்கள் மீதுள்ள ஒத்தி வைக்கப் பட்டுள்ள வட்டியும் அறவே தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. இதனால் 39 கோடி ரூபாய் செலவை அரசு ஏற்றுக் கொண்டு இருக்கிறது. இது அன்னியில் கடந்த ஆண்டில் அரசு, விவசாயிகளுக்கு வட்டிச் சலுகை அளிப்பதாக அறிவித்ததனால் அந்தச் சலுகையையும் அறிவித்ததோடு அதற்கு ஈடுசெய்ய, கூட்டுறவுச் சங்கங்களுக்கு அந்தத் தொகையை வழங்காத காரணத்தினால் நிலுவைத் தொகையாக நின்றுவிட்ட 6 கோடி ரூபாயை இந்த அரசுதான் இப்போது ஏற்றுக் கொண்டிருக்கிறது.

இதற்குகூட நான் அடிக்கடி இந்த மாமன்றத்திலே எடுத்துக் காட்டியது போலவும், நம்முடைய உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர், முன்னால் அந்தப் பொறுப்பேற்றிருந்த வீராசாமி அவர்கள், இதைப்பற்றி மிக விவரமாக எடுத்துக் கூறியது போலவும், நபார்ட் நிறுவனத்தினுடைய பலமான எதிர்ப்பு

இதற்கு இன்னமும் இருந்து கொண்டிருக்கிறது. இதைப்பற்றி யெல்லாம் அவர்களோடு இங்கேயிருந்து அங்கே சென்று கலந்து பேசி இந்த 106 கோடி ரூபாயை நாங்கள் விவசாயிகளுக்காக உதவியாகச் செலவழிப்பதற்கு நீங்கள் குறுக்கே நிற்காதீர்கள் என்று கேட்டுக்கொண்டு இந்த 106 கோடி ரூபாய் அவர் களுடைய பளுவாக ஆகாமல் இருப்பதற்கு நாங்கள் வழி முறைகள் காண மிகுந்த சிரமங்களை ஏற்றுக்கொண்டு இருக் கிறோம்.

## அரசியலிலே ஒரு நல்ல சீதோஷ்ண நிலை!

ஒரு நம்பிக்கை இப்போது ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய ரமணி நல்ல சீதோஷ்ண நிலை இன்றைக்கு ஏற்பட்டிருப்பதாகச் சொன்னார், அது அரசியலிலே ஏற்பட்டிருக்கிற காரணத்தால். இதைக்குறித்து மத்திய அரசோடு இந்த அரசின் சார்பில் பேச இருக்கிறோம். முன்பு இருந்த ராஜீவ் அரசு விவசாயிகளுடைய கடன் தொல்லை, வேறு வித வாழ்க்கைச் சிக்கல், அவர்களுடைய தொழிலில் உள்ள முன்னேற்றக் குறைவு போன்றவைகளைப் பற்றி எல்லாம் ஆராய ஒரு குழுவை அமைத்தது. அந்தக் குழு 1988 அக்டோபர் திங்களில் ஒரு நல்ல அறிக்கையைக் கூட ராஜீவ் அரசு இருந்த காலத்திலே வழங்கியது. அதிலே விவசாயி களுடைய கடன் பளுவைக் குறைப்பது பற்றிய வழிமுறைகளை எல்லாம் கூட அதிலே சொல்லியிருந்தது. அதுமாத்திரமல்ல, கடன் பளுவைக் குறைக்க மத்திய அரசும், மாநில அரசுகளும் நிதிவசதிகளை எந்தவகையிலே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது பற்றி விரிவான சிபாரிசுகளும் அந்த அறிக்கையிலே இடம் பெற்றிருந்தன. ஆனால் அந்த அறிக்கை மீது ராஜீவ் காந்தியினுடைய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது ஆச்சரியத்திற்கு உரிய ஒன்றல்ல. வழக்கம்போல அந்த அறிக்கை யும் கிடப்பிலே போடப்பட்டது. ஆனால் இப்போது தேசிய முன்னணி அரசு விவசாயிகளுடைய பிரச்சினைகளை விரிவாக ஆராய்ந்து, ஓர் அரிய முடிவை எடுக்கக்கூடிய கட்டத்திற்கு வந்திருக்கிற காரணத்தாலே அதை நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அந்த முடிவுகள் வெளியான பிறகு வரவு-செலவுத் திட்டத்தில் விவசாயிகளுக்கு மேலும் என்ன நன்மைகளை வழங்க முடியும் என்பவைகளைச் சிந்தித்து அவை அறிவிக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் நான் இன்றைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கெனவே நெல் கொள்முதல் விலையை குவிண்டாலுக்கு 25 ரூபாய் நாம் அதிகப்படுத்திக் கொடுக்கிறோம். கொடுக்க வேண்டும் என்பது கட்டாயம் அல்ல. மத்திய அரசு அறிவித் தாலும் கூட, கொடுக்காமல் இருக்கலாம். 1980-ஆம் ஆண்டுக் குப் பிறகு இந்தக் கொள்முதல் விலை 25 ரூபாய் அதிகப் பட்சமாக உயர்த்தப்பட்டிருப்பது இப்போதுதான். இதனால் ஆகின்ற செலவு அரசுக்கு 27.5 கோடி ரூபாயாகும். இவ்வாறு 25 ரூபாய் அதிகம் கொடுப்பதன் காரணமாக நாம் தொடர்ந்து கொடுத்து வருகிற 35 ரூபாய் ஊக்கத் தொகையைக் குறைத்து விடவில்லை. இதிலே அந்தப் பணத்தைக் கழித்துக் கொள்ளவும் இல்லை.

## ஊக்கத் தொகையை முதன்முதலாக வழங்கியது தமிழக அரசுதான்!

இந்த ஊக்கத் தொகை கொடுக்கின்ற வரலாறே எப்படி ஆரம்பமானது என்றால், முன்பு இந்த ஆட்சி நடைபெற்றபோது விவசாயிகளுடைய இந்தக் கொள்முதல் விலை உயர்த்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை அரசின் முன்னால் வைக்கப்பட்ட நேரத்தில், அவர்களின் சார்பாக நான் டெல்லிக்குச் சென்று அன்றைய வேளாண்துறை அமைச்சராக இருந்த பாபு ஜெகஜீவன்ராம் அவர்களிடத்திலே வாதாடினேன். அவர்களே என்னென்ன வழியோ சிந்தித்துப் பார்த்து இந்தக் கொள்முதல் விலையை அதிகப்படுத்தித் தர இயலாது என்பதற்கான காரணங்களைச் சொல்லி, கடைசியாக அவர் எனக்கு வழி சொல்லிக் கொடுத்தார். 'ஊக்கத்தொகை என்கின்ற பெயரால், போக்குவரத்துச் செலவுகள் என்கின்ற பெயரால் நீயாக ஒரு தொகையைக் கொடுக்கலாம்' என்று சொன்னதன் பேரில் 15 ரூபாய் என்று அப்போது இந்த அரசு முதன்முதலாக இந்தியா விலேயே தமிழகத்தில்தான் தமிழகத்தில் விவசாயிகளுக்கு அந்த 15 ரூபாய் ஊக்கத்தொகையாகத் தரப்பட்டது தனியாக. அது வளர்ந்து 35 ரூபாயாக இன்றைக்கு ஆகியிருக்கிறது. இதனால் அரசுக்கு ஆகக்கூடிய செலவு 381.5 கோடி ரூபாய் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோல, கரும்பு விலையைப் பொறுத்த வரையில் 8.5% ரெக்கவரி உள்ள கரும்புகளுக்கு 230 ரூபாயிலிருந்து டன் ஒன்றுக்கு 250 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். பம்ப் செட்டுக்கு 5 ஹார்ஸ் பவர் வாங்குபவர்களுக்கு இருந்த விற்பனை வரியை அறவே ரத்து செய்திருக்கிறோம். இதனால்

4 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு. மின் கட்டணத்தை ஒரு ஹார்ஸ் பவருக்கு 75 ரூபாயிலிருந்து 50 ரூபாய்க்குக் குறைத்து, 10 கோடி ரூபாய் இழப்பை இந்த அரசு இன்றைக்கு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இவற்றோடு விவசாயிகளுக்குச் செய்ய வேண்டிய சலுகைகள் அல்லது அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய சலுகைகள் அல்லது அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பலன்கள் முற்றுப் பெற்றுவிட்டன என்று சொல்ல மாட்டேன். என்றைக்கும் விவசாயிகளுடைய பிரச்சினை நடந்து கொண்டிருப்பவை என்பதை நான் மிக நன்றாக அறிவேன். எனவே, இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்த்து நிதிநிலை அறிக்கையிலே இன்னும் விரிவாக அவர்களுக்குச் செய்ய வேண்டிய உதவிகள் பற்றிச் சொல்லப்படும் என்பதையும் இந்த மன்றத்திலே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

## திசை திருப்பும் முயற்சி

அடுத்து, காவிரிப் பிரச்சினை குறித்து நம்முடைய திரு. தீட்சிதர் அவர்கள்கூட இன்று காலையிலே விளக்கமாகப் பேசினார்கள். அதைப்பற்றிச் சில ஆதாரபூர்வமான உண்மை களை இந்த மாமன்றத்திலே வைக்க விரும்புகிறேன். வழக்குகளை அதாவது காவிரிப் பிரச்சினையிலே தமிழ்நாட்டினுடைய உரிமையை மையப்படுத்தி நாம் தொடர்ந்திருந்த வழக்குகளை எந்தக் கட்சியையும் கேட்டுக் கொள்ளாமல் தமிழ்நாடு முதல் அமைச்சர் தானாக முன்வந்து அன்றைக்குத் திரும்பப் பெற்று விட்டார் என்கின்ற ஒரு குற்றச்சாட்டு. இங்கே அவையிலே பேசப்பட்ட - எடுத்து வைக்கப்பட்ட உண்மையான ஆதாரங் களை மறுத்து, ஏதோ வெளியிலே பத்திரிகைகளிலே புழுதி வாரித் தூற்றிவிட்டால் - அதை வெளியிடுவதற்கும் சில பத்திரிகைகள் இருக்கின்ற காரணத்தால், அவர்களே அந்தப் பத்திரிகைக்காரர்களே, இதை ஆராயாமல் இது எப்படி உண்மை யான ஆதாரம், எது போலியான ஆதாரம் என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் சில பத்திரிகைக்காரர்கள் அதைப் பெரிய அளவிலே வெளியிடுவதற்குத் தயாராக இருக்கிற காரணத்தால் அப்படி வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில் 7.5.'82-லே இந்த வழக்குகளை வாபஸ் பெற்றுவிட்டோம், எதிர்க்கட்சித் தலைவர் களைக் கலந்து ஆலோசிக்காமலே வாபஸ் பெற்று விட்டோம் என்றும், இன்னொரு குற்றச்சாட்டாக ஹேமாவதி, கபினி, ஹாரங்கி நதிகளில் கட்டப்படும் அணைகளைத் தடுத்து நிறுத்து வதற்கு, முன்பு இருந்த கழக அரசு முன்வரவில்லை என்கின்ற மற்றொரு குற்றச்சாட்டையும் சொல்லி, தமிழ்நாட்டில் இருக்கின்ற

விவசாயப் பெருங்குடி மக்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு மீது ஒரு தவறான எண்ணம் ஏற்படுத்தப் பெருத்த முயற்சி செய்யப்படுகிறது. அதைத்தான் அவர்கள் இங்கே பேசும் போது குறிப்பிட்டார்கள்.

ஒரு 20 சதவீத மக்கள், இன்னமும் இவைகளை எல்லாம் நம்பிக்கொண்டு இருக்கிற மக்கள், அவர்களைத் திருத்தி அவர் களுடைய விழிகளைத் திறக்க நாம் என்ன செய்யப் போகிறோம் என்று கேட்டார்கள். இந்த அரசு மாத்திரமல்ல, அரசுக்கு, அரசை நடத்துகின்ற ஆளும் கட்சிக்குத் தோழமைக் கட்சிகளாக இருக்கிற நாங்களும் உங்களோடு ஒத்துழைக்கத் தயாராக இருக் கிறோம் என்று சொன்னார்கள். இதுபோன்ற புனை சுருட்டு களால் உண்மைக்கு மாறான கருத்துக்களால், செய்திகளால் நாட்டு மக்களுடைய எண்ணத்தைத் திசை திருப்புகின்றவர்களை அடையாளம் காட்டுகின்ற முயற்சியிலே நாம் அனைவரும் தொடர்ந்து ஈடுபட்டு ஆக வேண்டும். இல்லாவிட்டால் எவ்வளவு பெரிய - உண்மைக்குச் சற்றும் பொருந்தாத ஒரு செய்தி சொல்லப்பட்டு இருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்து வைக்கின்ற ஆதாரங்கள் மூலமாக நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

21.5.1972 அன்றையதினம் இந்திராகாந்தி அம்மையார் சென்னை வந்தார்கள். அவர்களிடத்தில் நான் காவிரிப் பிரச்சினை குறித்து விரிவாகப் பேசினேன். அதைப் பற்றி பெங்களூரிலிருந்து வெளியாகின்ற 'டெக்கான் ஹெரால்டு' என்ற பத்திரிகையிலே பின்வருமாறு செய்தி வந்தது:

> **"Prime Minister Indira Gandhi said today that inter-state disputes at river waters should be thrashed out by the Chief Ministers concerned. It is much easier that way. If there is anything I can do, I will certainly help. She told the pressmen after Tamil Nadu Chief Minister Karunanidhi had met her."**

இந்தச் செய்தி 'டெக்கான் ஹெரால்டு' பத்திரிகையிலே அன்றைக்கு வந்து இருக்கிறது. அப்படிச் சந்தித்துப் பேசிய பொழுதுதான் அவர்கள் என் இடத்திலே சொன்னார்கள். வழக்கு இருக்கும்போது பேசுவது என்பது சற்றுச் சிரமமான காரியம். இரு தரப்பிலும் எரிச்சல் ஊட்டக்கூடிய நிலைமையிலே பேச்சுவார்த்தை அமைய வேண்டாம்.

எனவே அந்த வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொள்கின்ற முயற்சியிலே ஈடுபடுவது நல்லது என்று என்னிடத்திலே சொன்னார். மீண்டும் முதல் அமைச்சர்களை அழைத்து வைத்துப் பேச, அது வசதியாக இருக்கும் என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் குறிப்பிட்டதையொட்டி 29.5.'72-இல் மூன்று மாநில முதல்வர்கள் - தமிழகம், கேரளம், கர்நாடகம் ஆகிய 3 மாநில முதலமைச்சர்களுடைய கூட்டத்தை அன்றைக்கு இருந்த மத்திய அமைச்சர், நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கே.எல். ராவ் அவர்கள் கூட்டி இருப்பதாக அழைப்பு விடுத்தார்கள். 29-ஆம் தேதி டில்லியிலே கூட்டம் என்றதும் 27.5.'72 அன்று சென்னை தலைமைச் செயலகத்திலே உள்ள கேபினட் அறையில் அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டம் கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்தில் யார் யார் கலந்து கொண்டார்கள் என்பதையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

ஆர். பொன்னப்ப நாடார், திருப்பூர் மொய்தீன், ஆறுமுகசாமி, ஏ.ஆர். மாரிமுத்து, எஸ்.எஸ். ராமசாமி படையாச்சி, ஏ.ஆர். பெருமாள், ஆர். சக்தி மோகன், கே.டி.கே. தங்கமணி, கே. ராஜாராம், ஏ.ஆர். தாமோதரன், டாக்டர் ஹெச்.வி. ஹண்டே, டி.கே. சண்முகம், கே.எஸ். அப்துல்வகாப், சிலம்புச் செல்வர் ம.பொ.சி. - இவர்கள் அந்தக் கூட்டத்திலும் கலந்து கொண்டார்கள். அதற்கு அடுத்து நான் டில்லிக்குச் சென்று திரும்பியபிறகு 4.6.'72-இல் நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் அவர்கள் எல்லாம் கலந்து கொண்டார்கள்.

அப்போது அந்தக் கூட்டத்தில் பிரதமர் அவர்கள், பேச்சு வார்த்தை மூலமே பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாம் என்றும், அதற்குமுன்னர் வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொள்வது நல்லது என்றும் தெரிவித்த கருத்து விளக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதுதான் அந்தக் கூட்டத்தினுடைய 'மினிட்ஸ்'. அவர்களுடைய கருத்தை ஆராய்ந்த பிறகு 7.7.1972 அன்று ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இருந்த வழக்கு எண்.1/71-ஐத் திரும்பப் பெற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது, அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்குப்பிறகு.

அந்த அடிப்படையிலே 28.8.1972 அன்று, உச்ச நீதி மன்றத்திலே மனு விண்ணப்பிக்கப்பட்டு, தமிழக அரசு தொடர்ந்த வழக்கைத் திரும்பப் பெற அனுமதி வழங்கப்பட்டதோடு, தேவைப்பட்டால் மீண்டும் புது வழக்குத் தொடர உரிமை

உண்டு என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. எனவே, 7.5.1972-லே வழக்குகள் வாபஸ் பெற்றதாக வெளியிலே சொல்லப்படுகிற கருத்தும் தவறு. அனைத்துக் கட்சித் தலைவர் களை அழைத்துப் பேசாமல் இந்தக் காரியம் நடைபெற்றது என்று சொல்வதும் தவறு. இதோடு ஸ்டே வாங்கவில்லை யென்று சொல்லப்படுகின்ற கருத்தும் மிகமிகத் தவறு.

4.8.1971-இல் காவிரி பிரச்சினைக்கு நடுவர் மன்றம் அமைக்குமாறு மத்திய அரசுக்கு ஆணை பிறப்பிக்க உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்த பொழுது, அந்த வழக்கிலே தீர்ப்பளிக்கும் வரையிலும் மேலும் நடுவர் மன்றம் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரையிலும் கர்நாடகத்திலே கட்டப்பட்டு வரும் ஹேமாவதி, கபினி அணை, ஹாரங்கி அணை, ஸ்வர்ணாவதி அணை மற்றும் காவிரியில் மற்ற கிளை நதிகளில் கட்டப்பட்டு வருகிற அணைகளின் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு செயல்படுத்தாவண்ணம் தடை செய்யக் கோரி ஆணை பிறப்பிக்குமாறு ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதனை உச்ச நீதிமன்றம் 25.10.1971 அன்று பரிசீலித்து அந்தக் கோரிக்கையை நிராகரித்து விட்டது. எனவே, நாம் ஸ்டே கேட்டதும் உண்மை. அந்த ஸ்டே தர முடியாது என்று உச்சநீதி மன்றம் மறுத்துவிட்டதும் உண்மை. அந்த உச்ச நீதிமன்றத்திலே அன்றைக்கு நீதிபதிகளாக இருந்து அந்த வழக்கை விசாரித் தவர்கள் Justice J.M. Sholat, Justice I.D. Dua, Justice S.C. Roy, Justice H.R. Khanna, Justice G.K. Mitter—

—இவர்கள்தான் அந்த வழக்கை விசாரித்தவர்கள். கடைசியாக,

Upon perusing the papers and upon hearing, the Court dismissed the Application

என்ற வகையிலே அன்றைக்கு நாம் கேட்ட ஸ்டே நிராகரிக் கப்பட்டு விட்டது. அவற்றையெல்லாம் மறைத்துவிட்டு ஏதோ 7 ஆண்டுக்காலம் இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தான் காவிரி பிரச்சினை பேசப்படவில்லையென்று கூறுகின்ற வர்கள் 10 ஆண்டுக்காலமாக என்ன செய்து கொண்டிருந் தார்கள் என்பதுதான் எனக்குப் புரியவில்லை.

வழக்கைத் திரும்பப் பெறும்பொழுதே இதே பிரச்சினைக்காக மீண்டும் வழக்கைத் தொடரலாம் என்கின்ற அந்த நிபந்தனையோடு

வழக்குத் திரும்பப் பெறப்பட்டிருக்கின்றது. ஆனால் 10 ஆண்டுக்காலத்தில் எந்த முயற்சியும் செய்யப்படவில்லையா அல்லது செய்து கடந்த காலத்திலே நடைபெற்ற அதே பேச்சு வார்த்தைகள் தொடர்ச்சிதான் விளைவாக இருந்ததா என்பதை யெல்லாம் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். நான் இதை ஒரு அரசியல் பிரச்சினையாக்க அன்றும் சரி, இன்றும் சரி, என்றைக்கும் விரும்பவில்லை. ஆனால், இன்றைக்குக்கூட பத்திரி கையிலே பார்த்தேன். கர்நாடக சட்டசபையில் நாம் கேட்ட தண்ணீரை அளிக்க இயலாது என்று திட்டவட்டமாகப் பதில் சொல்லியிருக்கிறார்கள்; 30 டி.எம்.சி. கேட்டதாகச் சொல்லி யிருக்கிறார்கள், 30 டி.எம்.சி. கேட்டு, அவர்கள் தரத் தயங்கிய பிறகு, அந்த 30 டி.எம்.சி. வேண்டுமென்று வலியுறுத்தி, முதல் அமைச்சர் திரு. வீரேந்திரபாட்டீலோடு இரண்டுமுறை தொலை பேசியிலே தொடர்பு கொண்டு பேசினேன். அவர் 'தருகிறேன்' என்று சொன்னார்.

பிறகு, பொதுப்பணி அமைச்சரை அனுப்பி வைத்தேன். பொதுப்பணி அமைச்சர், அந்த மாநிலத்திலே முதல் அமைச்சர் இருப்பார், அவர் மாலையிலே பெங்களூர் வருவார் என்ற அந்த நம்பிக்கையோடு அங்கே சென்றார். ஆனால், அந்த மாநில முதல் அமைச்சர் பெங்களூருக்குத் திரும்பாமல் டில்லிக்குப் போய்விட்டார். டில்லியிலும் விடவில்லை. அங்கே இருக்கிற மத்திய அமைச்சர் திரு. மாறனிடம் சொல்லி, திரு. வீரேந்திர பாட்டீலோடு தொடர்பு கொள்ளச் சொன்னேன். அவரும் தொடர்பு கொண்டு பேசினார். அங்கிருந்து திரு. வீரேந்திர பாட்டீல், 'உங்கள் பொதுப்பணி அமைச்சரை மீண்டும் பெங்களூருக்கு அனுப்பி வையுங்கள், பேசுகிறேன்' என்று சொன்னார்.

பொதுப்பணி அமைச்சர் பெங்களூர் சென்று அங்குள்ள நீர்ப்பாசன அமைச்சரோடு பேசினார். அதிகாரிகளோடு பேசினார். அன்று மாலையிலே முதல் அமைச்சர் திரு. வீரேந்திர பாட்டீலோடு பேசினார். 'எங்களால் இயன்றதைச் செய் கிறோம், உங்கள் முதலமைச்சரிடம் சொல்லுங்கள், நம்பிக்கை யோடு இருக்குமாறு' என்று சொல்லி அனுப்பினார்கள்.

அதற்குப்பிறகு, இங்குள்ள கஷ்டத்தை அவர்களுக்குப் புரிய வைத்து, '15 டி.எம்.சி.யாவது வழங்குங்கள்' என்று நாம் கேட்டுக் கடிதம் எழுதினோம். '15 டி.எம்.சி. வழங்குவதைப்பற்றி யோசிக்கிறோம்' என்று அங்கிருந்த பொதுப்பணி அமைச்சர் — கர்நாடகத்துப் பொதுப்பணித்துறை அமைச்சர் பேசியதாகச் செய்தி வந்தது.

நேற்றையதினம் சட்டசபையிலே சொல்லியிருக்கிறார்கள், 30 டி.எம்.சி. தர இயலாது என்று. பேசித்தீர்க்கலாம் என்று சொல்கிறார்களே, நாம் இன்றைக்கு வறண்டு போயிருக்கிற அல்லது இன்னும் சில நாளில் வறண்டு விடக்கூடிய அல்லது வாடி உலர்ந்துவிடக்கூடிய பயிர்களைக் காட்டி, தஞ்சை, திருச்சி போன்ற காவிரி நதி தீரத்திலே வாழ்கின்ற தமிழக விவசாயி களுடைய வயிற்றிலே அடிக்காதீர்கள் என்று இறைஞ்சிக் கேட்கின்ற இந்த நேரத்திலே கூட, ஒரு நல்லெண்ண சமிக்ஞை யாக 10 டி.எம்.சி.யோ, 15 டி.எம்.சி.யோ வழங்குவதற்குத் தயாராக இல்லாதவர்களிடத்தில் பேசி என்ன பயன் விளையும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

கடந்த காலத்திலே ஜனதா தள ஆட்சியினுடைய தலைவர், முதலமைச்சர் பொம்மை அவர்கள் இங்கே வந்தபோது, ஒரு பொதுக்கூட்டத்திலே தான் இந்த அமைச்சரவைக்கு நடைபெற்ற வாழ்த்துக் கூட்டத்தில் காவேரியிலிருந்து 5 டி.எம்.சி. தண்ணீரை அவசரமாகத் தர வேண்டுமென்று கேட்டபோது, அவர் அந்தக் கூட்டத்திலேயே அறிவித்தார். அடுத்த ஒன்றிரண்டு வாரங்களில் அந்த 5 டி.எம்.சி. தண்ணீரை ஜனதா தளக் கட்சியினுடைய முதலமைச்சர் நண்பர் பொம்மை அவர்கள் உடனடியாகத் தமிழ்நாட்டிற்கு வழங்கினார்கள்.

வேடிக்கை என்னவென்றால், அதற்கு முன்பு கவர்னர் ஆட்சியிலும் 5 டி.எம்.சி. தண்ணீர் தரப்பட்டிருக்கிறது, ஏற்கெனவே நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது அங்கிருந்து தண்ணீர் தரும் போதெல்லாம் அதற்கு மாற்றாக இங்கிருந்து மின்சாரம் தரப் பட்டிருக்கிறது. அப்படித் தரப்பட்ட மின்சாரத்திற்கு ஒரு பரிந்துரை அல்லது ஒரு பரிமாற்றமாக ஆகிவிடக்கூடாது என் பதற்காக அதற்கு ஓரளவு கட்டணமும் கேட்கப்பட்டிருக்கிறது. இது எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது நடைபெற்றது. இந்தக் கணக்கை எல்லாம் இப்போது வீரேந்திர பாட்டீல் அவர்கள் நமக்கு எழுதி, 'அந்தப் பழைய பாக்கி எல்லாம் இருக்கிறது; அதை எல்லாம் கொடுங்கள்' என்று கேட்டிருக்கிறார்கள்.

அதிலே வேடிக்கை என்னவென்றால், இப்படி ஒரு பரி வர்த்தனை இல்லாமலே திரு. பொம்மை அவர்கள் 5 டி.எம்.சி. தண்ணீர் கொடுத்தாரே அதற்கும், அவர்கள் கேட்காத பரி வர்த்தனையை அதிலே நுழைத்து, அதற்கும் நீங்கள் மின்சாரம் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்த நிபந்தனையைப் போட்டு பொம்மை அவர்கள் தண்ணீர் தரவில்லை.

ஆனாலும் இவர்கள் நிபந்தனையை வலுவிலே புகுத்தி, அதையும் நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கேட்டிருக் கிறார்கள். நாம் கேட்ட தண்ணீரைப் பற்றி எந்தவிதமான பதிலும் கிடையாது. திரு. வீரேந்திரபாட்டீலைப் பொறுத்தவரை நானும் அவரை மிக நன்றாக உணர்ந்தவன். அவருக்கும் என்னை மிக நன்றாகத் தெரியும். இருவரும் நெருங்கிய நண்பர்கள். ஆனால் என்ன காரணத்தாலோ, எப்படி தமிழ்நாட்டிற்கு அரிசி வழங்கக்கூடாது என்று மத்திய அரசு அன்றைக்கு முடிவு எடுத்ததோ, அன்றைக்கு தமிழக மக்களுடைய வயிற்றிலே அடித்ததோ, அதைப்போல தி.மு.க. ஆட்சி இருக்கின்ற காரணத்தால் தஞ்சை, திருச்சி, தென்னார்க்காடு மாவட்டங் களிலே இருக்கின்ற விவசாயிகளுடைய வயிற்றிலும் அடிக்கலாம் என்று அவர்களுக்கு யாராவது, அரிசி வழங்காதவர்கள் இப்போது இந்த அறிவுரையை வழங்கியிருப்பார்களோ என்று நான் எண்ணிட வேண்டிய கட்டாயத்திலே இருக்கிறேன்.

ஒரு மனிதாபிமானம்கூட இல்லாமல், மனித நேய உணர்வு கூட இல்லாமல் தஞ்சையிலே வாடுகின்ற, திருச்சியிலே வாடு கின்ற, தென்னார்க்காடு மாவட்டத்திலே வாடுகின்ற விவசாயி களுக்கு நாம் பலமுறை கேட்டும்கூட - இன்னும்கூட சொல் கிறேன் - மூன்று நாட்களாக நான் தொலைபேசியிலே அவர் களோடு தொடர்பு கொள்ள முயலுகிறேன். ஆனால் தவிர்த்துக் கொண்டே இருக்கிறார்கள். அவர்களால் பேச இயலவில்லை. இவ்வளவு நெருங்கிய நண்பர் பேச முடியவில்லை என்றால் எவ்வளவு பெரிய அரசியல் தாக்கம் இதிலே விளையாடுகிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்துக் கொள்ளலாம்.

## எதையும் பேசக்கூடியவர்கள் இதையும் பேசுவார்கள்!

சில பேர் கேட்கிறார்கள், முதலமைச்சர் ஏன் அங்கே போகக் கூடாது என்று. அங்கே போனால் சட்டசபையை விட்டு விட்டு எங்கே போனார் என்று கேட்பார்கள். எதையும் பேசக்கூடிய அரசியல்வாதிகள் இதையும் பேசுவார்கள். எனவேதான் நான் இந்த அரசின் சார்பாக, இந்த அவையின் சார்பாக தஞ்சை மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும், தென்னார்க்காடு மாவட்டத்திலும், காவேரி தீரத்திலும் வாடிக் கொண்டிருக்கின்ற, காய்ந்து கொண்டிருக்கிற அந்த நிலங்களை, பயிர்களைக் காப் பாற்ற மீண்டும் ஒரு முறை என்னுடைய நெருங்கிய நண்பர், கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் வீரேந்திரபாட்டீல் அவர்களே,

உங்களால் இயன்றதைச் செய்யுங்கள், 10 டி.எம்.சி.யோ, 15 டி.எம்.சி.யோ தண்ணீரை உடனடியாகத் திறந்துவிட ஏற்பாடு செய்யுங்கள் என்று மிகுந்த பணிவன்போடு இந்த அவையின் சார்பாக வீரேந்திர பாட்டீல் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நகராட்சிகளுடைய நிலைமையைப் பற்றி நண்பர் சொக்கர் அவர்கள் இங்கே விரிவாகப் பேசினார்கள். அவருக்கு விரிவாக நான் பதில் சொல்ல விரும்பினேன். ஆனால் அவர் இங்கே இல்லை. அவர் இங்கே இல்லா விட்டாலும் கூட நான் என்னுடைய கடமையைச் செய்ய வேண்டும். சில பேர் தங்களுடைய கடமையைச் செய்ய மறந்தாலும்கூட, கடமைகளை கடமைகள் என்று உணர மறுத்தாலும் கூட, நான் என்னுடைய கடமையைச் செய்ய வேண்டும் என்பதற்காகச் சொல்ல விரும்புகிறேன்.

## நிதி ஆதாரங்களைப் பெருக்க அரசு செய்த வழி வகைகள்

நகராட்சிகளுடைய நிதியாதாரங்கள் கவலைப்படத்தக்க அளவில் இருப்பதை இந்த அரசு உணராமல் இல்லை. அவைகளை எல்லாம் உணர்ந்திருக்கிற காரணத்தால், நகராட்சித் தலைவர்களை எல்லாம் அழைத்து வைத்துப் பேசியும், அதிகாரிகள் மட்டத்திலே கலந்து பேசியும், நிதி ஆதாரங்களை நகராட்சிகள் மேலும் பெருக்கிக் கொள்ள என்னென்ன வழி வகைகளைச் செய்யலாம் என்பதைக் குறித்து வரவு செலவு திட்டத்திலே ஒரு நல்ல அறிவிப்பை இந்த அரசு வெளியிட இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக உங்களுக்கு நினைவுபடுத்த வேண்டுமானால் நம்முடைய சென்னை மாநகராட்சியை எடுத்துக் கொண்டால் - பம்பாய் மாநகராட்சி மன்றத்தின் பட்ஜெட் ஆண்டுக்கு 1,000 கோடி ரூபாய். ஆனால் சென்னை மாநகராட்சி மன்றத்தின் பட்ஜெட் வெறும் 68 கோடி ரூபாய். ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு பட்ஜெட்டைக் கொண்ட பம்பாய் மாநகராட்சி மன்றத்தையும், 68 கோடி ரூபாய் அளவுக்கு இயங்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்ற நம்முடைய சென்னை மாநகராட்சி மன்றத்தின் நிலைமைகளையும் எண்ணிப் பார்த்தால், ஏதாவது ஒரு முயற்சி எடுத்து இந்த வருமானத்தை - இந்த பட்ஜெட்டினுடைய தொகையை விரிவாக்க வேண்டும் - பெருக்க வேண்டும் என்ற அந்த நிலையை இந்த அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

முன்பிருந்த அ.தி.மு.க. அரசு 1.6.1986-இல் நகராட்சி ஆசிரியர்கள், நகராட்சிகளிலே பணியாற்றும் இதர அலுவலாளர்கள் ஆகியவர்களையெல்லாம் அரசு அலுவலாளர்களாக ஆக்கி ஆணையிட்டது. ஆனால் அந்த ஆணை நடைமுறைப்படுத்தப்படவில்லை. 1986-இல் போடப்பட்ட அந்த ஆணை நடைமுறைக்கே வரவில்லை. ஆணையினுடைய விவரம் என்னவென்றால் நகராட்சி ஆசிரியர்கள் - அதாவது நகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அல்லாத இதர அலுவலாளர்களை, ஊழியர்களை அரசு அலுவலர்களாக ஆக்கி அரசு ஆணை பிறப்பித்தது. ஆனால் அந்த ஆணை நடைமுறைக்கே வரவில்லை. இப்போது இந்த அரசு அதைச் செயல்படுத்த முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (கரவொலி) அதாவது, நகராட்சி ஆசிரியர்கள், நகராட்சிப் பள்ளிகளிலே பணியாற்றும் அலுவலர்கள் ஆகியோருடைய முழுச்செலவையும் 1.4.1990 முதல், அரசாங்கமே நேரடியாக மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதனால், நகராட்சிகளுக்கு ரூ.10 கோடிக்கு மேல் மீதமாகும் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

## அரசின் பரிசீலனையில் கடந்த ஆட்சிக்கால இன்ஷுரன்ஸ் திட்டம்

முக்கியமாக ஒன்றைச் சொன்னார்கள். பலரும் பேசினார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் ஒரு இன்ஷுரன்ஸ் திட்டம் இருந்தது. 10 ரூபாய் தொழிலாளர்களிடத்திலே - ஏழைகளிடத்திலே வாங்கப்பட்டது. அதே ரூபாய் அவர்களுக்குத் திருப்பித் தரப்படாமலேயே அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டது. சில பேருக்கு ரூ.6.50 தான் திருப்பியனுப்பப்படுகிறது - இது நியாயமா என்றெல்லாம் திரு. பீட்டர் அல்போன்ஸ் தொடங்கி மற்றும் இங்கே உள்ள திரு. பொன். விஜயராகவன் போன்றவர்களும், மற்றவர்களும் கேட்டார்கள்.

இந்தத் திட்டம் 1984-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட திட்டமாகும். இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, இதிலே 16 இலட்சம் பேர் சேர்ந்தார்கள். சேர்ந்தார்கள் என்பதைவிட, சேர்க்கப்பட்டார்கள் என்பதுதான் சரியான தகவல். ஒரு 3 அல்லது 4 இலட்சம் பேர்தான் அவர்களாகவே முன்வந்து சேர்ந்தார்கள். இதிலே அதிகப்படியான பேர்களைச் சேர்க்க வேண்டுமென்று அன்றைக்கு கிராமங்களிலேயிருந்த அதிகாரிகள்-

வி.ஏ.ஓ. போன்றவர்களெல்லாம் உத்தரவிடப்பட்டு ''நீங்கள் இவ்வளவு பேரைச் சேர்த்தாக வேண்டுமென்று'' உத்திரவிடப் பட்டு, அவர்களும் அதன் காரணமாகப் பலபேரைச் சேர்க்க முயன்று, அதிலே தோல்வியடைந்து, அவர்களே சில பெயர் களை எழுதி, அவர்களுக்குக்கான ரூ.10-ஐயும் அவர்களே கட்டினார்கள்.

அதன்படி 16 இலட்சம் பேர் சேர்ந்தார்கள். சேர்க்கும் போதே என்ன நிபந்தனை என்றால் இந்த 10 ரூபாயில் 3.50 ரூபாய் 'லைப் இன்ஷூரன்சுக்குச்' சென்றுவிடும். மீதமுள்ள 6.50 ரூபாய்தான் உங்களுடைய கணக்கில் வைப்பு நிதியாக வைக்கப்படும் என்று 6.50 ரூபாய் அளவுக்கு மட்டுமே அவர் களுடைய வைப்பு நிதிக் கணக்கில் வைக்கப்பட்டது. அப்படி வைக்கப்பட்ட நிலையில் 6 ஆண்டுக்கு, வசூலாகிற ரூ.120-இல் 45 ரூபாய் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு வழங்கப்பட்டது. மீதமுள்ள 75 ரூபாய்தான் அவர்களின் வைப்பு நிதியில் வைக்கப்பட்டு, வட்டியோடு அவர்கள் ஓய்வு பெறும்போது அவர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதிலே 4 இலட்சம் பேரைத் தவிர 12 இலட்சம் பேர் 2, 3 மாதங்களுக்குப் பிறகு பணத்தை ஒழுங்காகக் கட்டவில்லை. 4 இலட்சம் பேரிலும் பெரும்பாலோர் கட்டவில்லை.

இவைகளையெல்லாம் ஆராய்ந்து இந்தப் பணத்தை ஓர ளவுக்கு உரிய முறையில் அவர்களுக்குத் திருப்பித் தருவதற்காக இன்றைக்கு அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ.தி.மு.க. உறுப்பினர் அர்ஜூனன் பேசும்போது ஒரு தகவலை - எல்லோரும் அதிர்ச்சியடையக்கூடிய ஒரு தகவலைச் சொன்னார். 'ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் எல்லாம் இன்றைக்கு இந்த அரசில் கம்பல்சரியாக வெயிட்டிங்கில் வைக்கப்பட்டுப் பழி வாங்கப்படுகின்றார்கள்' என்று சொன்னார். அதற்கான ஆதாரம் கேட்ட போது, ஆதாரங்கள் எதையும் அவர் தரவில்லை. எப்படி அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் மீது ஒரு அபாண்டமான குற்றச்சாட்டைச் சொல்லி, அவர் அதை மறுத்த பிறகு எந்த ஆதாரமும் இல்லாமல் கைபிசைந்து நின்றாரோ, அதைப்போலவே இந்த 'கம்பல்சரி வெயிட்டிங்' பற்றி ஒரு தகவலைச் சொன்னார் - தவறான தகவலைச் சொன்னார்.

## யாரையும் பழிவாங்குகிற அரசு அல்ல!

இந்த அரசைப் பொறுத்தவரையில் யாரையும் பழி வாங்கு கின்ற அரசு அல்ல. கழக அரசிலே கூட ஒரு சிலர் கம்பல்சரியில் வெயிட்டிங்காக இருக்க நேரிட்டிருக்கின்றது. ஆனால் அது ஒரு சில நாட்களுக்கு - ஐந்து, பத்து நாட்களுக்குத்தான். ஆனால் பழி வாங்கப்படுவதற்காக அல்ல. ஆனால் அ.தி.மு.க. ஆட்சியிலே ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் - அந்தப் பட்டியலிலே முப்பது நாட் களுக்கு மேல் யார் யார் கம்பல்சரி வெயிட்டிங்கில் வைக்கப் பட்டிருந்தார்களோ அவர்களுடைய பெயர்களை மட்டும் படிக் கின்றேன். 30 நாட்களுக்குள் வெயிட்டிங் லிஸ்ட்டிலே இருந்த வர்கள் தனியாக ஐம்பது ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருக்கும். முப்பது நாட்களுக்கு மேலாக கம்பல்சரி வெயிட்டிங்கிலே இருந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் என்று எடுத்துக் கொண்டால்,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | எம்.எ.கே. தயாப் | ஐ.ஏ.எஸ். | 1986 | 87 | நாட்கள் |
| 2. | ஏ.எஸ். பத்மநாபன் | ... | 1983 | 30 | ... |
| 3. | எஸ்.ஏ. சுப்ரமணி | ... | 1986 | 30 | ... |
| 4. | வி. செல்வராஜ் | ... | 1987 | 33 | ... |
| 5. | அஷோக் ஜோஷி | ... | 1987 | 50 | நாட்கள் |
| 6. | எஸ். அரவிந்த் | ... | 1986 | 42 | ... |
| 7. | ஏ. நாகராஜன் | ... | 1983 | 53 | ... |
| | | | 1986 | 30 | ... |
| 8. | எம். ராமு | ... | 1982 | 88 | ... |
| | | | 1985 | 72 | ... |
| 9. | கே.ஏ. மாத்யூ | ... | 1987 | 53 | ... |
| 10. | எஸ். ஸ்ரீனிவாசன் | ... | 1982 | 35 | ... |
| 11. | சித்ரா ஜெயபாலன் | ... | 1983 | 45 | ... |
| 12. | கிருஷ்ணசாமி ராஜீவன் | ... | 1984 | 39 | ... |
| 13. | எம். மாணிக்கவேலு | ... | 1985 | 63 | ... |
| 14. | எம். கனகசபாபதி | ... | 1986 | 78 | ... |
| 15. | டி.ஆர். சீனிவாசன் | ... | 1982 | 36 | ... |
| 16. | லங்க்தாசா | ... | 1982 | 56 | ... |
| 17. | ரெங்கமணி | ... | 1982 | 120 | ... |
| 18. | ஆர். நாகராஜன் | ... | 1981 | 41 | ... |

இவர்களை அன்னியில் 53 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் 30 நாட்களுக்கும் குறைவாக கம்பல்சரி வெயிட்டிங்கிலே இருந் திருக்கின்றார்கள்.

காவல்துறையிலே ஐ.பி.எஸ். அதிகாரிகள் என்று எடுத்துக் கொண்டால், அவர்கள் அதிகம் பேர் இருக்கின்ற காரணத்தால் ஐம்பது நாட்களுக்கு மேல் கம்பல்சரி வெயிட்டிங்கிலே அ.தி.மு.க. ஆட்சியிலே - கடந்த கால ஆட்சியிலே இருந்தவர் களின் பெயர்களை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | கே.ஜி. தினமணி | ஐ.பி.எஸ் | 1981 | 64 | நாட்கள் |
| 2. | ஆர். ராஜகோபாலன் | ... | 1981 | 57 | ... |
| 3. | நாஞ்சில் குமரன் | ... | 1982 | 58 | ... |
| 4. | வி.கே. ராஜ கோபால் | ... | 1982 | 62 | ... |
| 5. | ஆர்.கே. ராகவன் | ... | 1982 | 87 | ... |
| 6. | ஜோசப் | ... | 1982 | 73 | ... |
| 7. | திலகவதி | ... | 1983 | 56 | ... |
| 8. | எஸ். கணபதி | ... | 1985 | 63 | ... |
| 9. | ஆர்.எஸ். சவானி | ... | 1985 | 50 | ... |
| 10. | ஆர்.வி. சுப்ரமணியன் | ... | 1985 | 107 | ... |
| 11. | வி.கே. ராஜகோபால் | ... | 1985 | 107 | ... |
| 12. | கே. கந்தசாமி | ... | 1985 | 62 | ... |
| | | | 86-87 | 72 | ... |
| 13. | வி.கே. ராஜகோபால் | ... | 1987 | 69 | ... |
| 14. | திலகவதி | ... | 1988 | 75 | ... |
| 15. | கே.ஜி. கோபாலகிருஷ்ணா | ... | 1988 | 95 | ... |
| 16. | கிணேசன் | ... | 1988 | 60 | ... |

ஆனால் அர்ஜுனன் பேசும்போது - இல்லாததைச் சொல்லி - இப்போது சில பேர் வெயிட்டிங் லிஸ்டில் வைக்கப்பட்டிருக் கின்றார்கள். அவர்களுக்குத் தரப்பட்ட சம்பளத்தை எல்லாம் உள்துறை செயலாளரின் சம்பளத்திலும், டி.ஜி.பி. சம்பளத்தி லும் பிடித்துக் கொள்வீர்களா என்று கேட்டார்.

இப்போது யாரும் வெயிட்டிங் லிஸ்டில் வைக்கப்படவில்லை. இப்போது படித்துக் காட்டினேனே - அவர்களுக்குத் தரப்பட்ட சம்பளத்தை எல்லாம் யாரிடமிருந்து பிடித்துக் கொள்வது என்பதை அ.தி.மு.க. வின் எதிர்க்கட்சித் தலைவர் இங்கே யிருந்தால் சொல்லியிருப்பார். இவைகளை எல்லாம் சொல்ல வேண்டுமே என்பதற்காகவோ என்னவோ அவர்கள் எல்லாம் இன்றைக்குப் போய் விட்டார்கள். பரவாயில்லை.

## டிராக்டர், ஸ்கூட்டர்
## எண்களைக் கூறி கார் என்பதா?

இன்னொன்றையும் அர்ஜூனன் சொன்னார். அவருடைய தலைவர் அல்லது தலைவியார் ஹைதராபாத் சென்றதாகவும், அவரைப் பின்பற்றி சி.ஐ.டி.க்கள் சென்றதாகவும் சொல்லி, அதை மெய்ப்பிக்கின்ற வகையிலே - சி.ஐ.டி.க்கள் சென்ற கார்களின் நம்பர்களை எல்லாம் இங்கே சொன்னார். அது பதிவேட்டிலே கூடப் பதிவாகியிருக்கின்றது. 'எங்களுடைய பொதுச் செயலாளர் சொந்த வேலையாக ஹைதராபாத் சென்ற போது சி.ஐ.டி. அதிகாரிகள் டி.டி.ஓ. 3448, டி.டி.எல். 149 என்ற எண் உடைய இரண்டு கார்களிலே பின் தொடர்ந்தார்கள்' என்று கூறினார்.

டி.டி.எல். 149 என்ற எண் உடைய வாகனம் கார் அல்ல, அது ஒரு ஸ்கூட்டர். இது சேலம் பெருமாள் கோவில் தெரு கதவு எண் 12ஏ வீட்டில் வசிக்கும் வரதப் பிள்ளை மகன் சி.வி. சுப்பிரமணியம் என்பவருக்கு உரியது. இன்னொன்று - டி.டி.ஓ. 3448 என்ற எண் உள்ள வாகனம் கார் அல்ல-அது ஒரு டிராக்டர். அது தஞ்சை மாவட்டம், மன்னார்குடி, பாளையங் கோட்டை கிராமம், பன்னீர் செல்வம் மனைவி திருமதி ப. லலிதா என்பவருக்குச் சொந்தமானதாகும்.

இப்படிப்பட்ட ஆதாரங்களை அள்ளி வீசி அவர் நேற்றைக்குப் பேசி இருக்கிறார்.

மதுவிலக்கு, கள்ளச் சாராயம் இவைகளைப் பற்றி நம்முடைய பூவராகன் அவர்கள் வெகு விரிவாகப் பேசியதை நான் படித்துப் பார்த்தேன். நான் அப்போது அவையில் இல்லை. பிறகு படித்துப் பார்த்தேன். யாருடைய பேச்சுக்களும் அலட்சியம் செய்யப்படக் கூடாது என்பதற்காக எல்லோருடைய பேச்சுக்களையும் நான் படித்துப் பார்த்தேன். கள்ளச் சாராயம் இன்றைக்குப் பெருகி ஓடுவதாக அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்காகக் கடும் நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது.

ஆனால் முழுமையாக ஒழிந்துவிட்டது என்று மார்தட்டிக் கொள்ளத் தயாராக இல்லை. அது முழுவதும் ஒழிக்கப்படு வதற்கு எல்லாக் கட்சியினரும் ஒத்துழைக்க வேண்டும். குறிப்பாக,

காவல் துறையினுடைய ஒத்துழைப்பு மிக மிக அதிகமாகத் தேவை. ஏனென்றால், இதிலே அவர்களுக்கே சில இடங்களில் உடன்பாடு இருக்கிறது. அவர்களுக்கே சிலருக்கு, நமக்கெல்லாம் தேர்தல் அலையன்ஸ் இருப்பதைப் போல, அவர்களுக்கு இதிலே அலையன்ஸ் இருக்கிறது என்பதெல்லாம் வெறும் கற்பனைகள் அல்ல, உண்மைகளாக இருக்கிற காரணத்தால் இனிமேல் இந்தக் கள்ளச்சாராயத் தொழிலில் ஈடுபடுகிறவர்களை தண்டிப்பதை விட, அதற்குத் துணை போகிறவர்கள் காவலர்களாக இருந்தாலும், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களுக்கு மாத்திரம் குண்டர் சட்டம் அல்ல, அதற்குத் துணை போகிற காவல் துறை அதிகாரிகளையும் குண்டர் சட்டம் தாக்கும் என்ற அளவிலே அரசு நடவடிக்கைகளை எடுக்கும் என்று நான் மிக உறுதியோடு இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

சென்ற ஆண்டு கவர்னர் உரையில் பத்தி 14-அதிலே ஒன்றைச் சொன்னோம். நீதிமன்றங்களில் மதுவிலக்கு சம்பந்தமாகத் தேங்கிக் கிடக்கும் ஆறு இலட்சத்திற்கும் அதிகமான வழக்குகளில் விரைவில் தீர்வு காண மதுவிலக்குச் சட்டத்தில் சில திருத்தங்கள் கொண்டு வரப்படும் என்று குறிப்பிடப்பட்டது. அதன்படி பிப்ரவரி மாதம் ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்தோம். அதன்படி மதுவிலக்குச் சட்டத்தில் 24-டி என்ற பிரிவு திருத்தப்பட்டது. அந்தச் சூழ்நிலையில் நீதிமன்றம் மூலமாக 1988-ஆம் ஆண்டு முழுவதும் வசூலான தொகை - 1988-இல் நீதிமன்றம் மூலமாக இந்த சாராய வழக்குகளில், மதுவிலக்கு வழக்குகளில் வசூலான தொகை 37 இலட்சத்து 15 ஆயிரத்து 460 ரூபாய். ஆனால் 1989-இல் நவம்பர் மாதம் வரையில் நாம் எடுத்த முயற்சிகளின் காரணமாக, நீதிமன்றத்திலே வழக்குகளை விரைவுபடுத்தி நடத்தியதன் காரணமாக, அபராதமாக வசூலான தொகை 7 கோடியே 2 இலட்சத்து 29 ஆயிரத்து 120 ரூபாய். இதில் 35 இலட்சத்திற்கும் 7 கோடிக்கும் உள்ள வேறுபாட்டை நான் உணர்த்தத் தேவை இல்லை. எனவே, நீதிமன்றங்கள் மூலமாகப் பெரும்பாலான வழக்குகள் விரைவில் பைசல் செய்யப்பட்டன என்பதற்கு இது எடுத்துக்காட்டு.

அதல்லாமல், 1988-ஆம் ஆண்டு இறுதியில் நிலுவையில் இருந்த வழக்குகள் 5 இலட்சத்து 17 ஆயிரத்து 392 வழக்குகள் இருந்தன. இவைகளைச் சட்டத் திருத்தம் கொண்டு வந்தோமே அதன்மூலம் கம்பவுண்டிங் முறையிலே அதாவது முன்முடிவு எடுக்கப்பட்டு, கம்பவுண்ட் செய்து, தீர்க்கப்பட்ட வழக்குகள் அதிலே 2 இலட்சத்து 93 ஆயிரத்து 42. 1989 நவம்பர்

வரையில் போடப்பட்ட வழக்குகள் 4 இலட்சத்து 68 ஆயிரத்து 854. இவைகளும் 1988-ஆம் ஆண்டிலே நிலுவையில் இருந்த 2 இலட்சத்து 24 ஆயிரத்து 350 வழக்குகளும், பெரும்பாலான வழக்குகள் பைசல் செய்யப்பட்டு, அதன்மூலம் 6 கோடியே 98 இலட்சத்து 66 ஆயிரத்து 45 ரூபாய் நவம்பர் மாதம் வரையில் வருவாயாகக் கிடைத்திருக்கிறது. எனவே, கள்ளச் சாராய வழக்குகள் தொடரப்படுகின்றன. அதன்மூலம் 13 கோடி ரூபாய் அபராதமாகவும் வசூலிக்கப்பட்டிருக்கிறது. 13 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டதிலிருந்து கள்ளச்சாராய வழக்குகள் அதிகமாகி இருக்கின்றன, எனவே கள்ளச்சாராயமும் அதிகமாகப் பெருகி யிருக்கிறது அல்லவா என்ற வாதத்தையும் உறுப்பினர்கள் எடுத்து வைக்கக்கூடும். ஆனாலும் அது நம்மையும் மீறிப் பெருகுகிற நேரத்தில் அந்தக் குற்றவாளிகள் பிடிபட்டு, அந்தக் குற்ற வாளிகளைக் கொண்டுபோய் சிறையில் வைத்து, அவர்களுக்குச் சாப்பாடு போடுகிற செலவையும் அரசு செய்து கொண்டிருக் காமல், இந்த காம்பவுண்டிங் முறை மூலமாக வெகுவிரைவில் அந்த அபராதத் தொகை அரசுக்குக் கிட்டுகிற காரியத்திலே ஈடுபட்டிருக்கிறது. கடந்த பட்ஜெட்டிலே சாராய சாம்ராஜ் யத்தைப் பற்றி நான் விரிவாக எடுத்துரைத்து, கடந்த ஆண்டு நான் எடுத்துச் சொன்னேன், 100 கோடி ரூபாய், இந்த ஊழல்களை ஒழிப்பதன் மூலம் நமக்குக் கிடைக்கும் என்று எடுத்துச் சொன்னேன்.

அவரே இங்கே குறிப்பிட்டார். நம்முடைய லத்தீப் போன்ற வர்கள் எல்லாம் சொன்னார்கள். நமக்கு நிதி ஆதாரக் கட்டுப் பாடு தேவை, டிசிப்லின் தேவை என்பதைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள்.

## முறைகேடுகளை அகற்றியதால்
## கூடுதலாக ரூ.200 கோடி வருமானம்!

அந்த வகையில் நாம் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் காரணமாக மதுவிலக்கு அமல்படுத்தப்பட்ட போது, அந்த நடைமுறையிலே உள்ள முறைகேடுகளை எல்லாம் அகற்றிய தால், ஏற்கெனவே 120 கோடி ரூபாய் கிடைத்தது. மேலும் 120 கோடி ரூபாய் நமக்குக் கிடைக்கிறது. மற்ற மாநிலங்களிலே உள்ள விலைக்கு ஏற்ப இங்குள்ள விலையும் உயர்த்தப்பட்ட காரணத்தால் ஒரு 80 கோடி ரூபாய், ஆக 200 கோடி ரூபாயை அதிக வருவாயாக, உபரி வருவாயாகப் பெறக்கூடிய ஒரு நிலைமையை இந்த அரசு ஏற்படுத்தி இருக்கிறது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ரமணி அவர்கள் பேசும்போது மத்திய அரசோடு நாம் வாதாடிப் பல நன்மைகளை இந்த மாநிலத்திற்குப் பெற வேண்டும், ஏற்ற சூழல் இன்றைக்கு அமைந்திருக்கின்றது என்று சொன்னார்கள். அதே கருத்தை முன்வரிசையிலே இன்றைக்கு உள்ள எல்லாத் தலைவர்களும் பேசியிருக்கின்றார்கள்.

ராஜீவ் காந்தி அவர்களின் அரசு சில நேரங்களிலே செயல்படாத அரசாக இருந்தது மாத்திரமல்ல, சில முக்கியமான பிரச்சினைகளிலே மிக மந்தமான அரசாகவும் இருந்தது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டினை நான் இங்கே கூற விரும்புகின்றேன்.

ஒன்பது நபரைக் கொலை செய்த ஜெயப்பிரகாஷ் என்ற நபரைப் பற்றி தமிழ்நாடு முழுவதும், ஏன் இந்தியாவிலே பல மாநிலங்களிலே பரபரப்பாகப் பேசப்படுகின்ற அளவிற்குப் படங்கள் எல்லாம் போடப்பட்டன. அவருக்கு நீதிமன்றத்திலே தூக்குத் தண்டனை முதலிலே விதிக்கப்பட்டது. ஆனால் அவர் சார்பிலே கருணை மனு அனுப்பப்பட்டது. அன்றைக்கிருந்த தமிழக அரசு கருணை மனுவை ஏற்கவில்லை. பின்னர் மத்திய அரசுக்கு, குடியரசுத் தலைவரின் கருணைக்காக அது இங்கிருந்து அனுப்பி வைக்கப்பட்டது. அப்படி அனுப்பி வைக்கப்பட்ட கருணை மனு - குடியரசுத் தலைவருடைய கையெழுத்தை - கருணை வழங்கப்படுகிறது, அல்லது இல்லை என்று குறிப்பெழுதிக் கையெழுத்துப் போட எவ்வளவு நாள் ஆனது என்பதைப் பார்க்கும்போது எவ்வளவு மந்த கதியிலே அன்றைக்கு மத்திய அரசு செயல்பட்டது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

தமிழக அரசிடமிருந்து குடியரசுத் தலைவரின் கருத்தைக் கேட்பதற்காக மத்திய அரசுக்கு 25.10.'85-இல் அனுப்பப்பட்ட அந்தக் கருணை மனு, 7.6.'88 வரையில் குடியரசுத் தலைவருடைய மாளிகைக்கே அனுப்பப்படாமல் மத்திய அரசின் உள்துறை அலுவலகத்திலேயே தூங்கிக் கொண்டிருந்து, கிட்டத்தட்ட மூன்றாண்டுகள் கழித்து, குடியரசுத் தலைவர், தண்டனையை உறுதி செய்து கையெழுத்துப் போட்டபிறகு - ஜெயபிரகாஷின் தந்தை ஒரு ரிட் மனு தாக்கல் செய்து - அதிலே மூன்றாண்டுகள் இருந்துவிட்ட காரணத்தால் 'கொலை செய்யப்படப்போகிறோம் - சாகப் போகிறோம் என்ற மன வேதனையை அவர் அனுபவித்துவிட்டதால் - அந்த மனவேதனையே தூக்கில் போட்டதற்குச் சமம். எனவே அவருக்கு தூக்குத் தண்டனையை மாற்ற வேண்டுமென்று மனு செய்து - நீதிமன்றம் அதனை ஏற்றுக்கொண்டு - அதற்கு ஒரு முன் மாதிரி வழக்கு இருந்ததை

எடுத்துக்காட்டி, ஜெயப்பிரகாஷுக்கு தூக்குத் தண்டனை அளித்ததை மாற்றி ஆயுள் தண்டனை விதிக்கலாம் என்ற அளவிற்கு ஆகியிருக்கின்றது. இது ஒரு தனிப்பட்ட விவகாரம். அந்த வழக்கு சம்பந்தமான கோப்பிலே - நாம் அதனை ஏற்காமல் கால தாமதம் என்ற அடிப்படையில் ஒரு பயங்கரக் குற்றவாளிக்கு மன்னிப்பு தரலாம் என்ற நிலை ஏற்படக்கூடாது என்று கூறி இந்த அரசு மீண்டும் அந்தப் பிரச்சினையிலே அப்பீல் செய்வதாக முடிவெடுத்திருக்கின்றது. தனிப்பட்ட ஒருவருடைய விவகாரத்திலே மத்திய அரசு எவ்வளவு கால தாமதம் செய்தது என்பதற்காக இதனைக் குறிப்பிட்டேன்.

அடுத்து, இதே மாமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட பெண்களுக்குச் சொத்திலே சம பங்கு உண்டு என்று நிறைவேற்றிய அந்த மசோதாகூட, கடந்த கால ஆட்சியிலே பலமுறை நினைவுபடுத்தப்பட்டு - எப்படி மேலவை வேண்டும் என்பது நினைவுபடுத்தப்பட்டு, அதனை அங்கே உள்ளவர்கள் புறக்கணித்தார்களோ அதைவிட அதிகமாக நினைவுபடுத்தப்பட்ட ஒன்று - பெண்களுக்குச் சொத்துரிமை வழங்குகின்ற சட்டம். ஆனால் அதைப்பற்றி எந்தவிதமான அக்கறையும் காட்டப்படவில்லை. நல்லவேளை - தேசிய முன்னணி அரசு வந்தபிறகு, நான் இரண்டு நாட்களுக்கு முன்னால் இங்கே அறிவித்ததைப்போல, அந்த மசோதாவிற்குக் குடியரசுத் தலைவரின் அனுமதியைப் பெற்று, அந்தச் சட்டம் இன்றைக்கு நடைமுறைக்கு வரக்கூடிய ஒரு சூழலைப் பெற்றிருக்கின்றது.

இதெல்லாம் வேண்டுமென்றே மாற்றுக் கட்சிகளின் ஆட்சி நடைபெறுகின்ற - காங்கிரஸ் அல்லாத கட்சிகள் ஆட்சி நடைபெறுகின்ற மாநிலங்களிலே அவர்களுடைய திட்டங்களை, சட்டங்களை நிறைவேற்ற மத்தியிலே உள்ளவர்கள் ஒத்துழைப்புத் தராததை எடுத்துக்காட்டுவதாகும்.

ஆனால் இன்று நிலைமை என்ன? நேற்றைய தினம் பேசிய திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் பழனிசாமிகூட சொன்னார். இன்றைய தினம் ரமணிகூட நினைவுபடுத்தினார். நரிமணத்தில் இப்போது கிடைத்துக் கொண்டிருக்கின்ற எண்ணெய்யைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். இயற்கை வாயுவைப் பற்றியும் சொன்னார்கள். ஏற்கெனவே ஐந்தாறு மாதங்களுக்கு முன்பு அப்போதிருந்த மத்திய அமைச்சரிடம் ஒரு நிகழ்ச்சியிலே சந்தித்தபோது - எரிவாயு சம்பந்தப்பட்ட அந்தப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு, ஒரு பைப் லைன் மேற்கு மண்டலத்திலிருந்து தெற்குப் பகுதிக்குக் கொண்டு

வரவேண்டும் என்றும், அதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டேன். நல்ல யோசனை என்று அவர் சொன்னார். அதற்குப்பிறகு அந்த யோசனையைப் பற்றி யாரும் அங்கே கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இப்போது தேசிய முன்னணி ஆட்சி ஏற்பட்ட பிறகு பலமுறை கேட்டும் நடக்காத காரியத்தைப் பற்றி மத்திய அமைச்சர் எம்.எஸ். குருபாதசாமி அவர்களுக்கு நான் கடிதம் ஒன்று எழுதினேன். அதற்கு அவரிடமிருந்து வந்துள்ள பதிலை நான் படிக்கின்றேன்.

Dear Shri Karunanidhiji,

Please refer to your D.O. letter dated 18.12.89 regarding construction of a gas pipeline to the South from the Western fields of ONGC. SAIL have also been requested to examine the feasibility of construction of a pipeline from the Western fields to the Southern region, from the point of view of utilising this gas for meeting the power deficit in the Southern States. After receipt of the results of SAIL's studies, I shall get back to you.

**M.S. GURUPADASWAMY**

இது எவ்வளவு ஆறுதலான கடிதம்? எவ்வளவு ஆர்வத்தோடு அவசரமாக விரைந்து எழுதப்பட்ட கடிதம் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த பைப் லைன் தென் பகுதிக்கு வருகின்ற நிலைமை ஏற்படுமேயானால் அந்த எரிவாயுவைக் கொண்டு இங்கே இருக்கின்ற எரிவாயுவையும் இணைத்து, பவர் ஜெனரேஷன் செய்ய முடியும். பெட்ரோ கெமிகல் தொழிற் சாலைகளை உருவாக்க முடியும். உரத் தொழிற்சாலைகளை அமைக்க முடியும். இவைகள் எல்லாம் தெற்குப் பகுதியிலே மேலும் தொழில்வளத்தை உருவாக்கக் கூடியவைகளாக அமையும்.

இந்த அளவிலே இன்றைக்கு மாநில அரசுக்குத் துணையாக இருக்கக்கூடிய ஒரு மத்திய அரசு அமைந்திருக்கின்றது. தேசிய முன்னணி அரசு அமைந்திருக்கின்றது. அந்த அரசினுடைய ஒத்துழைப்போடு நாம் நம்முடைய உரிமைகளை அவர்களிடம் கேட்டுப் பெற - தராவிட்டால் போராடிப் பெற்று இந்த மாநிலத்தினுடைய நல்வளத்திற்குத் தொடர்ந்து பாடுபட இந்த அரசோடு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு - மாமன்றத்தின் எல்லா உறுப்பினர்களையும், எல்லாக் கட்சிகளின் தலைவர்களையும் கேட்டுக் கொண்டு, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்தும் எதிர்த்தும் கருத்துக்களைச் சொன்ன அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெளியீடு:

**இயக்குநர்,**
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

தமிழரசு அச்சகம்

1/90

16-2-1990

# தமிழரசு

இதழின்

இலவச

இணைப்பு